# துணைப்பாடம்

## (சிறுகதைகள்)

## மூன்றாம் பகுதி

# 1. சபேசன் காப்பி

**- ராஜாஜி**

சபேசன் காப்பி என்றால் ஒரு காலத்தில் ராஜதானியெல்லாம் பிரசித்தம். வெள்ளைக்காரர்கள் கூட அதைத் தேடி வாங்குவார்கள், நம்மவர்களைப் பற்றியோ சொல்ல வேண்டியதே இல்லை. ''கொட்டை வாங்கி எவ்வளவு ஜாக்கிரதையாக வீட்டிலேயே வறுத்துப்பொடி பண்ணினாலும், டப்பாவுக்குள் போட்டு மூடிய சபேசன் காப்பிப் பொடிக்குச் சமானமாகாது'' என்று மயிலாப்பூர், தியாகராய நகரிலுள்ள எல்லாப் பெரிய மனுஷாள் வீட்டுப் பெண்டுகளும் சொல்லுவார்கள்.

1922 ஆம் வருஷத்தில் சபேசய்யர் காப்பி வியாபாரத்தை ஆரம்பித்தார். இரண்டு வருஷம், கஷ்டமில்லாமல் காலக்ஷேபம் செய்வதே கடினமாக இருந்தது. 1928 ஆம் வருஷம் மார்ச்சு மாதத்தில் சுப்புக்குட்டி சபேசய்யரிடம் குமாஸ்தாவாகச் சேர்ந்தான். அதுமுதல் சபேசன் காப்பிக்கு நல்ல அதிர்ஷடம். ஆறு மாதத்திற்குள் வியாபாரம் மும்மடங்கு ஆயிற்று. அதன்பின் மளமளவென்று ஏறிற்று. இது சபேசய்யருக்கே வியப்பாக இருந்தது. எல்லாம் சுப்புக்குட்டியின் அதிர்ஷடம் என்று, அவனிடத்தில் அவருக்கு அளவு கடந்த அபிமானம். சம்பளம் வருஷத்தில் இரண்டு தடவை உயர்த்தினார். வேண்டாமென்றாலும் அவனுக்கு அளவுக்கு மிஞ்சிச் சௌகரியங்கள் செய்து கொடுத்து வந்தார், சுப்புக்குட்டியின் தங்கைக்கு, செலவு எல்லாம் தாமே செய்து நல்ல இடத்தில் கலியாணம் முடித்து வைத்தார். அவனைத் தம்முடன் ஒரு கூட்டாளி என்றே பாவித்து வந்தார். வெறும் குமாஸ்தாவாக எண்ணவில்லை.



சுப்புக்குட்டியின் தாயார் காப்பிப் பொடி அரைப்பதில் அவனுக்கு ஒரு ரகசியம் சொல்லித் தந்திருந்தாள். அவ்வாறு அரைத்த காப்பிப்பொடியைப் போட்டு இறக்கிய காப்பி மிகு சுவையுடையதாக இருக்கும். சுப்புக்குட்டி சபேசன் கம்பெனியில் குமாஸ்தாவாகச் சோந்த தறுவாயில் ஒருநாள், சபேசய்யர் சுப்புக்குட்டி வீட்டுக் காப்பி சாப்பிட்டார்.

''உங்கள் வீட்டுக் காப்பியைப் போல் நான் எங்கேயும் சாப்பிட்டதே கிடையாது என்றார்.''

''வறுப்பதில் ஏதாவது தனி முறையா அல்லது காப்பிக் கொட்டை உயர்ந்த வகையா? இல்லை, காப்பி வடிப்பதில் சாமர்த்தியம் ஏதேனுமா?'' என்றெல்லாம் சபேசய்யர், சுப்புக்குட்டியின் தாயாரைக் கேட்டு விசாரித்தார். அவள் விவரத்தைச் சொல்லாமல் ''அந்த ரகசியம் சுப்புக்குட்டிக்குத் தெரியும் என்றாள்.''

''இது நம்ப ஆபீசில் காப்பி அரைக்கும் போது செய்ய முடியுமோ?'' என்று கேட்டார். ''ஆகா, செய்யலாம்'' என்றாள் சுப்புக்குட்டியின் தாயார்.

அதன் பிறகு சபேசய்யரின் வேண்டுகோளின்படி ஆலையில் காப்பிப்பொடி அரைக்கும்போது யாருக்கும் தெரியாதபடி சுப்புக்குட்டி போய்ச் செய்யவேண்டியதைச் செய்வான். ரகசியம் சபேசய்யருக்குக் கூடத் தெரியாது. ஒரு சிறு டப்பாவில் தன் வீட்டிலிருந்து ஏதோ கொண்டு வந்து அரைக்கும் கொட்டையில் சேர்க்கிறான் என்பதுமட்டும் தெரியும். அது என்னவென்று அவர் கேட்கக் கூடாது. இது அவர்களுக்குள் ஏற்பாடு.

வியாபாரம் வெகு வேகமாக வளர்ந்தது. கொள்ளை லாபம். சென்னையில் முதல்தர வியாபரிகளுக்குள் சபேசய்யரும் ஒருவராய்க் கருதப்பட்டார். வியாபாரச் சங்கங்களிலும், பெரிய மனிதர்களுடைய கிளப்புகளிலும், சபேசய்யர் ஒரு மெம்பராக எடுக்கப்பட்டார்.

ரகசியத்தை அறிய சில சமயம் சபேசய்யர் பிரயத்தனப் பட்டார். ஆனால், சுப்புக்குட்டியிடம் அவன் தாயார் சபதம்

வாங்கியிருந்தாள். யாருக்கும் சபேசய்யருக்குக் கூடச் சொல்வதில்லை என்று சத்தியம் செய்திருந்தபடியால் அவன் சொல்லவில்லை; சபேசய்யரும் வற்புறுத்தவில்லை.

1936 ஆம் வருஷத்தில் சபேசய்யருக்கு எல்லாச் செலவும் போய் மாதம் இரண்டாயிரம் ரூபாய் வருமானம் கிடைத்து வந்தது. சுப்புக்குட்டிக்கு மாதம் இருநூற்றைம்பது ரூபாய் சம்பளம் சபேசய்யருடைய மோட்டார் வண்டியில் சுப்புக்குட்டி வீட்டுக்குப் போவான். சுப்புக்குட்டியிடம் மிக்க அன்பு பாராட்டி வந்த பழைய நண்பர்களுக்கெல்லாம் இப்போது அவன் மேல் பொறாமை ஆரம்பமாயிற்று. இல்லாத குற்றமெல்லாம் அவனிடம் கண்டார்கள். சபேசய்யருக்கும் சுப்புக்குட்டிக்கும் இடையில் விரோதம் உண்டு பண்ணப் பார்த்தார்கள். ஆனால், அது முடியவில்லை. வரவர அவர்களுக்குள் நம்பிக்கையும் பிரியமும் வளர்ந்து கொண்டே போயின.

இவ்வாறு இரண்டு வருஷம் சென்றது. ஒரு நாள் சபேசய்யரும் மர வியாபாரி ஒருவரும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

“உங்கள் வியாபாரமெல்லாம் நன்றாய்த்தான் நடக்கிறது. ஆனால், உங்கள் மானேஜர் சுப்புகிருஷ்ணய்யர் தனியாக ஒரு காப்பி வியாபாரம் ஆரம்பிக்கப் போகிறா றாமே, அது ஏன்?'' என்றார் மரவியாபாரி. “ அவ்வாறு பிரஸ்தாபம் ஒன்றுமில்லை'' யார் சொன்னார்கள் என்று கேட்டார் சபேசய்யர்.

“அவரே சிலரிடம் பேசியிருக்கிறார்'' என்றார் மரக்கடை ஜெயராமநாடார்.

“அப்படி யொன்றும் காணோமே-இருந்தால் என்னிடம் சொல்லியிருப்பாரே!'' என்றார் சபேசய்யர்.

‘‘இல்லை, நான் சும்மா சொல்லவில்லை. விசாரித்துப் பாருங்கள்'' என்றார் ஜெயராம நாடார்.

பிறகு ஒரு நாள் சுப்புக்குட்டியும் விசுவநாத ராவ் என்று கந்து



வியாபரியும் காப்பி அரைக்கும் யந்திரச் சாமான்களைப் பற்றி விசாரித்துக் கொண்டிருந்ததாக வேறொரு நண்பர் சபேசய்யரிடம் பிரஸ்தாபித்தார். சபேசய்யருக்குச் சந்தேகம் ஊர்ஜிதமாயிற்று. வியாபாரம் இவ்வளவு மும்முரமாக நடந்து வருவதும், தன்னுடைய செல்வாக்கும் அந்தஸ்தும், காப்பிப் பொடியின் ரகசியமும் அவனிடம் தானே இருக்கிறது? எல்லாமே சுப்புக்குட்டியின் கையில் அல்லவா இருக்கிறது? இதற்கு என்ன செய்கிறது என்று சபேசய்யருக்குக் கவலை அதிகரித்தது. வரவர சுப்புக்குட்டியினிடம் ஓர் அர்த்தமற்ற வெறுப்பும் கோபமும் உண்டாகி, வளர்ந்து கொண்டே போயிற்று. நம் வேலைக்காரர்கள் எல்லோரும் சுப்புக்குட்டியைத்தான் எஜமானனாக மதிக்கிறார்கள். தம்மை மதிக்கவில்லை என்று அவருக்குத் தோன்ற ஆரம்பித்தது. குமாஸ்தாவான சுப்புக்குட்டியிடம் எஜமானருக்கு ஒருவிதப் பொறாமை உண்டாயிற்று.

‘‘என்ன சுப்புக்குட்டி, வேலைக்காரர்களுக்கு ஏதாவது சொல்லிக் கொள்ள வேண்டியதாயிருந்தால் என்னிடம் சொல்வதை விட்டு உன்னிடம் ஏன் பிராதுசெய்கிறார்கள்? உன் சிபார்சை நான் ஒப்புக்கொள்ள முடியாது.'' என்றார். ஒரு வேலைக்காரன் விஷயமாக இந்தப் பேச்சு, இப்படியே பல சந்தர்ப்பங்களில் நேரிட்டது.

ஒரு நாள் சுப்புக்குட்டி, “நான் ஒரு மாதம் ஓய்வு எடுத்துக் கொள்ள எண்ணியிருக்கிறேன். அப்புசாமி அய்யர் திருவாரூருக்கு வந்துசில நாள் இருக்கச் சொல்லி வருகிறார். எனக்கு லீவு கொடுக்க வேண்டும்'' என்றான்.

‘‘முடியாது'' என்றார் சபேசய்யர்.

இதென்ன இவ்வளவு நாள் என்னிடம் பிரியமாக இருந்தவர் ஒரு காரணமுமின்றி இவ்வளவு கடினமாகவும் வெறுப்பாகவும் இருக்கிறார் என்று சுப்புக்குட்டிக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஏதோ கெட்ட திசை தன் ஜாதகத்தில் ஏற்பட்டிருக்கிறது என்று நினைத்து, தன் வேலையை மட்டும் வழக்கப்படி செய்து வந்தாலும், மனச் சாந்தியற்றவனாக நாட்களைக் கழித்து வந்தான்.

பிறகு உடம்பில் நோய் கண்டது. மருந்து சாப்பிட்டதில் சொஸ்தமாகவில்லை. கட்டாயம் இரண்டு மாதம் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வைத்தியர்கள் சொன்னார்கள்.

சபேசய்யரைக் கேட்டதற்குக் காப்பிப் பொடியில் செய்து வரும் ரகசியம் சொன்னாலொழிய லீவு கொடுக்க முடியாது என்று கட்டிப்பாய்ச் சொல்லி விட்டார்.

“ராஜிநாமா செய்து விடு. ஏதோ நம்ம அதிர்ஷடம் இவ்வளவு நாள் நடந்தது. நல்ல நாள் வந்த பிறகு தாமே வியாபாரம் சின்னதாக ஆராம்பிக்கலாம். தெய்வம் விட்டபடி ஆகட்டும்.'' என்று தாயார் பொடியின் ரகசியத்தைச் சபேசய்யருக்குச் சொல்ல வேண்டாம் என்று கண்டிப்பாய்த் தடுத்துவிட்டாள். சுப்புக்குட்டியின் ராஜிநாமாவைச் சபேசய்யரும் அங்கீகரித்து. அவனை வேலையிருந்தது நீக்கி விட்டார்.

கொஞ்ச நாள் வரையில் சபேசய்யரின் வியாபாரம் இதனால் குறையவில்லை. டப்பாவின்மேல் பதியப்பட்ட நடராஜர் படத்தின் கௌரவமும், காப்பிக்கொட்டையின் இயற்கைக் குணமும், பழைய பெயரும் சேர்ந்து வியாபாரத்தை தாங்கியே வந்தது.

‘‘காப்பி என்ன கொஞ்சம் மட்டம் இன்னிக்கு?'' என்று யாரேனும் ஒருவர் சொல்லுவார்.

‘‘ஏதோ வடிகட்டும் துணியில் பிசகு, அல்லது டப்பா திறந்து வைத்து வாசனை போய்விட்டிருக்கலாம். அதே சபேசன் காப்பிதான்'' என்று வீட்டில் சொல்லுவார்கள்.

ஒரு மாதம் இரண்டு மாதமானபின், ‘‘வேண்டுமென்று குமாஸ்தா சுப்புகிருஷ்ணையர்தன் முதலாளிக்கு விரோதமாகத் திண்ணைப் பிரசாரம்செய்து வருகிறார். அவர் வேலையி-ருந்து நீக்கப்பட்டதனால் காப்பிப்பொடி கெட்டுவிடுமா?'' என்று சபேசய்யருடைய நண்பர்கள் பிரசாரம் செய்து வந்தார்கள்.

சிலர் வீட்டிலேயே கொட்டை வறுத்துப் பொடி செய்யவும் ஆரம்பித்து, என்னவானாலும் வீட்டில் வறுத்த மாதிரி



இருக்குமா? என்று சொல்லத் தொடங்கினார்கள். மொத்தத்தில் சுப்புக்குட்டி வேலையிலிருந்து நீங்கிய ஐந்தாறு மாதங்களுக்குள் சபேசய்யர் வியாபாரம் குறைந்து விட்டது.

சுப்புக்குடடியின் நண்பர் விசுவதாதராவ் சுப்புக் குட்டியைத் தன்கூடச் சேரச் சொன்னார். சேர்ந்து வியாபாரத்தில் பாதி லாபம் சுப்புக் குட்டி எடுத்துக் கொள்ளலாம். எல்லாச் செலவும் தன் பொறுப்பு என்று சொன்னார். சபேசய்யரே தன்னைத் திரும்பக் கூப்பிடுவார் என்று ஓரிரண்டு மாதம் சுப்புக்குட்டி காத்திருந்தான். பிறகு விசுவநாதராவின் ஏற்பாட்டை ஒப்புக்கொண்டு வேலை துவக்கினான்.

சாதுவாயிருந்த சுப்புக்குட்டிக்கு இப்பொழுது ஒரு புது ஆத்திரம் பிறந்தது. எப்படியாவது சபேசய்யருக்குப் புத்தி கற்பிக்க வேண்டுமென்ற எண்ணம் சுப்புக்குட்டியின் மனத்தைப் பிடித்துக் கொண்டது. சபேசன் காப்பிக்குப் போட்டியாக, ‘நடேசன் காப்பி’ என்று எதுகையாகப் பெயரிட்டு, ரகசியக் கலப்பை ஒன்றுக்கு ஒன்றைரையாகக் கலந்து, அதே நடராஜர் படத்தின் இடது காலை வலது காலாக்கி விசுவநாதராவின் கம்பெனியின் காப்பிப்பொடி உண்டாக்கப்பட்டது.

சுறுசுறுப்பான ஏஜெண்டுகள் சேர்ந்தார்கள். வியாபாரம் வேகமாக முன்னேறிற்று. விசுவநாதராவும் ஏராளமாகச் செய்து வந்தார். அவர் சுப்புக்குட்டிக்கு உற்சாகம் ஊட்டி, சபேசய்யர் பேரில் அவனுக்குள் கோபம் தணியாமலிருக்க, எல்லாவிதத்திலும் வேலை செய்து வந்தார்.

பிறகு சபேசய்யர் ஹைக்கோர்ட்டில் வழக்குத் தொடுத்தார். டப்பாக்களின் வடிவம், பெயர், படம் எல்லாம் நம் காப்பிப் பொடி டப்பாக்களின் உருவமே. இதனால் ஜனங்கள் ஏமாந்து தன் வியாபாரம் கெட்டு விட்டது என்று தடை உத்தரவுக்கும் நஷ்ட ஈடுக்கும், ஹைக்கோர்ட்டில் வழக்கு ஒரு வருஷம் நடந்தது. முடிவில் சபேசய்யர் ஜெயித்தார். கோர்ட்டில் தீர்ப்புக் கொடுத்த தினம் சபேசய்யருக்குக் கடுஞ்சுரம். தீர்ப்பைப்பற்றிச் சமாசாரம் தெரிந்த சந்தோஷத்தில், படுத்திருந்தவர் எழுந்து மோட்டார் வண்டியில் ஏறி, ஓட்டுகிறவன் அப்போது

இருக்கவில்லை, தாமே வக்கீல் வீட்டுக்கு ஓட்டிக் கொண்டு போனார். ஜப்தி நடவடிக்கைகளை உடனே ஆரம்பிக்கச் செய்தார்'. சிதம்பரம் கோயிலில் பெரிய அபிஷேகம் நடக்கவும் ஏற்பாடு செய்தார்.

சுப்புக்குட்டியின் தாயார், உலகமே கவிழத்து விட்டதாகத் துயரக்கடலில் ஆழ்ந்தாள்.'' பகவனே, நீதான் இந்த சபேசய்யரைக் கொண்டு போகவேண்டும். என் மகனைக் கெடுத்த அவனை நீதான் பார்த்துக்கொள்ள வேண்டும், ஈசனே!'' என்று தன் இஷ்ட தேவதையை வேண்டிக்கொண்டாள்.

வேண்டிக் கொண்டபடியே தீர்ப்பு ஆன எட்டாவது நாள் சபேசய்யர், டாக்டர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக மாரடைத்து இறந்துபோனார்.சிதம்பரத்தில் அபிஷேகம் நடக்கவில்லை.

'ஹைக் கோர்ட்டுத் தீர்ப்பின் உயிர் சபேசய்யர் உயிருடன் அதிர்ந்து போயிற்று. விசவநாதராவ் கம்பெனியார் தம்பொடியை எவ்விதக் குந்தகமுமின்றி இனி விற்கலாம்' என்று விசுவநாதராவின் வக்கீல்கள் வியாபாரச் சட்டத்தை விளக்கிச் சொன்னார்கள். தவிர டப்பாவின் மேலுள்ள நடராஜர் படத்தை காளிங்க மர்த்தனமாக மாற்றிவிட்டால் ஆட்சேபனை முற்றும் தீர்ந்துவிடும் என்று வக்கீல்கள் சொன்னார்கள்.

இதைக்கேட்டு ''ஐயோ வழக்கும் என் பக்கம் தீர்ப்பானபின்னும் வீணாயிற்றே'' என்று அலறிற்று சபேசய்யரின் ஆவி.

"அலறிப் பயனில்லை மைந்தா'' என்றது திருமூலர் குரல்.

அடப்பண்ணி வைத்தார், அடிசிலை உண்டார்;
மடக்கொடி யாரொடு மத்தணம் கொண்டார்
இடப்பக்க மேஇறை நொந்ததே என்றார்,
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே.

வக்கீல்கள் சொன்ன அபிப்பிராயம் கேட்ட விசுவநாத ராவுக்கும் சுப்புக்குட்டிக்கும் அளவுகடந்த ஆனந்தம் உண்டாயிற்று. உலகத்தையே மறுபடியும் ஜெயித்ததாக மகிழ்ச்சி



அடைந்தார்கள். ஆனால், காப்பிப்பொடி ரகசியம் எப்படியோ வெளியாய் விட்டது.

ஊரெல்லாம் "இந்தச் சபேசன் காப்பிப் பொடி சீக்காய்ப் பொடி கலப்பாமே?'' என்று பேச ஆரம்பித்தார்கள். "ஒரு டப்பாவில் கால் பங்கு சீக்காய்ப்பொடி யாமே'' என்று கொல்லிக் கொண்டார்கள். பிறகு, "சபேசன் காப்பி" "நடேசன் காப்பி" இரண்டுமே ஜனங்களுக்குப் பிடிக்கவில்லை. டப்பாப் பொடி போட்டுச் செய்த காப்பியைக் குடித்தவர்கள் தேசத்தில் பல வித அசௌகரியங்கள் காண ஆரமபித்தன. சிலருக்கு வயிற்றுச் சிக்கல் உண்டாயிற்று. சிலர் பேதியாயிற்று என்றார்கள். சிலர் குடித்தவுடன் வாந்தி கூட எடுத்துவிட்டார்கள். இதன் விளைவாகப் பெரிய மனிதர்கள் எல்லோரும் வீட்டிலேயே கொட்டை வறுத்துப் பொடி பண்ண ஆரம்பித்து விட்டார்கள். உண்மையில், சுப்புக்குட்டி சேர்த்துவந்தது ஒரு டப்பா காப்பிப் பொடிக்கு ஒரு சிறு தேக்கரண்டி சீக்காய்ப் பொடிதான். இவ்வளவு நாள் நன்றாயிருந்ததென்று குடித்தவர்களுக்கு இப்போது ஏனோ அதைத் தாங்கமுடியவில்லை. மூளையில் உண்டாகும் எண்ணங்களுக்கு அபார சக்தி உண்டு. இதையும் செய்யும்; இதற்கு மேலேயும் செய்யும்!

**பயிற்சி**

கீழ்காணும் தலைப்புகளில் நாற்பத்தைந்து வரிகளுக்கு மிகாமல் கட்டுரை எழுதுக.

*1. சபேசன் காப்பியின் வளர்ச்சி இரகசியம்.*

*2. சுப்புக்குட்டி விலகுவதற்கான சூழல்.*

*3. நடேசன் காப்பி வளர்ச்சியும் வீழ்ச்சியும்.*

# 2. தாய்ப்பசு

**- அகிலன்**

பட்டணத்துப் பால்காரன் மாடசாமியின் வீட்டு பசுமாடு ஒரு காளைக் கன்றுக்குத் தாயாகி இருந்தது. பசுவுக்கு இது இரண்டாவது ஈற்று. முதலில் பிறந்த கிடாரிக் கன்று வளர்ந்து பெரிதாகி எங்கோ கைமாறிப் போய்விட்டது. இப்போது இது இரண்டாவது குழந்தை; ஆண்குழந்தை அதுஅங்குமிங்கும் துள்ளிக் குதித்து ஆனந்தமாக விளையாடிக் கொண்டிருந்தது.

தாய்ப்பசுவுக்குப் பெருமை தாங்கவில்லை. மடி நிறையப் பால் சுரந்திருந்தும்கூட, அதைக் குடிக்காமல், இப்படி முட்டி மோதிக்கொண்டு எந்தப் பிள்ளையாவது விளையாடித் திரியுமா?

சீம்பாலைக் கறந்து விற்க முடியாது என்பதால் மாடசாமியும் கன்றுக் குட்டியைப் பிடித்துக் கட்டி வைக்கவில்லை. குடித்தால் குடித்துவிட்டுப் போகட்டுமே என்கிற தாராளம்.

கன்றுக்குட்டிகோ நினைத்தபோதெலலாம் குடித்துக் கொள்ளலாமே என்ற ஒரு அலட்சியம்.

அதற்கு ஒரு தோழனும் கிடைத்தவிட்டான்; மாடசாமியின் மகன் குமரன். முதலாளியின் மகனும் தன்மகனும் ஒன்றாய்க் குலவுவதைக் கண்ட தாய்ப்பசு, பெருமையோடு அதைத் தன் துணைவனுக்குச் சுட்டிக் காட்டுவதற்கு அடுத்த வீட்டுப் பக்கம் திரும்பியது.

அடுத்த வீட்டு காளைதான் அந்தப் பசுவுக்குத் துணை; அதன் குழந்தைகளின் தகப்பன்.

அந்தச் செவலைக் காளையும் அப்போது துள்ளிக் குதிக்கும் தன் கன்றுக்குட்டியைத்தான் வேடிக்கை பார்த்துக்



கொண்டிருந்தது. “ பார்த்தாயா உன் மகனை, உன்னைப் போலவே பிறந்திருக்கிறான்!” என்று பசு தன் கண்களால் பேசிய பேச்சை அது புரிந்து கொள்ளாமல் இல்லை.

காளைக்கன்று ஓடியாடித் திரிந்து விட்டுத் தன் தாயின் அருகில் வந்து நின்றது. அதன் தோழனான குமரனும் கன்றுக்குட்டியின் கழுத்தைக் கட்டிக்கொண்டு பசுவின் அருகில் வந்தான். பசு இருவரையும் மாறி மாறிப்பார்த்தது. இரண்டு குழந்தைகளுமே தன் குழந்தைகள் என்பது போல் நாக்கால் குமரனையும் கன்றுக் குட்டியையும் மாறி மாறித்தடவிக் கொடுத்தது.

ஒரு வகையில் பார்க்கப்போனால் குமரனும் தாய்ப் பசுவின் குழந்தைதான். மாடசாமியின் மனைவி அவனைப் பெற்றுவிட்டாளே தவிர, அவனிடம் பிள்ளையை வளர்ப்பதற்குப் பால் இல்லை. பசுவின் பால்தான் இப்போது அவனுடைய தேகத்தில் ஓடும் இரத்தம்.

இரண்டு மூன்று நாட்கள் சென்றன.

காளைக் கன்றுக்குட்டிக்குக் கழுத்துச் சங்கிலியோடு வாய்ப்பூட்டான கூடையும் கிடைத்தது. நினைத்த நேரத்தில் பால் குடிக்க முடியவில்லை.

பால் கறக்கும் நேரத்தில் மட்டும் கன்றுக்குட்டியை அவிழ்த்துவிடும் மாடசாமி சரியாகப் பால் கரந்து அதன் வாய்க்கு வரும் நேரத்தில் அதை இழுத்துப் பிடித்துக் கட்டி விட்டுக் கறக்கத் தொடங்கிவிடுவான். அவன் கறந்து முடித்துவிட்டு அவிழ்த்து விடும்போதோ மடியில் ஒரு சொட்டுப்பால் கூடமீதமிருக்காது.

கன்றுக் குட்டி முட்டிப் பார்க்கும்; மோதிப்பார்க்கும் கதறிப் பார்க்கும். இந்தத் துடிப்பைக் காணும் அடுத்த வீட்டுக் காளையோ தன் அடித் தொண்டையி-ருந்து குரல் எழுப்பும்; குறுக்கே நிற்கும் சுவரில் தன் கொம்புகளை அது மோதுவதும் உண்டு.

தாய்ப்பசுவுக்கோ இந்த வேதனைகளைத் தாங்கவே முடிவதில்லை. அதனால் என்ன செய்யமுடியும்?

கன்றுக் குட்டியின் கன்னங்கரிய பெருவிழிகள் இரண்டும் ஒளி இழந்து வந்தன. அதனால் துள்ளவும் முடியவில்லை; குதிக்கவும் முடியவில்லை. தளதளவென்று சதைப் பிடிப்போடு இருக்கவேண்டிய மேனியில் எலும்புக் கூடு புறப்படத்தொடங்கியது.

கன்று தாயை ஏக்கத்தோடு பார்க்கும்; தாய் ஏக்கத்தோடு கன்றைப் பார்க்கும். இரண்டையையும் சேர்த்துப் பார்க்கும் அடுத்த வீட்டுக் காளையோ, மூச்சுவிடுவதற்குப் பதிலாக நெருப்புக் கனலைக் கக்கும்.

இந்தச் சமயத்தில்தான் ஒருநாள் மாடசாமி வழியில் போய்க் கொண்டிருந்த மற்றொரு பால்காரனைக் கூப்பிட்டு அவனோடு ஏதோ பேச்சுக் கொடுத்தான். அந்தப் பால்காரனின் தோளிலும் ஒரு கன்றுக்குட்டி இருந்தது. ஆனால் அது உயிரில்லாத கன்றுகுட்டி. தோலை உரித்து உள்ளே வைக்கோலைத் திணித்து, ஏதோ குச்சிகளை வைத்துக் கட்டி சோளக் கொல்லைபொம்மை போல் ஒரு உருவத்தை வைத்துக்கொண்டிருந்தான் அவன்.

''மாடசாமி! கிடாரிக் கண்ணுக்குட்டியா இருந்தாலும் பரவாயில்லை. வளர்த்தாலும் நாளைக்குப் பால் கொடுக்கும். நல்ல விலைக்கு யாரும் கேட்டாலும் கொடுத்திடலாம். இதை வச்சுக்கிட்டு என்ன செய்யப் போறே?'' என்ன செய்யறதுன்னுதான் எனக்கும் புரியலே. ஒரு நாளைக்கு இதுவே ஒரு படிப்பாலைக் குடிச்சிடும் போலே இருக்கு!''

மாடசாமியின் பேச்சைத் துளிகூட நம்பாத அந்தப் பால்காரன் கலகலவென்று சிரித்தான். “செய் செய் நான் எதைச் செய்தேனோ அதைத்தான் நீயும் செய்துகிட்டுவர்றே! துணிஞ்சு செய்! இன்னும் ஒரு வாரம் இப்படியே செய்தீன்னா தன்னாலே எல்லாம் சரியாப் போகும்!''

சொல்லிவிட்டுச் சிரித்துக் கொண்டே அவன் போய் விட்டான். மனிதர்களையும் சரி, மிருகங்களையும் சரி, வயிற்றில் அடித்துப் பட்டினிபோட்டு அணுஅணுவாகக் கொன்றால்,



அதைத் தடுப்பதற்கு எந்தச் சட்டமுமில்லை’ என்று அவன் மறைமுகமாக உபதேசம் செய்துவிட்டுக் கிளம்பி விட்டான்.

ஒரு வாரம் கூடத் தாங்கவில்லை. ஒரு நாள் காலையில் கன்றுக் குட்டியின் முகத்தில் ஈக்கள் மொய்த்தன. அதை எங்கோயோ இழுத்துக் கொண்டு போய்விட்டான் மாடசாமி. சில தினங்களுக்குள்ளாகவே தாய்ப்பசுவுக்கு முன்னால் ஒரு வைக்கோல் அடைத்த கன்றுக் குட்டியைக் கொண்டு வந்து நிறுத்தினான் அந்தப் பால்காரன்.

பசுவின் மடியும் பால் சுரந்தது; கண்களில் நீரும் வழிந்தது; அது கதறிய கதறலுக்கு, சுவருக்கு அப்பால் நின்ற காளைமாடும் எதிரொலி கொடுத்தது.

தைப்பொங்கல் வந்தது. மனிதர்கள் சாப்பிட்ட மறுநாள் மாட்டுக்காகவும் பொங்கல் வைத்தார்கள்.

அடுத்த வீட்டுக் காளைக்கு அதன் சொந்தக்காரன் கொம்பு சீவிவிட்டு, அலங்காரங்கள் செய்து வைத்து, அதைத் தட்டிக் கொடுத்து ஊர் சுற்ற அனுப்பி வைத்தான். கிராமத்தில் அது இருந்தபோது மஞ்சுவிரட்டில் கலந்து கொண்டு ஊரையே கதி கலக்கிய காளை. பட்டணத்திற்கு வந்த பிறகு அப்படியெல்லாம் ஒன்றும் நடக்கவில்லை. பார வண்டி இழுப்பதோடு சரி.

அந்தக் காளைமாட்டுக்கு மஞ்சு விரட்டு நினைவு வந்து விட்டது. அந்த நினைவோடு சுவருக்கப்பால் நின்ற பசுவை எட்டிப்பார்த்தது. பசு தனக்கெதிரில் வைத்த பொங்கலை முதலில் முகர்ந்து பார்த்துக் கண்ணீர் வடித்தது; பிறகு தன் கொம்புகளால் அந்தப் பாத்திரத்தையே மோதிக் கீழே உருட்டி விட்டது.

மாடசாமிக்கு ஒன்றும் புரியவில்லை அருகில் நின்ற அவனுடைய மகனுக்கும் ஒன்றும் புரியவில்லை. மாடசாமி பசுவின் கழுத்தில் அன்போடு தட்டிக்கொடுத்துப் பார்த்தான். அதன் முகத்தில் மெதுவாகத் தட்டிக் கொடுத்தான். மறுபடியும்

சாப்பாட்டுப் பாத்திரத்தை எடுத்து அதன் அருகில் கொண்டு வந்தான்.

இந்த வேளைகளுக்கிடையில் அவனுடைய மகன் குமரன் சற்று விலகிப் போய் விளையாடியதை அவன் கவனிக்கவில்லை.

திடீரென்று ஏதோ ஒரு பரப்பரப்பான சத்தம் கேட்டது. நாலுகால் பாய்ச்சலில் தெருவே அதிரும் ஓசையுடன் அடுத்த வீட்டுக் காளை அங்கே வந்துகொண்டிருந்தது. சீவி விட்ட கொம்புகள் மின்னல் கீற்றுகளைப்போல் ஒளிர்ந்தன. கண்களில் நெருப்புப் பொறிகள் பறந்தன.

தரையைக் குத்திக் கிளறி ஒவ்வொரு கொம்பிலும் ஒவ்வொரு பிடி மண்ணைச் சுமந்துகொண்டு, அது அடுத்த பாய்ச்சலுக்கு மாடசாமியின் மகன் குமாரனைக் குறி வைத்தது.

மாடசாமி வெடவெடத்துப் போனான். மகனைக் காப்பாற்றப் போனால் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளமுடியாது என்ற பயம் வந்துவிட்டது அவனுக்கு. குலை நடுக்கத்தில் ஏதோதோ உளறிக்கூக்குரலிட்டான்.

நொடிப்பொழுதில் என்னென்னவோ நடந்து விட்டது.

தாய்ப்பசு முளைக் கயிற்றை அறுத்துக்கொண்டு, நாலு கால் பாய்ச்சலில் போய்க் குமரனுக்கும் காளை மாட்டுக்கும் இடையில் நின்றது. காளைமாட்டின் கொம்புகள் அதன் கழுத்தில் பாய்ந்தன. குறுக்கே விழுந்த பசுவைக் கண்டவுடன் காளையின் சீற்றம் பசுவின் பக்கம் திரும்பியது. அது அலறிய அலறலில் ''கொலைக்குக் கொலை! பழிக்குப் பழி'' என்ற ஆவேசம் குமுறியது.

தாய்ப்பசுவும் பதிலுக்கு அதைப் பார்த்துக் கதறியது. "சீ! நீ என்ன,மனிதனைப் போல் கேவலமாய் நடந்து கொள்கிறாய்? குமரனும் என்பால் குடித்து வளர்ந்தவன்!.... உனக்கு ஏன் இவ்வளவு வெறி வந்துவிட்டது?'' என்ற ஆத்திரத்தோடு கதறியது.



'மனித'னான மாடசாமிக்கு எதுவுமே புரியவில்லை! மாடுகள் புரிந்துகொண்டு கண்ணீர் வடித்தன.

**பயிற்சி**

கீழ்க்காணும் தலைப்புகளில் நாற்பத்தைந்து வரிகளுக்கு மிகாமல் கட்டுரை எழுதுக.

1. கன்றுக்குட்டியின் அழகும் அதன் முடிவும்.
2. பசுவின் செயலும் கதை உணர்த்தும் நீதியும்.

# 3. சத்தியமா!

- தி. ஜானகிராமன்

“இது ஏதுடா காலண்டர்?”

“நான்தாண்டா வாங்கிண்டு வந்தேன்... மண்ணெண்ணெய்க் கடை நாயக்கர் கிட்டேருந்து.”

“ரொம்ப நன்னாருக்குடா. என்ன விலைடா இது?”

‘‘விலைக்குக் கொடுக்கமாட்டா இந்தக் காலண்டரை, தெரிஞ்சவாளுக்கு மாத்திரம் இனாமாகக் கொடுப்பா.”

“உங்கப்பாவுக்குத் தெரியுமா அவரை?“

‘‘எங்கப்பாவுக்குத் தெரிஞ்சிருந்தா ஜனவரி மாசமே வாங்கியிருக்க மாட்டாரா?” நான்தான் அந்தக் கடை வாசல்லே நின்னுண்டு தினமும் பார்த்துண்டேயிருப்பேன். அந்தக் கிருஷணர் சிரித்த மூஞ்சியா புல்லாங்குழல் வாசிக்கிறார்பாரு; காது ரெண்டையும் தூக்கிண்டு அந்தப் பசுங்கன்னுக்குட்டி அதைக் கேட்டுண்டு நிக்கிதுபார், எவ்வளவு அழகாயிருக்கு பாத்தியா! நித்தியம் பள்ளிக் கூடத்திலேருந்து வரப்போதெல்லாம் அதைப் பாத்துண்டே நின்னிண்டிருப்பேன். அங்கே ஒரு கணக்குப்பிள்ளை இருக்கு பாரு. ஒல்லியா, குடுமி வச்சிண்டு, உர்ருன்னு மூஞ்சியை வச்சிண்டு, ஓணான் மாதிரி! ஜூன் மாதம் பள்ளிக்கூடம் திறந்து உடனே ‘மாமா மாமா, அந்தக் காலண்டரை எனக்குத் தரேளா?’ன்னு கேட்டேன். அது ‘பத்து ரூபா’ டா விலை காதிலே பென்சிலை வச்சிண்டு, மூக்கு நுனியிலே கண்ணாடியை நழுவி விழுந்துடறாப்போலப் போட்டுண்டு நிமிந்து பாத்துச் சொல்லித்து, ஒரு ரூபா தரேன்னேன். மாட்டேன் னுடுத்து. தினமும் கேட்டுண்டே இருந்தேன்.



அதெல்லாம் கொடுக்கறத்துக்கு இல்லே. கம்பெனிலேயிருந்து ஒண்ணே ஒண்ணுத்தான் அனுப்பிச்சிருக்கா, கடையிலே வச்சுக் கணும்னு அதனாலே அதைக் கொடுக்கப்படாது. கொடுத்த கம்பெனிக்காரன் கோச்சுக்குவான்னு சொல்லிடுத்து. நான் அப்புறம் கேக்கவே இல்லெ. ஆனா, தினமும் பார்த்துண்டே ரொம்ப நாழி நிப்பேன். நேத்திக்கு என்ன ஆச்சு தெரியுமா? முதலாளி இருக்காரு பாரு. குப்புசாமி நாயக்கர், நாமம் போட்டுண்டு அம்மை வடுமூஞ்சியா, வெத்திலை போட்டுண்டே இருப்பாரே, வைக்கடுக்கன் போட்டுண்டு?”

“குண்டா!”

“ஆமாம், அவரே நேத்திக்குச் சாயங்காலம் உக்காந்திருந்தார். நான் பாத்துண்டே நின்னிண்டிருந்தேன். அவர் ரொம்ப நல்லவர்டா! அவர் என்ன செஞ்சார் தெரியுமா? ஏய் தம்பி!” ன்னு கூப்பிட்டார். கிட்டப் போனேன். நீ யாரு?’ன்னார் ‘ஸப் ரிஜிஸ்தர் கே. ஓய் சுந்தரம் பிள்ளை’ன்னேன். எத்தனாவது படிக்கிறே?ன்னார்? ‘பஸ்ட் பாரம்’ ன்னு சொன்னேன். ‘எதுக்குகாக வெறுமனே வெறுமனே இங்கே வந்து நிக்கறேன்னார்?’ அந்தக் காலண்டரைப் பாக்கறதுக்காக நிக்கறேன்னேன். அது உனக்கு வேணுமா? ன்னு கேட்டார். அவர் ‘ஒன்னே ஒண்ணுதான் கம்பெனியிலேர்ந்து அனுப்பிச்சாளமே! அதைக் கொடுத்தாக் கோச்சுப்பாளாமேன்னேன். ‘யார் சொன்னா அப்படி உனக்கு?ன்னு கேட்டார். ‘‘அந்த குமாஸ்தா மாமா சொன்னார்‘னு சொன்னேன். உடனே அவர் என்ன பண்ணினார் தெரியுமா? ‘கணக்குப்பிள்ளே!’ கூப்பிட்டார். ‘ஏன்?’னு அது மூக்குக் கண்ணாடியை மூக்கு நுனியிலே வச்சிண்டு நிமிர்ந்து பாத்துது. ‘ஒரு கார்டை எடுத்து இந்தக் காலண்டரைக் கொடுத்துட்றதுக்கு உத்தரவு போடணும்னு இன்னிக்கே கம்பெனிக்கு எழுதிப்போடுங்க. உடனே அர்ஜென்டா ஆர்டர் போடச் சொல்லணும் தெரியுமா? என்று நாய்க்கர் சொன்னார். அவரே சொல்லிப்பிட்டார். என்னசெய்வது? அது சரீன்னுடுத்து.

“அந்தக் காலண்டரை எடுத்து இப்படிக்கொடுங்க” ன்னார்

நாயக்கர். அது எடுத்துக் கொடுத்தது. அவர் கையிலே அதை வாங்கி. 'தம்பி, உனக்காக ஸ்பெஷலா ஆர்டர் போட்டுடச் சொல்றேன். இந்தா எடுத்துக்கிட்டுப் போ. ஜாக்கிரதையா வச்சுக்க'ன்னு சொன்னார், சரி மாமா'ன்னு நான் எடுத்துக்கிட்டு வந்துட்டேன். எவ்வளவு நல்லவர் பாத்தயா? இன்னொருத்தர்னாக் கொடுப்பாளா? எனக்காக அர்ஜென்டா ஆர்டர் வாங்கிக்கிறேன்னு சொன்னார்.''

"ஆர்டர் வராட்டா?''

"வந்திடும், இல்லாட்டா முன்னாடியே கொடுப்பாரா?'' இது எவ்வளவு அழகா இருக்கு பாருடா! இந்த உள்ளூ இப்ப என்ன ஜோரா இருக்கு பாத்தியா! அந்தக் கிருஷ்ணர் உடம்பைப் பாத்தியா, பளபள பளபளன்னு! தலையிலே பார், மயில்தோகை! நெஜம் மயில்தோகை மாதிரி இல்லே! இதைப் பார்த்துக்கிண்டே நிக்கணும் போல இருக்குடா எனக்கு! சாப்பிடப்படாது; பள்ளிக் கூடம் போகப்படாது; தூங்கப்படாது; ராத்திரிகூட லைட்டைப் போட்டுண்டு இதைப் பாத்துக்கொண்டே நிக்கணும்.''

''ஏய் மணி ஒன்பது அடிக்கிறதுடா. காப்பி எழுதவே இல்லியே!''

"ஆமாண்டா ஐயையோ... கிடுகிடுன்னு எழுதணும்.''

''இன்னிக்கு எழுத்து நன்னாவே இல்லேடா. அவசர அவசரமா எழுதினா இப்படித்தான். நீ படம் படம்னு காலண்டரைப் பார்த்துண்டே நின்னுட்டே; சரி, நான் போய்ட்டு வரட்டுமா?''

"சரி''

"போய் குளிக்கிறத்துக்குக் கூட நாழி இல்லை.

"ஆமாம்டா, சட்டுனு போ.''

"ஏய் ரமணா!"

"என்ன?''



"நீ செய்வியா?''

"நான் ஒண்ணு சொல்றேன்; அது மாதிரி நீ செய்யறியா?'' " என்ன''

"என்னன்னு சொல்லேன்''

"நீ செய்வேன்னு சொல்லு.''

"என்னன்னு சொன்னாத்தானேடா தெரியும்.''

"நீ செய்வியா, மாட்டியா?''

"போடா''

"அப்பன்னா நான் போறேன், போ.''

''ஆமாண்டா, நீ உடனே கோச்சுக்கறே, என்ன செய்யணும்னு சொல்லேன்.''

"செய்வேன்னு சொல்லு''

"சரிடா, செய்யறேன்.''

"நிச்சயமாச் செய்யறேன்னு சொல்லு''

"நிச்சயமாச் செய்யறேன்.''

"சத்யமாச் செய்யறேன்னு சொல்லு''

"சத்யமாச் செய்யறேன்.''

''என் உள்ளங்கையிலே அடிச்சு மூணு தடவை சாமி சாட்சியா, சத்யமாச்செய்யறேன்னு சொல்லு''

''சாமி சாட்சி சத்யமாச் செய்யறேன். சத்யமாச் செய்யறேன், சத்யமாச் செய்யறேன். போதுமா?''

"அப்புறம் மாட்டேன்னு சொல்லப்படாது.''

"இல்லெ''

"சொல்லட்டுமா?''

“சொல்வேன்.”

“அந்தக் காலண்டரை எனக்குக் கொடுத்துடு.”

“இதையா, இந்தக் காலண்டரையா!”

“ஆமாம்”

நேத்திக்கு ராத்திரி தானேடா வாங்கிண்டு வந்தேன் இன்னொரு காலண்டர் தரேனே. இதைவிட நன்னா இருக்கும்.”

“எனக்கு இதுதான் வேணும்.”

“என்னடா நீ?”

“என்னமோ சத்யமாக் கொடுக்கறேன்னு சாமி சாட்சியாச் சொன்னியே.

“அதுக்கா இதைச் கொடுக்கச்சொல்றியே.”

‘‘சத்தியம் பண்ணிப்பிட்டா எதைக் கேட்டாலும் கொடுக்கணும், அதுவும்சாமி சாட்சிச் சொல்லியிருக்கே.”

“சரிடா, தரேன்.”

“.......................... ”

“இந்தா?”

“சரி நான், போயிட்டு வரட்டுமா?”

“ஓடுடி, ஓடு இந்தப் பயலுக்கு இருக்கிற சாமர்த்தியத்தைப் பாரு ஓடுடி, ஓடு, கூப்பிடு அந்தப் பயலை”

“யாரை”

‘‘எதிர்த்த வீட்டுப் பயலைடி; கூப்பிடேன். அப்புறம் பேசிக்கலாம். சரி, நான் கூப்பிடறேன். எலே சின்னாணி, இஞ்சவரியா இல்லையா ஏய் ஓடறதைப் பாரேன்.”

“ஏன் திரும்பி வந்துட்டேள்?”

“வீட்டுக்குள்ளே ஓடிப்போயிட்டான்.”



“ஏன், என்னத்துக்கு?”

‘‘உம் பிள்ளை இருக்கான். பாருடி ஜடபரதர். அதை ஏச்சுப்பிட்டான் அந்தப் பய.”

“என்ன?”

“ரூம்லெ உக்காந்து கேட்டுண்டே இருந்தேன். என்னமோ, ‘சத்யமாச் செய்யறேன்னு சொல்லு; சத்தியமாச் செய்யறேன்னு சொல்லு‘ன்னு அந்தப் பய இவனைக் கேட்டுண்டே இருந்தான். இதுவும் செய்யறேன்னு சொல்லித்து. அந்தக் காலண்டரை வாங்கிண்டு போய்விட்டான். அந்தப்பய.”

“எதை? நேத்திக்கு வாங்கிண்டு வந்தானே? அதையா?”

“ஆமாம்”

‘‘ஐயையோ! துடைகா–! நன்னா இருந்துதே! ஏண்டா கொடுத்தே அதை? ஏன் விசும்பி விசும்பி அழறே கொடுத்துட்டு?” சரி அழாதே ஏன்கொடுத்தே?”

ஓண்ணுசொல்வேன் செய்யறியா செய்யறியான்னு கேட்டான். சத்தியமாச்செய்யணும்னு சொன்னான். அப்புறம் அந்தக் காலண்டர் வேணும்னு கேட்டுட்டான்.”

“மாட்டேன்னு சொல்றதுக்கு என்ன?”

“சத்தியம் பண்ணினப்புறம் எப்படி மாட்டேங்கிறதாம்?

“நீ எப்படிடா பொழைக்கப்போறே! தரித்ரமே! அழகாப் பளிச்சுனு இருந்ததே! அதைப்போய்க் கொடுத்திட்டியே அப்பாவைக் கேட்காமெ கொடுக்க மாட்டேன்னு சொல்றதுக்கென்ன.”

“......................”

“என்னடா முழிக்கிறே?”

‘‘அவன் தானேடி வாங்கிண்டு வந்திருக்கான். சுதந்தர பாத்தியமாக் கொடுத்திட்டான்.

“கொடுத்துட்டு அழுதுண்டு நில்லு.”

“அந்தப் பய அப்படி பண்ணிவிட்டாண்டி அவனை. ஆணி அறஞ்சாப்போலென்னா சத்தியம் வாங்கிப்பிட்டான். இனிமே, பொழைக்கிற பிள்ளைன்னா வக்கீல் குமாஸ்தா கணேசன் பிள்ளை மாதிரி பிறந்து வரணும். முன்னாடி! ஒண்ணு சொல்றேன் செய்வியான்னான். இவன் என்ன, என்னன்னு தலைகீழே நின்னான். அந்தப்பய சொல்ல மாட்டேன்னுட்டான். அப்புறம் கோச்சுக்க ஆரம்பிச்சான். இவன் சமாதானம் சொன்னான் இவனை. இது பண்ணித்து கடைசியிலே அடிமடியிலே கையைப் போட்டுட்டான் அந்தப் பய எவ்வளவு அஸ்திவாரம்! எவ்வளவு பீடிகை! இது கொடுத்துட்டு அழறது! எனக்கு ஆச்சரியமாயிருக்கு.”

“ஏண்டா, மாட்டேன்னு சொல்லறத்துக்கென்ன? இதுக்கு வாயில்லையே இந்தப்பிள்ளைக்கு.”

“கையிலே மூணுதரம் சத்யமாச் செய்யறேன்னு அடிச்சுக் கொடுத்தேன். எனக்கு அதைகேக்கப் போறான்னு தெரியுமா?”

“அதுக்குத்தான்அவ்வளவு கஷ்டப்பட்டு அதை வாங்கிண்டு வந்தியா?”

“அந்தப் புள்ளைக்குத்தான் அதைக் கேக்க மனசு வந்துது பாருங்களேன்! ஏ அம்மாடி! அப்பன், ஆயி பிள்ளை எல்லாம் ஒண்ணைப் பாத்தாப்போல ஒண்ணு இருக்கு. எரிச்சல், அசூயை, பிறத்தியார் பண்டத்திலே ஆசை எல்லாத்தையும் பிள்ளை அப்படியே வாங்கிண்டிருக்கான்.”

“நான் கூப்பிடறேன். எப்படி ஓடறான் தெரியுமோ அந்தப் பய! ஒரு நொடியிலே வீட்டுக்குள்ளே மறைஞ் சுட்டான்!”

“பண்டம் போயிடுத்தே, அதுக்கு என்ன வழி இப்போ?

“ஏய் ரமணா, நீ தான் வாங்கிண்டு வரணும் அதைத் திருப்பி.”



“...........................”

“என்ன பேசாமெ நிக்கறே? இதே மாதிரி அவன் வித்தையை அவன்கிட்டே காமி. அவன் கிட்டேயும் சத்தியம் வாங்கிண்டு அந்தக் காலண்டரைத் திருப்பி வாங்கிண்டு வந்துடணும் என்ன?”

“....................”

‘என்ன பேசமாட்டேங்கறே?”

“எப்படிப்பா வாங்கறது?”

“அவன் கேட்டாப் போலவே, சத்யமாச் செய்யறேன்னு சொல்லச் சொல்லி அதைக் கேட்டு வாங்கிண்டு வா. வந்தாத்தான் ஆச்சு இல்லாட்டாச் சோறு கிடையாது.

“காலண்டரை இஞ்ச மாட்டிப்பிட்டியாடா சின்னாணி?”

“இந்த இடத்திலே மாட்டினா நன்னா இருக்கோல்லியோ?

“நன்னா இருக்கு.....”

“ஆமாம்மா, ரமணன்தாம்மா இந்தக் காலண்டரை இவன்தாம்மா எனக்குக்கொடுத்தான்.”

“ஏண்டா. நீதான் கொடுத்தியா?”

“ஆமாம் மாமி.”

“சின்னாணீ. கிழிச்சுப்பிடாமெ ஜாக்கிரதையா வச்சுக்கோ.”

“சரிம்மா..... ஏய் வாடா. வாசல்லே போய் விளையாடுவோம்.”

“ஏய் அந்தக் கன்னுக்குட்டி எப்படிக் காதைத் தூக்கிண்டு நிக்கறது பார்.”

“ஆமாம்”

“மொழு மொழுன்னு எப்படி இருக்கு பார் அது.”
“ஆமாம்........ போவோமா?”

“இருடா போவோம்.”

“அப்புறம் நாழியாயிடும், இருட்டிப் போயிடும்.”

“பேறதுன்னா இப்பவே போய் விளையாடிட்டு வந்துடணும். ராத்திரி எட்டு மணிக்கு வரப்படாது! தெரியறதாடா?”

“சரீம்மா, பாத்தியாடா, சட்டுன்னு வாடா, அப்புறம் நாழியாயிடுத்துனா எங்கம்மா அடிப்பா.”

“சரி”

“என்ன விளையாடலாம்”

“ஏதாவது விளையாடலாம்டா.”

“ஏதாவதுன்னா?”

“ஏதாவது விளையாடுவோம்.”

“ஏன், உனக்கு உடம்பு சரியா இல்லை?”

“அதெல்லாம் ஒண்ணும் இல்லை.”

“பின்னே ஏன், என்னமோபொலே இருக்கே?”

“ஒண்ணுமில்லை........... இன்னிக்கு விளையாட வாண்டாமே.”

“ஏன்?”

“சும்மாத்தான்”

”பின்னே விளையாடாமே என்ன பண்ணறது?”

“நான் ஒண்ணு சொல்றேன். கேக்கறியா?”

“என்ன?”

“நான் ஒண்ணு கேப்பேன் தருவியா?”

“என்ன?”

“தரேன்னு சொல்லு”



“என்னன்னு சொல்லு”

“நீ தரேன்னு சொல்லு”

“முடிஞ்சாத் தரேன்”

“அப்படின்னா?”

“எனக்குத் தர முடிஞ்சாத்தான்”

“உனக்கு முடியும்”

“என்ன, சொல்லேன்.”

“நிச்சயமாத் தரேன்னு சொல்லு.”

“முடிஞ்சா நிச்சயமாத் தரேன்”

“சத்யமா.”

“முடிஞ்சாச் சத்யமாத் தரேன்.”

“வந்து, வந்து நீ ஒரு ரப்பர் வச்சிருக்கே பாரு, பென்சில் மசி ரண்டையும் அழிக்குமே அதைக் கொடுப்பியா?”

“அப்பாடா, இதானே! என்னடாப்பான்னு பாத்தேன். வேறு எதையோ கேக்கப்போறன்னு நெனைச்சுட்டேன்.” என்ன?”

“உனக்கு இப்பவே வேணுமா?”

“இப்பவே வாண்டாம் விளையாடி முடிஞ்சப்புறம் உன் வீட்டுக்கு வந்து வாங்கிக்கறேன்.

“இப்பவே இருக்கு ட்ராயர் பையிலே. இதோ பாத்தியா. இந்தா எடுத்துக்கோ. அப்புறம் ஒண்ணும் கேக்கப்படாது..

“இல்லெ”

“எங்கேடே, காலண்டர்?”

“பாத்தியாப்பா, சின்னாணி கிட்டேயிருந்து இந்த ரப்பரை வாங்கிண்டு வந்துட்டேன். இது மசியைக்கூட அழிக்கும்பா. ஒஸ்தி ரப்பர்!”

“காலண்டர் கேட்டியா?”

“இல்லை”

“ஏன்?”

“எப்படிப்பா கேக்கறது?”

“அவன் கேட்ட மாதிரியே கேக்கறது.”

“வாண்டாம்பா”

“என்னடா வாண்டாம்.”

“எனக்குப் பயமாயிருக்கு.”

“என்ன பயம்?’

“கேக்கறதுக்கு.”

“எதைக் கேக்கறதுக்கு,”

“அதைத்தாம்பா, காலண்டரை.”

“ஏன்?”

“கொடுத்தப்புறம் எப்படீப்பா கேக்கறது?’

“என்ன?”

“இந்த ரப்பர் ஒஸ்தி ரப்பர் அப்பா, இது இப்பக் கிடைக்கவே இல்லெ.”

“இதைத்தான் கேட்டியா?”

“ஆமாம்.”

“அதைக் கேக்கலியா?”

“அது எனக்கு வாண்டாம்பா. எனக்கு அது பிடிக்கலெ.”

“ஏண்டா?”

“என்னமோ பிடிக்கலெ.”



“பலேடா சிங்கம்...... சரி போ.”

“ ஏய் யாரு உள்ளே, இஞ்ச வாயேன்.”

“என்ன”

இஞ்ச வா.”

குழந்தை எங்கே?”

“சாப்பிடச் சென்னேன். கொல்லையிலே போயிருக்கான் கைகால் அலம்ப”

“இதைப் பாரு, உம் பிள்ளை சாமர்த்தியத்தை, எதிராளாத்துப் பயல்கிட்டேயிருந்து இதை சாமர்த்தியமா வாங்கிண்டு வந்துட்டானாம்! சொல்லிக்கிறான்.”

“இது என்ன ரப்பரா?”

“மசி அழிக்கிறதாம் ரொம்ப ஒஸ்திங்கறான். காலண்டருக்குப் பிரதி.”

“நீங்க ஏன் காலண்டர் காலண்டர்னு நச்சரிக்கிறேள் அவனை?”

“இல்லேடி இந்த மாதிரி தெய்வங்கள்ளாம் இந்தப் பூமிலே ஏண்டி பிறக்கிறதுகள்? இது கெட்டிக்கார உலக மாச்சே அதுக்குன்னு சொல்றேன்.”

“உங்க மனசு இன்னும் பலமாகத்தான் இருக்கு. கண்ணைத் துடைச்சுக்குங்கோ வாங்கோ சாப்பிட. வயசானாத் தானா புத்தி வராது.”

**பயிற்சி**

கீழ்க்காணும் தலைப்புகளில் நாற்பத்தைந்து வரிகளுக்கு மிகாமல் கட்டுரை எழுதுக.

1. கிருஷ்ணன் படமுள்ள காலண்டரை ரமணன் பெற்ற வரலாறு.

2. ரமணின் பண்பு நலன்கள்.

# 4. புதிய பாலம்

**- நா. பார்த்தசாரதி**

சமூகத் தொண்டன் பொன்னம்பலம் நாயாக அலைந்தான், அலையாவிட்டால் முடியுமா? எடுத்துக் கொண்டிருப்பது எத்தனை பெரிய காரியம்? எவ்வளவு பெரிய பொறுப்பு? தொண்டு செய்வதும், பொதுக் காரியங்களுக்காக அலைவதும் தான்அவனால்செய்ய முடிந்த சுலபமான காரியங்கள். இதை இப்படிச் சொல்வதைக் காட்டிலும், பொதுத் தொண்டுகளுக்காக அலையாமலும் பாடுபடாமலும் இருக்க முடியாத ஆட்களில் அவனும் ஒருவன் என்று சொன்னால் சரியாக இருக்கும். அவன் சர்வ சாதாரணமாக ஏழை மனிதன்தான். பணத்தை வாரி வழங்க அவனால் முடியாது. ஆனால் உழைப்பை வழங்க முடியும். அந்த உழைப்பு என்னும் குறையாத நிதியைச் சமூகப் பணிக்கும், பொதுக் காரியங்களுக்கும் செலவழித்துக் கொண்டிருந்தான் பொன்னம்பலம்.

வடக்குக் கரையில் உள்ள ஊரையும் தெற்குக் கரையில் உள்ள ஊரையும் ஓர் ஆறு குறுக்கே பாய்ந்து பிரித்துக் கொண்டிருந்தது. சிறிய ஆறுதான். வருடத்தில் எட்டு மாதங்களுக்கு மணல்தான் ஓடும். எஞ்சிய நான்கு மாதங்களிலோ இருகரையும் மீறிக் கடுமையாகத் தண்ணீர் பாயும். இந்த ஆற்றுக்குச் சரியான பாலம் இல்லாமல் அக்கரை ஊர்க்காரர்களும், இக்கரை ஊர்க்காரர்களும் துன்பப்பட்டுக் கொண்டிருந்தனர். எவனோ சோழ அரசன் காலத்தில் கட்டின பழைய கல்பாலம் ஒன்று ஊரிலிருந்து வெகு தூரத்திக்கு விலகிப் பத்தாவது மைலிலோ, பதினைந்தாவது மைலிலோ இருந்தது. கரையோரமாகவே அந்தப் பாலம் வரை போய்ச்சுற்றி வளைத்து அக்கரை அடையலாமே என்றால், சுற்று வழி காரணமாக



அநாவசியமான காலதாமதம் ஆயிற்று. அந்த இரண்டு ஊர்களுக்கும் வசதியாக ஊரை ஒட்டி ஒரு பாலம் இருந்தால் எவ்வளவோ நன்மையாக இருக்குமென்று எல்லோரும் விரும்பினார்கள், சமூகத் தொண்டன் பொன்னம்பலம் இந்த விருப்பத்தை வளர்த்தான்.

ஐந்தாண்டுத் திட்டம், சமூக வளர்ச்சித் திட்டம், கிராம நலத் திட்டம் என்று என்னென்னவோ திட்டங்கள் போட்டிருக்கிறார்களே, அதற்கெல்லாம் இரண்டு ஊர் மக்களிடம் கையெழுத்து வாங்கி விண்ணப்பம் அனுப்பினான் பொன்னம்பலம். பாலத்துக்கு அஸ்திவாரக்கல் போடுவதற்கு ஒரு மந்திரி, பாலம் முடிந்தபின் அதைத் திறந்து வைப்பதற்கு வேறொரு மந்திரி என்று வருவதைச் செய்தித்தாள்களில் நிறைய படித்திருக்கிறான் பொன்னம்பலம். தங்கள் ஊர்ப் பாலத்தையும் ஏதாவது ஒரு திட்டத்தின்கீழ் எடுத்துக்கொண்டு அரசாங்கத்தார் முடித்து வைப்பார்கள் என்று பொன்னம்பலம் கருதினான். ஆனால் அரசாங்கத்தாருக்குக் குருவிப்பட்டிக்குப் பாலம்போட முயல்வதைவிடப் பெரிய வேலைகள் எல்லாம் இருந்தன. குருவிப்பட்டிக்குப் பாலம் போடாவிட்டால் இப்போது ஒன்றும் குடிமுழுகிப் போய்விடாது' என்று பேசாமல் இருந்து விட்டார்கள். எத்தனையோ உள்நாட்டு, வெளிநாட்டுப் பிரச்சனைகளைச் சமாளிக்க வேண்டிய தீவிரமான அரசியல் சூழ்நிலையில், குருவிப்பட்டியின் பாலத்தைப் பற்றி நினைவு வைத்துக் கொள்வதே கேவலமல்லவா? எனவே குருவிப்பட்டியிலும் அதன் எதிர்க்கரையிலும் உள்ள மக்களைத் தவிரக் 'குருவிப் பட்டிப்பாலம்' பற்றி வேறெவரும் நினைவு வைத்துக் கொள்ள மறுத்து விட்டார்கள்.

அதெற்கென்ன செய்வது? அரசாங்கத்திலிருப்பவர்களுக்குக் கண்டதையெல்லாம் நினைவு வைத்துக்கொண்டு திரிய முடியுமா? தாங்கள் அரசாங்கத்தில் இருப்பதே சில சமயங்களில் மறந்துவிடுகிறதே அவர்களுக்கு. 'ஆகவே குருவிப்பட்டியும் அதன் பாலமும் எக்கேடு கெட்டுப்போனால் என்ன?'' என்று விட்டுவிட்டார்கள்.

ஆனால் குருவிப்பட்டி வாசிகள் அப்படி விடுவதற்குத் தயாராயில்லை.அந்தப் பட்டிக்காட்டு மனிதர்களிடம் உழைப்பு இருந்தது. தன்மானம் இருந்தது. தங்களையும், தங்கள் ஊர்ப் பாலத்தையும் பற்றித் தங்களிடம் ஓட்டு வாங்கிக்கொண்டு பதவிக்குப் போனவர்களே மறந்ததை, அவர்கள் மன்னித்துத்தான் தொலைக்க வேண்டியிருந்தது. மன்னிப்பு என்கிற பரஸ்பர பலவீனம் இல்லாவிட்டால் இந்த உலகம்தான் என்றைக்கோ உருப்பட்டுத் தேறியிருக்குமே! எத்தனையோ அயோக்கியர்களையெல்லாம் சுலபமாகப் புண்ணிய பாவங்களின் பேர் சொல்லி மன்னித்துவிட்டுக் குட்டிச்சுவராய்ப் போய்க் கொண்டிருக்கிற பெருமை இந்தப் பாரத நாட்டிற்குப் புதிதா என்ன?

குருவிப்பட்டிப் பெருமக்களும், அவர்களின் அன்புக்குரிய சமூகத் தொண்டனாகிய பொன்னம்பலமும் இறுதியாக ஒரு தீர்மானத்துக்கு வந்தார்கள். தங்கள் ஊரைப் பற்றி அக்கறையும், நினைவும் இல்லாத அரசாங்கத்தை நம்பிப் பயன் இல்லை. ஒருவேளை அரசாங்கத்துக்குத தங்களுடைய ஆட்சியின் கீழே குருவிப்பட்டி என்று ஒரு கிராமம் இருப்பதே மறந்து போயிருக்கலாம். எனவே தங்கள் ஊர்ப்பாலத்தைத் தாங்களே அமைத்துக் கொள்வது என்ற திடமான முடிவுக்கு வந்தார்கள். அந்த முடிவுக்கு வருமாறு அவர்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் அளித்தவன் பொன்னம்பலம்தான்!

ஊர்ப் பக்கத்திலிருந்த கருங்கல் குன்றிலிருந்து பாலத்துக்கான கற்கள் உடைக்கப்பட்டன. ஊர்ப்பொதுவில் ஒரு பெரிய சுண்ணாம்புக் காளவாய் போட்டுக் காரை நீற்றினார்கள். சில அவசியமான செலவுகளுக்காக இரண்டு ஊர்ப் பொது மக்களிடமிருந்தும் பொன்னம்பலம் ஒரு நிதி வசூல் செய்திருந்தான். அதற்காகத்தான் அவன் நாயாக அலைந்து பாடுபட்டான் என்று தொடக்கத்தில் குறிப்பிட்டோம். இரண்டு கிராமத்து மக்களும் தங்கள் வேலை நேரம் போக எஞ்சிய நேரமெல்லாம் பாலத்துக்காக உழைத்தனர். ஆண், பெண், இளைஞர், முதியோர் வேறுபாடின்றி எல்லோரும் பாலத்துக்காகப் பாடுபட்டனர்.



ஏழெட்டு மாதங்களில் பாலம் முடிந்தது. மிகவும் நல்லவரான குருவிப்பட்டிப் பஞ்சாயத்துத்தலைவரைக் கொண்டு ஊரார் உழைப்பால் உருவான அந்தப் பாலத்தைத் திறந்து வைக்கச் செய்தான் தொண்டன் பொன்னம்பலம். எல்லோரும் பொன்னம்பலத்தின் உழைப்பைப் பாராட்டினார்கள்; கொண்டாடினார்கள்.

விவசாயத்தையே தொழிலாகக் கொண்ட இரண்டு ஊர் மக்களும் அந்தப் பாலம் உண்டானதால் ஏற்பட்ட நன்மையை அநுபவித்தார்கள். ஏர் பூட்டிய உழவு மாடுகள், கட்டை வண்டிகள், வைக்கோல் வண்டிகள் எல்லாம் பாலத்தின் வழியாக வந்து போய்க்கொண்டிருந்தன. இரு ஊர்களின் உறவும் பழக்கமும் பாலத்தால் நெருங்கிற்று. இரண்டு ஊர் மக்களும் விவசாயிகள் ஆதலால், பாலம் வண்டிகளின் போக்கு வரவுக்கு மிகவும் பயனுள்ளதாகவும், இன்றியமையாததாகவும் இருந்தது.

குருவிப்பட்டிக்கு அப்பாலுள்ள பிரதேசம் வேறு மாகாணத்தைச் சேர்ந்தது. அங்கே மதுவிலக்கு இல்லை. குதிரைப் பந்தயம் உண்டு. எனவே குடிப்பதற்கும், குதிரைப் பந்தயத்துக்கும் பத்து மைல் சுற்றிச் சோழ அரசன் காலத்து கல்பாலம் வழியாகப் போய்க்கொண்டிருந்த பணக்காரர்கள் அது சுற்று வழி என்று கருதி இப்போதெல்லாம் குருவிப்பட்டிப் பாலம் வழியாகப் போகத்தொடங்கினார்கள். சமூகத் தொண்டன் பொன்னம்பலமும் ஊர்ப்பொதுமக்களும் கட்டின பாலம், ஏதோ சுய தேவைக்காகச் சுருங்கிய அளவில் கட்டப்பட்டிருந்தது.

முக்கியமாக கிராம மக்களின் தேவையை உணர்ந்து உழவு மாடுகளும், கட்டைவண்டிகளும், வைக்கோல் பார வண்டிகளும், போவதற்காகக் கட்டப்பட்ட அந்தப் பாலத்தில் இப்போது கார்களும், லாரிகளும் போகத் தொடங்கிவிட்டதால் கிராம மக்கள் இடையூறு அநுபவித்தனர். கட்டை வண்டிகளும், மாடுகளும், ஊடே நுழைய நேரமே இன்றி அந்தப் பக்கமிருந்தும், இந்தப் பக்கமிருந்தும், லாரிகளும் கார்களும் மொய்த்தன. காத்திருந்தவன் பெண்டாட்டியை நேற்றுவந்தவன் கொண்டு

போனான் என்பது போல் ஊர்க்காரர்கள் போட்ட பாலம், ஊர்க்காரர்களுக்குப் பயன்படாமல் கார்க்காரர்களுக்குப் பயன்படத் தொடங்கிவிட்டது. ஒருநாள் குதிரைப் பந்தயத்துக்குப் போய்விட்டுத் திரும்பிய பட்டினத்துப் பணக்காரர் ஒருவர் நிறையக் குடித்துவிட்டுப் போதையோடு மிகப் பெரிய 'பியூக்' காரில் வந்தார். கார் குருவிப்பட்டிப் பாலத்தில் வரும்போது ஒரு கட்டை வண்டியில் மோதி, வண்டிக்காரன் கீழே கார் சக்கரத்தினடியில் விழுந்து நசுங்கி இறந்துபோனான். இந்தச் சம்பவம் குருவிப்பட்டிக்காரர்களின் கண்களைத் திறந்தது. மறுநாள் முதல் அந்தப் பாலத்தில் கார்களையும், லாரிகளையும் விடுவதில்லை என ஊர்க்காரர்கள் எல்லோரும் சேர்ந்து மறியல் செய்தார்கள்.

குதிரைப் பந்தயத்தையும், குடியையும் நினைத்துக்கொண்டு ஆவலோடு குருவிப்பட்டிப் பாலத்தை நோக்கி வந்த கார்கள் மறியலின் காரணமாக ஏமாற்றத்தோடு திரும்பிப் போயின.

பாலத்துக்குள் நுழைகிற இடத்தில் சமூகத் தொண்டன் பொன்னம்பலம், இன்னும் நாலைந்து பேரைச் சேர்த்துக் கொண்டு நுழைய இடமின்றிக் கைகோத்து நின்றான். ஒரு பெரிய கார்க்காரர் அவர்களுடைய மறியலைப் பொருட்படுத்தாமல் இறங்கி கூப்பாடு போட்டார்.

"இது உன் அப்பன் வீட்டுப் பாலமில்லை. நீ யார் மறியல் செய்வதற்கு? அத்தனை "மினிஸ்டரையும்" எனக்குத் தெரியும். ஒரு வரி எழுதிப் போட்டால் உங்களையெல்லாம் உள்ள தள்ளிவிடுவார்கள்."

பொன்னம்பலம் அவருடைய பேச்சைக் கேட்டுக் கோபம் அடையவில்லை. அமைதியாகவே அவருக்குப் பதில் சொன்னான். "ஐயா! இது ஊர் மக்களின் உழைப்பால் உருவான பாலம். கட்டைவண்டிகளும், உழவு மாடுகளும் போவதற்காகத்தான் ஏழை விவசாயிகளாகிய நாங்கள் இந்தப் பாலத்தை கட்டினோம். இந்தப் பாலத்தைக் கட்டுவதற்காக அரசாங்கம் கால் பைசா எங்களுக்குத்தரவில்லை. இப்போதோ எந்நேரமும் கார்களும், லாரிகளும் இந்தப் பாலத்தை



ஆக்கிரமதித்துக் கொள்கின்றன. இரண்டு கிராமத்து வண்டிகளும் போக முடிவதில்லை. நாங்கள் உழைத்ததன் பயன் வீணாவதை எங்களால் மன்னிக்க முடியவில்லை. இரண்டு மூன்று நாட்களுக்கு முன் இந்தப் பாலத்தில் ஒரு கட்டை வண்டிக்காரன் காரில் நசுங்கி இறந்து போனான். இனியும் குடிகாரர்களுக்கும் குதிரைப் பந்தய வெறியர்களுக்கும், இந்தப் புனிதமான பாலம் பயன்படுவதை நாங்கள் அனுமதிக்கத் தயாராயில்லை."

"நான்சென்ஸ்! நான் யார் தெரியுமா? என்னிடம் இவ்வளவு திமிராகப்பேசுகிறாயே? நான் சுட்டு விரலை ஆட்டினால் இந்த நாட்டை ஆளும் அத்தனை மந்திரிகளும் ஓடி வந்து கைகட்டி நிற்பார்கள். தெரியுமா உனக்கு?"

அது எனக்கு தெரியவேண்டிய அவசியமில்லை ஐயா! இப்போது நீங்கள் இந்தப் பாலத்தின் வழியாகப் போக முடியாது. வணக்கம். திரும்பிச் செல்லலாம். நீங்கள்" என்று பேச்சை முடித்தான் பொன்னம்பலம்.

அவனை முறைத்துவிட்டுக் காரில் போய் ஏறிக்கொண்டு திரும்பினார் அவர்.

மறியல் தொடர்ந்து நடந்தது. கட்டை வண்டிகளையும் உழவு மாடுகளையும் தான் பாலத்தில் போகவிட்டார்கள். கார்களையும் லாரிகளையும் போகவிடவில்லை. அதற்காகக் கார்காரர்களையும் லாரிக்காரர்களையும் கொடுமைபடுத்தவில்லை. "இந்தச் சிறு பாலம் கிராம மக்களின் நலனுக்காக நாங்கள் போட்டது. தயவு செய்து இதை நாங்கள் உங்களுக்கு விடாமலிருப்பதற்காக மன்னியுங்கள். சிறிது தொலைவு போனால் கல்பாலம் ஒன்றிருக்கிறது. அது அரசாங்கத்துக்குச் சொந்தமான பொதுப் பாலம். அதை உபயோகப்படுத்துங்கள். இங்கே வராதீர்கள்." என்று பணிவாகச் சொல்லி திருப்பி அனுப்பினார்கள்.

கார் வைத்திருப்பவர்கள் எல்லாம் பண்காரர்கள் பணம் வைத்திருப்பவர்கள் எல்லாம் அரசாங்கத்துக்கு வேண்டிய வர்கள். கேவலம் ஒரு பட்டிக்காட்டுப் பாலத்தில் போக

முடியாது என்றால் சும்மா இருப்பார்களா? அவர்களால் ஆகாததும் உண்டோ? இருந்த இடத்தி-ருந்தபடியே மினிஸ்டரோடும்' 'ஹைவேஸ் கமிஷனரோடும் டெலிபோனில் பேசினார்கள். அந்தப் பட்டிக்காட்டான்கள் செய்யும் 'அக்கிரமத்தை' எடுத்துக்கூறினார்கள்.

அதன் விளைவு? .... மறுநாள் குருவிப்பட்டி பாலத்தில் 'ஹைவேஸ் அதாரிடி' யோடு கூடிய விளம்பரப் பலகை ஒன்று தொங்கியது.

இந்தப்பாலத்தின் வழியாக கார்கள், லாரிகள் தவிர கட்டைவண்டிகள் போகக்கூடாது. இது அரசாங்க உத்தரவு மீறுபவர்கள் தண்டிக்கப்படுவார்கள்.

இப்படிக்கு

கமிஷனர்

அரசாங்க ஹைவேஸ் இலாகா.

சமூகத் தொண்டன் பொன்னம்பலமும் ஊர்க்காரர்களும் மறியலை நிறுத்தவில்லை. அரசாங்க உத்தரவையும் எதிர்த்து மறியல் செய்தனர்.

சும்மா இருப்பார்களா அரசாங்கத்தார்? வண்டி வண்டியாக லாரி நிறைய ஸ்பெஷல் ரிசர்வ் போலீஸார் வந்து இறங்கினார்கள். அடிதான், உதைதான், அடி உதைக்குப் பயந்து பெரும்பாலோர் மறியலைக் கைவிட்டு ஓடி விட்டனர். பொன்னம்பலமும் இன்னும் இரண்டு மூன்று ஆட்களும் மறியலை நிறுத்தவே இல்லை.

''இந்தப் பாலம் எங்கள் பிறப்புரிமை. இதை விட்டுக் கொடுக்கமாட்டோம். எங்கள் உழைப்பு எங்களுக்கே சொந்தம்.'' என்று கோஷமிட்டான் பொன்னம்பலம்.

"போடுடா அவன் மண்டையிலே." முரட்டு போலீஸ்காரன் ஒருத்தன் அவனை அடித்தான்.

மண்டையிலிருந்து குருதி ஒழுகக் கீழே வீழ்ந்தான் பொன்னம்பலம். பிரக்ஞை தவறியது. மறுபடி அவன் தன்



நினைவுற்றுக் கண்திறந்து பார்த்தபோது பாலத்தில் கார்களும், லாரிகளும் சுகமாகப் போய்க்கொண்டிருந்தன.

"இந்த உருப்படாத சமூகத்துக்கு இது மாதிரிப் பாலங்கள் இன்று தேவை இல்லை. ஏழைகளுக்கும் நியாயத்துக்கும் நடுவிலிருக்கிற தூரத்தை இணைக்க முதலில் ஒரு புதிய பாலம் போடவேண்டும். அதைக் கல்லாலும், காரையாலும் போட முடியாதே!'' என்று முணுமுணுத்துக்கொண்டே எழுந்து தள்ளாடி நடந்தான் அவன்.

**பயிற்சி**

கீழ்க்காணும் தலைப்புகளில் நாற்பத்தைந்து வரிக்களுக்கு மிகாமல் கட்டுரை எழுதுக.

1. குருவிப்பட்டிப் பாலமும் பொன்னம்பலமும்.

2. ''கறையான் புற்றெடுக்க கருநாகம் குடிவந்தது'' இப்பழமொழியைக் கொண்டு இக்கதையை ஆய்க.

# 5. காய்ச்சமரம்

**– கி ராஜநாராயணன்**

நிம்மாண்டு நாயக்கர் வயசாளி. பேரக்காள் அவர் மனைவி. அந்த இருவரின் முடிவு காலத்தைப் பற்றிய கதை இது.

நிம்மாண்டு நாயக்கர் பெரிய சம்சாரி. எம்பது ஏக்கர் கருசக் காடு.

நாலுசோடி உழவு மாடு. தொழுநிறைய கால்நடைச் செல்வங்கள். நிறைஞ்ச வெள்ளாமைக் குடியிருக்கும் வீடு பூர்வீக வீடு போக மூணுகார வீடுகள்.

நிம்மாண்டு நாயக்கருக்கும் பேரக்காளுக்கும் மொத்தம் 8 பிள்ளைகள். 4 ஆம்பளப்பிள்ளைகள், 4 பொம்பளப் பிள்ளைகள். பொம்பளப் பிள்ளைகளை நல்ல இடத்துல கட்டிக் கொடுத்திருக்கு. ஆம்பிளப் பிள்ளைகள் நாலு பேருக்கும் நல்ல இடத்திலே பெண் எடுத்திருக்கு. நிம்மாண்டு நாயக்கருக்கும் பேரக்காளுக்கும் பிள்ளைகள் மேல் கொள்ளைப் பிரியம். பேரக்காள் வாக்கப்பட்டு வரும்போது 100 பவுன் நகையோடு வந்தாள். அந்தக் காலத்திலே நூறு பவுன்னா சும்மாவா? பொம்பளப் பிள்ளைகளுக்குப் போட்டது போக மீதியைப் பேரப் பிள்ளைகளுக்கும் போட்டாச்சு.

நாளடைவில் சொத்தைப் பிரிக்கணும் சொத்தைப் பிரிக்கணும் என்று சிறிசுகளுக்குத் தோன்ற ஆரம்பித்தது. ஆனால் சொத்தைப் பிரிச்சுக் கொடுங்க என்று நேரடியாக அப்பாவைக் கேட்க பையன்களுக்குப் பயம். எப்படியோ இந்த விசயம் பெரியவரின் காதுகளுக்கு எட்டியது. ஒரு நாள் பருத்திக் காட்டுக்குப்போய்விட்டுத் திரும்பும் போது அலுப்புத்தாங்க



முடியாமல் நிம்மாண்டு நாயக்கரும் பேரக்காளும் ஒரு மரத்தடியில் உட்கார்ந்தார்கள். பேரக்காளைப் பார்த்து, ‘‘பேரக்காள், என்னடி சொல்றே? பையன்கள் சொத்தைப் பிரிக்கணும்னு ஆசைப்படுறாங்களாம். நீ ஏதும் கேளவிப் பட்டாயா? ஆசைப்படுறாங்களாம். நீ ஏதும் கேள்விப் பட்டாயா? என்றார் நிம்மாண்டு.

“இதிலே என்ன இருக்கு? எப்ப இருந்தாலும் அவங்கிட்ட ஒப்படைக்க வேண்டிய பாரம்தானே. பிரிச்சுக்கொடுத்திட வேண்டியது தானே? நமக்கும் வயசாகிப் போச்சு. கிட்ணா, ராமான்னு உட்கார்ந்து சாப்பிடவேண்டிய காலத்திலே ஏன் இப்படி லோலோன்னு அலைஞ்சு திரியணும்’’ என்றாள் பேரக்காள்.

பேரக்காள் சொன்ன பிறகு அப்பீல் ஏது?

மறுநாள் பையன்கள் நாலு பேரையும் வரச்சொன்னார்கள். நிம்மாண்டு நாயக்கர். பாகப் பிரிவினை பற்றி அவர்களிடம் பேசினார். அவர்களும் சரி என்று தலையாட்டினார்கள்.

“சரி அப்ப நீங்க மத்தியஸ்தர் ஒருவரைக் கூட்டி வாருங்கள்’’ என்றார் பெரியவர்.

“நீங்க பார்த்து எப்படிச் செய்தாலும் சரிதாம்ப, நீங்க என்ன ஒரு கண்ணில வெண்ணெயும், ஒரு கண்ணில் சுண்ணாம்புமா வைக்கப்போறீங்க’’ என்றார்கள் பையன்கள்.

“அப்படி இல்லேடா கோட்டிப் பயபுள்ளைகளா! பாகம் பிரிக்கிற துண்ணா மத்தியஸ்தர் ஒருத்தர் கட்டாயம் வேணும். போயி யாரையாவது ஒருத்தரைக் கூட்டிக்கிட்டு வாங்க என்றார் பெரியவர்.

பையன்கள் நால்வரும் பாறைப்பட்டி கந்தசாமி நாயக்கரைக் கூட்டி வந்தார்கள். பாறைப்பட்டி நாயக்கர் எல்லோருக்கும் பொதுவானவர். ஊர்ப் பெரிய மனுசன். தெற்கு வடக்கு போய் வரும் மனுசன். விபரம் தெரிந்தவர்.

பாறைப்பட்டி நாயக்கர் வந்தார். “வாங்க பாறைப்பட்டி மாப்ள!’’ என்று சிரித்தப்படி நிம்மாண்டு நாயக்கர் வரவேற்றார்.

பாறைப்பட்டி நாயக்கர் தொழுவத்திலேயே உட்கார்ந்து கொண்டார். வீட்டுக்குள் உட்கார்ந்தா வெத்திலை எச்சி துப்ப எந்திரிச்சு எந்திரிச்சு வெளியே வரணும். தொழுவம்தான் சரி.

பேரக்கா காப்பித் தண்ணி கொண்டு வந்தாள். காப்பி குடித்த பின்பு பாறைப்பட்டி நாயக்கர் வெற்றிலை போட்டார். நிம்மாண்டு மெல்லப் பையன்களின் ஆசைகளைச் சொன்னார்.

“என்னைக்கி இருந்தாலும் அதைச் செஞ்சிட வேண்டியது தானே” என்று ஒத்துக்கொண்டார் பாறைப்பட்டி நாயக்கர்.

வீட்டிலிருந்து பருத்தி, வத்தல், மல்லி, தானியங்கள் உட்பட மொத்த சொத்தும் நான்கு பாகங்களாகப் பிரிகக்ப்பட்டன. எல்லாம் வாய்க்கணக்காகவே சரி தானே என்று கேட்டார் பாறைப்பட்டி. பையன்கள் தங்கள் மனைவிமார்களிடம் சென்று கலந்து பேசினார்கள். பின்பு வந்து சரி என்றார்கள்.

நான்கு பாகங்களாகப் பிரிக்கப்பட்ட சொத்துக்கள் துண்டுச் சீட்டுக்களில் எழுதப்பட்டன. அவற்றைப் பாறைப்பட்டி நாயக்கர் சுருட்டிக் குலுக்கிப் போட்டார். இளையவன் முத-ல் ஒரு சீட்டை எடுத்தான். பிறகு ஒவ்வொருத்தரா வந்து சீட்டு எடுத்தார்கள். சீட்டில் எழுதப்பட்டுள்ள சொத்துக்கள் எடுத்தவர்க்கு.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வீடு என்று பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு வீட்டிலும் ஒரு வசதியும் இருந்தது. வசதிக்குறைவும் இருந்தது. மருமகள்கள் கண்களுக்கு வசதிக் குறைவே பெரிதாகப்பட்டது. பூர்வீக வீடு அண்ணனுக்குக் கிடைத்தது. அண்ணன் யோகக்காரன் என்று தம்பிகளுக்குப் பட்டது. வயித்தெரிச்சல் தொடங்கிவிட்டது.

பாகப் பிரிவினை ஒருவழியாக முடிந்தது என்று பாறைப்பட்டி நாயக்கர் நினைத்துக் கொண்டார். இந்த நேரத்தில் நிம்மாண்டு நாயக்கர் விறுவிறு என்று பூர்வீக வீட்டுக்குள் போனார். வெங்கலத்தவலை ஒன்றைத் தூக்க முடியாமல் தூக்கி வந்தார். பாறைப்பட்டி நாயக்கருக்கு முன்னால் தவலையைக் கவுத்துத் தட்டினார். நாணயங்கள் விழுந்தன. எல்லாம் வெள்ளிக் காசுகள். வெள்ளைக்காரன் காலத்து வெள்ளிக்காசுகள்.



அந்தக் காலத்தில் 12 வெள்ளிக் காசுகளுக்கு ஒரு பவுன் தங்கம் வாங்கலாம். மொத்தம் 2000 காசுகள் இருந்தன. காசுகளையும் சரிசமமாகப் பகிர்ந்தார்கள். காசுகளை மகன்களுக்குப் பகிர்ந்து கொடுக்கும் போது நிம்மாண்டு நாயக்கரின் முகத்தைப் பார்க்கணுமே. மனுசன் முகத்திலே ஒரே சந்தோசம்.

“நம்ம அப்பா மாதிரி இந்த ஊரிலே யாரு பிள்ளைகளுக்கு இப்படிப் பகிர்ந்து கொடுத்திருக்காங்க” என்று பிள்ளைகள் பெருமையாக நினைத்துக் கொண்டார்கள்.

“பொல்லாத கிழவரு! இது மாதிரி இன்னும் எம்புட்டுப் பணத்தை எங்கெங்கே புதைச்சி வச்சிருக்காரோ?” என்று எல்லோரும் நினைத்தார்கள்.

பாறைப்பட்டி கவலைப்பட்டார்.

“இப்போ இந்தக் கிழவர் பண்ணியது வம்பான வேலை. பையன்களுக்கு ஏற்கெனவே போதுமான அளவு கொடுத்திருக்கு. வத்தல், பருத்தி, உளுந்து, மல்லி முதல் கொண்டு அவ்வளவும் கொடுத்தாச்சு. இப்ப போயி இவரு ஏன் பணத்தையும் பகிர்ந்து கொடுக்கணும். நோக்காடு, சாவுன்னா பிரயோசனப்படுமே” என்று பாறைப்பட்டி நினைத்துக் கொண்டார்.

நிம்மாண்டு, பாறைப்பட்டியைப் பார்த்துச் சொன்னார். “ இத்தனை நாள் பிள்ளைகள் என் கையை எதிர்பார்த்து இருந்தாங்க. இனி நான் அவங்க கையை எதிர்பார்த்து இருக்கணும்.” என்று சொன்னார்.

பிறகு பிள்ளைகளைப் பார்த்துச் சொன்னார். “பாருங்கப்பா! இருக்கிறது எல்லாத்தையும் உங்களுக்குக் கொடுத்தாச்சு அம்மா போட்டிருக்கிற கம்மல், நான் போட்டிருக்கிற வெள்ளி அரணாக்கயிறு மட்டும்தான் மிச்சம். இனி எங்களுக்கென்ன? மூணு வேளைக்கஞ்சி, கட்டிக்கிடத்துணி, தலைக்கு எண்ணெய் என்று சிரித்துக்கொண்டே சொன்னார் நிம்மாண்டு நாயக்கர்.

நிம்மாண்டு நாயக்கரும் பேரக்காளும் ஒவ்வொரு மாதமும் ஒரு மகன் வீட்டில் இருப்பது என்று முடிவானது.

முதல் தடவை எந்தப் பிரச்சனையும் இல்லை. நாலு வீட்டிலும் நல்ல கவனிப்பு. நாளாக நாளாக நிலைமை மோசமானது.

மூன்று வேளைச் சாப்பாடு இரண்டு வேளை ஆனது. இரண்டு வேளைக் காப்பி ஒரு வேளை ஆனது. பேரக்காள் பிரியமாய்ப் போடும் வெற்றிலையும் நிறுத்தப்பட்டது. அடுத்த அடுத்த மாதங்களில் தலைக்கு எண்ணெயும் போச்சு. உடு மாத்துத் துணி குறைஞ்சாச்சு.

வயசாளிகள் இருவரும் மெலிந்து போனார்கள். உடம்பெல்லாம் வங்கு வத்திப் போச்சு இரண்டு பேரும் சாயம் போன கந்தல் துணி போல ஆயிப்போயிட்டாங்க.

எண்ணெய் தேய்க்காததால் தலை அட்டுப் பிடித்து பிசுபிசுவென்று ஆகிப்போனது. தாங்க முடியாமல் பேரக்காள் ஊர்க்குளத்தில் போய்க் களிமண்ணைத் தலையில் தேய்த்து குளித்து வந்தாள்.

அன்று பார்த்து, தற்செயலாய்ச் சின்ன மகள் அப்பா அம்மாவைப் பார்த்துப் போக வந்தாள். வந்தவள் நிலைமையைப் புரிந்து கொண்டாள். கோபத்தோடும் ஆங்காரத்தோடும் அண்ணன்களையும் மதினிகளையும் திட்டித் தீர்த்தாள்.

நிம்மாண்டு நாயக்கரும் பேரக்காளும் குனிந்த தலைநிமிராமல் கண்ணீர் வடித்தார்கள். தன்னோடு வந்துவிடும்படி மகள் அம்மா அப்பாவைக் கேட்டாள். கொஞ்ச நேரம் பெரியவர் பேசவில்லை. பிறகு சொன்னார்.

“சம்மந்தகாரங்க வீட்டுல போய் இருக்கிறது நல்லது இல்ல அம்மா! நீ நிம்மதியா ஊருக்குப் போம்மா!” என்றார்

அன்று இரவு வயசாளிகள் இரண்டு பேருக்கும் தூக்கம் வரலை. ஆதரவு இல்லாத நிலையை நினைச்சு நினைச்சு கலக்கினாங்க. பேரக்காள் நிம்மாண்டு நாயக்கரின் காதில் மெதுவாகக் கேட்டாள். ‘‘எங்கேயாவது கண்காணாத இடத்துக்குப் போயிருவோமா?’’



அவருக்கும் அதுதான் சரி என்று பட்டது. சரி என்றார் நிம்மாண்டு. இரண்டு நாள் கழித்து நடுவுள்ள மகள் வந்தாள். அப்பா அம்மாவுக்குப் பிடிச்ச பலகாரம் பண்டமெல்லாம் கொண்டாந்து தந்தாள். அவர்கள் நிலைமையைக் கண்டு கண்ணீர் விட்டாள். போகும் போது அப்பா அம்மா கையில் கொஞ்சம் பணம் கொடுத்து. “நினைக்கிறத வாங்கித் தின்னுங்க!” என்று சொல்லி விட்டுப் போனாள்.

ஊரைவிட்டுப் போக நினைச்சிக்கிட்டு இருந்த அவங்களுக்கு இந்தப் பணம் உதவியாக இருந்தது. மகள் கொடுத்த பணத்தை வைத்துக் கொண்டு ஒரு நாள் அதிகாலை வயசாளிகள் இருவரும் கோவில்பட்டி புறப்பட்டுப் போனார்கள். தெரிந்தவர்கள் கண்ணில் படாமல் பயந்து பயந்து நடந்தார்கள். கம்மலையும் வெள்ளி அரணாக் கயிற்றையும் விற்றார்கள் சாமியைக் கும்பிட்டு ரயிலேறி மதுரைக்குப் போனார்கள்.

மதுரை ரயில்வே ஸ்டேசனில் கணக்கு வழக்கில்லாது கூட்டம். என்ன செய்யிறது. எங்க போறதுன்னு தெரியாம இரண்டு பேரும் உட்கார்ந்து இருந்தாங்க.

அந்தக் கூட்டத்திலேயும் பேரக்காகிட்டே ஒரு சின்ன குழந்தை வந்து ஒட்டிக்கிட்டது. பேரக்கா குழந்தையை அணைச்சிட்டாள். குழந்தையின் குடும்பம் இராமேஸ்வரம் போகுது. எங்க போறதுன்னு தெரியாம முழிச்சிட்டு இருந்த இவங்களும் ராமேஸ்வரம் பேயிடலாம்னு முடிவு பண்ணி புறப்பட்டுப் போனாங்க.

ரயில் பேரக்காளைக் குலுக்கிக் குலுக்கித் தாலாட்டியது பேரக்காள் ரயிலில் தூங்கினாள். “எப்பேர்ப்பட்ட குடும்பத்தில் பிறந்த பொண்ணு! இப்படி ஆயிட்டதே”ன்னு பேரக்காளைப் பார்த்து நிம்மாண்டு நினைத்தார். நினைக்கவும் அவருக்குக் கண் கலங்கியது.

இவர்கள் கண்காணாமல் போன சமாச்சாரம் முத–ல் ஊருக்குத் தெரிந்து விட்டது. பிறகுதான் பிள்ளைகளுக்குத் தெரிந்தது. பிள்ளைகள் மனசு பதறுச்சு. என்ன இருந்தாலும் பெற்ற தாய் தகப்பன் இல்லையா.

மருமக்கமார்கள் ‘எங்கனயாவது கிடக்கும்’னு எரிச்சலோடு சொன்னங்க.

ஒரு நாள் ஒரு செய்தி காட்டுத் தீ போல் வந்தது. “கிணத்துல ஒரு தாத்தாவும் பாட்டியும் பொணமா மல்லாக்க மெதக்குறாங்களாம்!

எல்லோரும் ஓடிப்போய்ப் பார்த்தாங்க. ஆனா இவங்க இல்ல.

பிள்ளைகள் கொஞ்ச நாள் தாய் தகப்பனை ஓடி ஆடித் தேடினார்கள். ஒரு தகவலும் கிடைக்கலை. நிம்மாண்டு நாயக்கரும் பேரக்காளும் கண்காணாமல் போய் நாலைஞ்சு வருசமாச்சு. ஊரு மறந்து போச்சு.

ஒரு நாள் நேத்திக்கடன் செலுத்த பாறைப்பட்டி நாயக்கர் ராமேஸ்வரம் போனார். சாமி கும்பிடுவதற்காகக் கோவிலுக்குப் போனார். கோவில் வாயி-ல் இரண்டு பக்கத்திலும் பிச்சைக்காரங்க உட்கார்ந்திருந்தாஙக. பாறைப்பட்டி நாயக்கர் தற்செயலாத் திரும்பிப் பார்த்தார். திகைச்சு நின்னுட்டார். எங்கேயோ பார்த்த முகமா இருக்கேன்னு கவனிச்சார். பதறிப்போனார். அந்தப் பிச்சைக்காரர்கள் வரிசையில் நிம்மாண்டு நாயக்கரும் பேரக்காளும் இருந்தாங்க. ரெண்டு பேர் தலையும் மொட்டை போட்டிருக்கு. பாறைப்பட்டியால தாங்க முடியல. தலையில தலையில அடிச்சுக்கிட்டார் ‘கோன்னு’ அழுதார்.

வயசாளிகள் இருவரும் அழவில்லை. கண்ணில் இருந்து ஒரு பொட்டுக் கண்ணீர் வரலை. நிம்மாண்டு நாயக்கர் பாறைப்பட்டி நாயக்கரை முன்னப் பின்னத் தெரியாத ஆளைப்பார்ப்பது போல் பார்த்தார்.

பேரக்காளுக்குப் பாறைப்பட்டி நாயக்கரை அடையாளம் தெரிந்தது. வாயைத் திறந்து ஒரே ஒரு வார்த்தை மட்டும் பேசினாள்.

“எம்பிள்ளைங்க எல்லாரும் நல்லா இருக்காங்களா?”



**பயிற்சி**

கீழ்காணும் தலைப்புக்களில் நாற்பத்தைந்து வரிகளுக்கு மிகாமல் கட்டுரை எழுதுக.

1. பாகப்பிரிவினைக்கு முன்னரும் பின்னரும் உள்ள நிம்மாண்டு நாயக்கரின் வாழ்க்கை.

2. ‘பெத்த மனம் பித்து பிள்ளை மனம் கல்லு’ என்ற பழமொழியை இக்கதை கொண்டு விளக்குக.

# 6. சொந்த வீடு

**-ஆர். சூடாமணி**

அரண்மனை மாதிரி வீடு என்பார்களே, அதுபோன்ற விசாலமான வீடு. பெரிய பெரிய அறைகள் இரண்டு கட்டு. முற்றம் கூடம் தாழ்வாரம் என்று தினம் ஒரு கல்யாணம் செய்யலாம். ஏன், அவர் பெரிய பெண்ணுக்கு நிஜமாகவே இந்த வீட்டில் வைத்துத்தான் கல்யாணம் நடந்தது.

அரண்மனை ஆனால் வேறொருவரின் அரண்மனை விட்டுப் போகும் காலம் வந்துவிட்டது. சொந்தக்காரன் போகச் சொல்லிவிட்டான்.

அவன் எப்போதோ போகச் சொல்லியிருப்பான். கார்த்திகேயன் “நான் சொந்தமா ஃப்ளாட் வாங்கப்போறேன் சார். வாங்கினதும் அங்க போயிடுவோம். சீக்கிரமே ஏற்பாடாயிடும். அதுவரை கொஞ்சம் பொறுத்துக்குங்க. வாடகை வேணும்னாலும் சேர்த்துத் தரேன்.’’ என்று பேசி கடந்த ஐந்து மாதங்களாக ஆயிரம் ரூபாய் வாடகை தந்து கொண்டிருந்தான். இத்தனை பெரிய வீட்டுக்கு இந்த நாளில் ஆயிரம் ரூபாய் கூட பிச்சைக்காசுதான். ஆனால், பழைய வட்டாரம் ‘பாஷ் லொக்கா-டி’ இல்லை. கட்டடமும் ‘ஹைதர் கால’த்து வகை. ஆகவே, முன்பை விடக் கூடுதலான முந்நூறு ரூபாயை வீட்டுக்காரர் ஒப்புக்கொண்டு ‘வாய்தா’ தந்திருந்தார். மேலும், இக் குடும்பத்துக்கு வெகு காலம் பழக்கப்பட்டவர். வீட்டைத் தரைமட்டமாக்கி அங்கு அடுக்கு மாடிக் கட்டிடம் கட்டி ஒவ்வொரு தளத்தையும் மூவாயிரம், நாலாயிரம் என்ற வாடகையில் கம்பெனிகளுக்கு விடுகிற திட்டத்தைச் சிறிது காலம் இவர்களுக்குத் தள்ளிப்போட இசைந்தார்.



இப்போது கார்த்திகேயன் ஃப்ளாட் வாங்கி விட்டான், அடையாறுக்கு அருகே இடம். தற்கால பாணி வீடு. வாஷ்பேஸின், மேனாட்டு வகை ஃப்ளஷவுட். சுவருக்குள் அமைந்த ‘வார்ட்ரோப்’, கண்ணுக்குத் தெரியாத மின் இணைப்பு கீஸருக்கு வசதி, மிக்ஸி, கிரைண்டர்களுக்குத் தயாராய் சாக்கெட்டுகள் என்று எல்லாம் உண்டு. புதிய காலனியின் நாகரிகச் சூழல் ஜன்னல்களைத் திறந்தால் “முடியைப் பிய்த்துக் கொண்டு போகிற’’ கடற்காற்று. கார்த்திகேயனை விடவும் அவனுடைய ‘டீன் ஏஜ்’ பெண் ஜோதிக்கு இன்னும் அதிக மகிழ்ச்சி உற்சாகம்.

‘‘அப்பாடா, இனிமே வெக்கப்படாம என் ஃபெரண்ட்ஸையெல்லாம் வீட்டுக்கு இன்வைட் பண்ணலாம்’’ என்றாள்.

நாகராஜன்தான் சோர்ந்து காணப்பட்டார். தம் அறையில் பிரமை பிடித்தாற்போல் உட்கார்ந்திருந்தார். பிள்ளை சொந்தமாய் வீடு வாங்குகிறான் என்ற மகிழ்ச்சி, பெருமை எல்லாம். ஆனால் வீடு என்ற சொல்-ல் உடனுக்குடன் மனசில் பதிந்தது. அவருக்குப் பழகிய வீட்டு இலக்கணம்தான். பெரிசு பெரிசாய் நிறைய அறைகள். விசாலமான உறைவிடம். காலார வீட்டுக்குள் இரண்டு சுற்று நடந்து வந்தாலே தேகப்பயிற்சி கிடைத்துவிடுகிற விஸ்தாரம்.

பால் காய்ச்சிக் குடிக்க உற்சாகமாய்க் குடும்பத்தின் ரோடு சென்ற அன்றுதான் யதார்த்தம் முகத்தில் அறைந்தது. ஃப்ளாட் என்பதன் அர்த்தம் அவருக்கு மட்டும் தெரியாதா? ஃப்ளாட்டும் வீடுதான் என்றாலும் இரண்டுக்கும் உள்ள வேறுபாடு கண்கூடாய் பார்க்கும் வரை ஏன் உணர்வில் பதிவாகவில்லை?

இது ‘இரு படுக்கையறை ஃப்ளாட். பதினாலுக்குப் பத்தடி அறைகள். நடுவில் அதற்குச் சற்று சிறிய அளவில் பொது ஹால். அங்கு அடுக்கி அலங்கரிக்க மருமகளும், பேத்தியும் நிறைய நாகரிகப் பதுமைகள் வாங்கப் போகிறார்கள். இன்னும் சோபா செட்டும் டி.வியும் வேறு இருக்கிறது. பத்துப் பேரை

சேர்ந்தாற்போல உட்காரவைத்து இலைபோட இடம் கிடையாது. ஒரு மூளையில் பெரிய அண்டாவின் அளவும் வடிவமும் கொண்ட, காது வைத்த, பித்தளைத் தொட்டியில் குரோட்டன்ஸ் வைக்க வேண்டுமென்று பேத்தி தீர்மானமாய்ச் சொல்லிவிட்டாள். இப்போதெல்லாம் அதுதான் ஃபாஷனாம். சிநேகிதிகளை வீட்டுக்கு அழைக்கக் கூடியவர்களாக்கும் தகுதிகளில் அந்த அண்டாத் தொட்டியும் ஒன்று என்று தோன்றியது. பேத்திக்கு ஓர் அறை. மற்றொன்று மகனுக்கும் மருமகளுக்கும் முன்னால் இருந்த சின்ன வராந்தாவின் முனையில் மரத் தடுப்பால் அவருக்கு ஓர் அறை உருவாக்கிக் கொடுக்க கார்த்திகேயன் எண்ணியிருந்தான்.

“எப்பவும் போல் உங்களுக்குன்னு ஒரு தனி ரூம் இருக்கும் அப்பா. அங்கே நீங்க படிக்கிறதோ, ஓய்வெடுக்கிறதோ எல்லாம் செய்யலாம். வீட்டில் யார் வந்தாலும் போனாலும் உங்களுக்குத் தொந்தரவு இருக்காது. உங்க ப்ரைவஸிக்கு இடைஞ்சல் இல்லை. நீங்களாய் இஷ்டப் பட்டா மத்தவங்களோடு கலந்துக்கலாம். ராத்திரியில் மட்டும் பாதுகாப்பாய் உள்ளே ஜோதி ரூமில் படுத்துக்குங்க.’’

மகன் நல்லவன். அவருக்கு வேண்டியதையெல்லாம் கவனித்துச் செய்கிறவன்.

“அதெல்லாம் சரிதான் கார்த்தி. ஆனா.....’’ என்று நாகராஜன் இழுக்கிறார். பால் காய்ச்சிக் குடித்துவிட்டு வீடு திரும்பிய அன்று மாலை.

“என்ன ஆனா?’

“ரொம்ப சின்ன இடமாயிருக்கேடா!’’

கார்த்திகேயன் புருவங்கள் வியப்பில் உயர்ந்தன.

என்னப்பா சின்னது? நாம இருக்கறது நாலே பேர். நாளைக்கே ஜோதி கல்யாணமாகிப் போய்ட்டால் மூணு பேர்தான். நம்ம தேவைகளுக்கு அந்த ஃப்ளாட் போதாதா? இப்ப இந்த வீட்டுல பாதி இடம் பூட்டித்தானே கிடக்குது?’’



ஒரு காலத்தில் இங்கே நிறைய மனுஷங்க புழங்கி இருக்காங்க. தெரியுமா? உங்கம்மா உயிரோடு இருந்தப்ப; உனக்கும் உன் அக்கா, தங்கச்சிகளுக்கும் கல்யாணமா கறதுக்கு முந்தி; நம்ம தூரத்து உறவுக்காரங்கள்லாம் இங்கே வந்து தங்கிப் படிச்சி கிட்டிருந்த காலத்துல.’’

“அந்த காலமெல்லாம் முடிஞ்சு போச்சுப்பா; இப்ப இந்த வீட்ல நாம நாலு பேர்தான்னு எத்தனை வாட்டி ஞாபகப்படுத்தணும்? முந்தி புழங்கின இடத்தில் முக்கால்வாசி இப்போ நமக்குத் தேவையில்லாம தட்டுமுட்டு சாமான்கள் போட்டுப் பூட்டி வச்சிருக்கோம். வீடு ‘ஹோ’ன்னு இருக்கு. நீங்க ஒண்டி ஆளாய் உங்க ரூமில் கமலாவும் நானும் இன்னொரு ரூமில் ஜோதி மூணாவது மூளையில் ஒருத்தரையொருத்தர் தேடிக்கிட்டு கண்ணாமூச்சி ஆடலாம். அத்தனை காலி இடம்.’’

“இவ்வளவு சாமான்களும் அந்த ஃப்ளாட்டில் எப்படிக் கொள்ளும்?’’

“இவ்வளவு சாமான்களையும் யார் அங்க எடுத்துட்டுப் போகப் போறாங்க?’’

நாகராஜன் திடுக்கிட்டார்.

‘‘பூட்டி வச்சிருக்கிற சாமானெல்லாம் நமக்குத்தேவைப்படாதப்பா! பழைய மரச்சாமான்கள் கள்ளிப்பெட்டிகள், கட்டில்கள், யாருக்கானும் கொடுத்துடலாம். இல்லே வித்துடலம்.’’

‘‘யாரு வாங்குவாங்களாம், பழங்கால கிராமபோனும் உடைஞ்சுபோன ஊஞ்சப்பலகையும் மாதிரியான சாமான்களை?’’ என்றாள் மருமகள் இடையில்.

‘‘சரியாய்ச் சொன்னே கமலா. இத பாருங்கப்பா. இதெல்லாம் சும்மா இடத்தை அடைச்சுக்கிட்டுத்தூசி சேர்த்துக்கிட்டு இருக்கற அநாவசியப் பொருள்கள்தான். நம்ம ஃபர்னிச்சரையும் தான் பாருங்க. யானை யானையா

சோபாக்களும் பீரோக்களும்! இதையெல்லாம் லாரி வச்சு மர்ரே கம்பெனிக்கு அனுப்பிச்சிட்டு லேசா, எளிமையா, ஆனா நாகரிகமான சோபா செட் வாங்கி நம்ம ஃப்ளாட் ஹால்ல போடப் போறேன்.

''பீரோ...... பீரோக்களையுமா போட்டுடப் போறே?'' என்றபோது நாகராஜன் குரல் லேசாய் நடுங்கியது.

பின்னே? இத்தனை பீரோக்களுக்கு அங்க இடம் எது? இந்த வீட்டுல ரூமுக்கு நாலு பீரோ, முக்கால்வாசி பூட்டியே கிடக்குது. சாவி எங்கேன்னு கூடத் தெரியாது. எந்தக் காலத்திலோ யாரோ உபயோகிச்சா இப்போ என்னப்பா? நம்ம தேவைக்கு ஒரு காட்ரெஜ் பீரோ, இன்னும் ஒண்ணு இருந்தா போதும். உங்களுக்குப் படிக்கிறதில் ஆசை. அதனால் உங்க புஸ்தகங்களுக்கு ஒரு சின்ன பீரோ. மத்தபடி பீரோ எதுக்கு? புது மோஸ்தர் கட்டடத்தில் பில்ட்–இன் வார்ட்ரோட் இருக்கு. சமையால் ரூமில் பில்ட்–இன் ஷெல்ப்கள் இருக்கு. வேற எதுக்கு பீரோ.''

நாகராஜன் சிறிது நேரம் தலைகுனிந்து பேசாதிருந்தார். திடீரென்று சொன்னார். ''இல்லடா கார்த்தி, இத்தனை சாமான்களையும் தூரப் போட்டுடறது சரின்னு தோணலே அந்த ஃப்ளாட் வேணாம்......''

''ரொம்ப அழகாயிருக்குப்பா, கோவாப்ரேடிவ் சொஸைட்டியில் முதல் தொகை டௌன் பேமென்ட் செஞ்சுபாலெல்லாம் காய்ச்சிக் குடிச்சிட்டு வந்தப்புறம், பாழடைஞ்ச வீடு மாதிரி இந்தப் பெரிய இடத்தைக் கட்டிக் கிட்டு ஆயுசுக்கும் கிடக்கணும்னுதான் உங்களுக்கு ஆசையா? எனக்கு அந்தத் தண்டனை கொடுக்காதீங்க?

“இல்லேடா, நான் அப்படி சொல்லலே.....''

“நீங்க இருக்கணும்னு சொன்னாலும் வீட்டுக்காரர் இனிமே பொறுக்கமாட்டார். முப்பத்தோராம் தேதி நாம கிளம்பிப் போனதுமே ஒண்ணாந்தேதி காலையில் மம்முட்டி கடப்பாரையோட இங்க வாசல்ல ஆளுங்க வந்து நிக்கப் போறாங்க.''



நான் இங்கேயே இருக்கணும்னு சொல்லலே கார்த்தி! அவ்வளவு சின்ன ஃப்ளாட் வேணாம்னுதான் சொல்றேன். கொஞ்சம் தாரளமாய் இடம் இருக்காப்ல பாரேன்..... இன்னும் நாலு பீரோ வைக்க முடியறாப்பல......''

''இந்த ஃப்ளாட்டுக்கே எனக்கு அஞ்சு லட்சம் ஆகப் போகுது தெரியுமா? ஹவுஸ் லோன் வாங்கியிருக்கேனே, அதைப் பத்தி எத்தனையோ கவலை. இத்தனையும் தாண்டி ஏதோ நம்ம மகன் சொந்த வீடு வாங்கறேன்னு பாராட்டத் தெரியாட்டியும் குறை சொல்ல நல்லாத் தெரியுது.''

''கோச்சுக்காதேடா! நான் அதுக்குச் சொல்லலே..... ஏ கார்த்தி! கார்த்தி!''

அவர் கூவக் கூவ அவன் திரும்பிப் பாராமல் எழுந்து சென்றான்.

சே, இந்த அப்பா! ஒவ்வொரு குடும்பத்தில் பிள்ளை அப்பனை அநாதரவாய்த் தெருவில் விட்டுவிடுகிறான். நான் அப்படியா? எவ்வளவு அக்கறையோடு பார்த்துக் கொள்கிறேன். முழங்கால் மூட்டு வலியால் படி ஏற சிரமப்படப்போகிறாரே என்று கிரௌண்ட் ஃப்ளோரில் இடம் வாங்கியிருக்கிறேன். இத்தனைக்கும் மாடியில்தான் இன்னும் நல்ல காற்று. தெரு இரைச்சல்களால் தொல்லை இல்லை. சே! பெற்ற தகப்பனாயிருந்தாலும் கொஞ்சம் நன்றியுணர்வு வேண்டும்.....''

நாகராஜன் நின்ற இடத்தில் வெகு நேரத்தில் வெகு நேரம் கல்லாய் இருந்தார். கார்த்தி கோபித்துக் கொண்டு விட்டான். இனி எதுவும் சொல்வதில் பயனில்லை.

அவர் மெல்லத் தம் அறைக்கு நடந்தார். அவருடைய பிரத்தியேக அறை. எப்பவும் போல் உங்களுக்குன்னு ஒரு தனி ரூம் இருக்கும்'' என்றானே, இந்த அறையும் அந்த மரத்தடுப்பும் பொந்தும் ஒன்றா?

மூக்குக் கண்ணாடியைத் தூக்கிவிட்டுக் கொண்டு அறையைச் சுற்றி அவர் பார்வையை மெல்ல செலுத்தினார்.இந்தப்பக்கம் மூன்று.அந்தப்பக்கம் மூன்று பீரோக்கள். பெரியவை.

ஒவ்வொன்றிலும் முட்ட முட்டப் புத்தகங்கள். பற்பல பொருள் பற்றி. தமிழ், ஆங்கிலம் வடமொழி.

எத்தனை காலமாய்ச் சேர்த்தவை! ஆண்டுகள் ஒன்றா இரண்டா! நாற்பது ஆண்டுகள் சேகரிப்பு.

இளமைப் பருவத்தி-ருந்தே முளைவிட்ட ஆசை உத்தியோக காலத்தில் நிறைவு காண ஆரம்பித்தது. இரும்புச் சாமான்கள் நிறுவனம் ஒன்றில் இருபத்திரண்டு வயதில் வேலைக்குச் சேர்ந்தபோது மாதச் சம்பளம் இருநூற்றைம்பது ரூபாய். அதில் நூறு ரூபாயைப் புத்தகம் வாங்கவென்று எடுத்து வைத்து விடுவார். மிச்சத்தில் ஓர் ஆள் அதிக சிரமமின்றி வாழ முடிந்தது அந்தக் காலத்தில். எந்த நெருக்கடியிலும் அந்தப் பத்து ரூபாயைத் தொட்டதில்லை.அது புத்தகங்களுக்காக மட்டுமே. பின்னால் நிலைமையும், சம்பளமும் உயர உயர புத்தகப்பணமும் உயர்ந்தது. ''விலை இரண்டு அணா'' என்று அச்சிட்ட உள்ளங்கையளவு தல புராணங்களி-ருந்து இப்போது இரண்டு மாதம் முன்பு புத்தகக் கண்காட்சியில் இரண்டு பாகங்களில் இந்திய வரலாற்று நூல் நூற்றெழுபது வரை ஆயிரத்தைந்நூற்றுக்கும் மேற்பட்ட புத்தகங்கள் அவரை நட்புடன் பார்த்துக் கொண்டு இந்த பீரோக்களில் நிற்கின்றன.

ஒவ்வொரு பீரோவினுள்ளும் புத்தகங்களைக் கண்களால் கொஞ்சித் தடவினார். பிறகு திறந்து கைகளால் தடவினார். தொட்டுச் சீராட்டினார்.

தேவையானால் ஒருவேளை சோறுண்டு அவரால் வாழ முடியும். இரண்டே ஆடைகளை மாற்றி மாற்றி உடுத்திக் கொண்டு வாழ முடியும். பொந்து அறைக்குள் சந்தோஷமாய் வாழ முடியும். ஆனால் இந்தப் புத்தகங்கள் இல்லாமல் வாழ்வது......?

இவை யாவற்றையுமே முறை வைத்துக் கொண்டு ஒன்று விடாமல் திரும்பத் திரும்பப் படிக்கிறார் என்பதில்லை. மிகவும்.



பிடித்தவை என்று சில உண்டு, திரும்பத் திரும்பப் படிக்க வேறு சில, ஆண்டுக்கணக்காய்த் தொடப்படாமலேயே பீரோவுக்குள் தூசி படிந்து பழுப்பாகிக் கொண்டு வருவதும் உண்டு. அதற்காக அவற்றைத் துறந்துவிட முடியுமா? இந்த நூல்கள் அனைத்தும் அவர் வாழ்ந்த நாட்களின் சாட்சி. அவர் மனநிறைவின் ஸ்தூல அடையாளம். படிக்காத நேரங்களில் கூட அவற்றின் பின்னணியில் மௌனமாய் உட்கார்ந்து கொண்டிருக்கும் போது சொந்த வீட்டில் இருப்பது போன்ற இதம் சுரக்கிறது.

ஒரு சின்ன பீரோவுக்குள் அடங்கும் அறைக்குத்தானே அனுமதி கொடுக்கிறான். மிஞ்சிப் போனால் நூறு புத்தகங்கள் தேறுமா? நூற்றைம்பது? இருநூறா? எவற்றைத் தேர்ந்தெடுப்பது எவற்றையெல்லாம் விடுவது? உன் உடம்பின் அங்கங்களில் இரண்டொன்று வைத்துக் கொண்டு மற்றதையெல்லாம் வெட்டி எறி என்றால் என்ன பதில் சொல்ல? சுண்டுவிரலேயானாலும் வெட்டிவிட மனம் வருமா?

தட்டுமுட்டு சாமான்கள் போலவும். பழங்காலக் கட்டில் சோபாக்கள் போலவும் இவற்றை அநாவசியம் என்று தூக்கிப்போடுவதா?

பேத்தியிடம் புத்தக ஆசையை வளர்க்க அவர் பலதரம் முயன்றதுண்டு. ஆனால் அவர்களுக்குத் தொலைக்காட்சி பார்ப்பதி-ருந்த ஆர்வம் புத்தகம் படிப்பதில் இல்லை. ''இவ்வளவு பெரிய புஸ்தகத்தை யார் தாத்தா உக்கார்ந்து படிப்பாங்க? போர். இந்தக் கதையைத்தான் விறுவிறுப்பாக பி.பி.சி.யில் சின்ன சீரியலாய்க் காட்டினாங்களே'' என்பான். வண்ணப் படங்களைக் காட்டிச் சுவையூட்டப் பார்த்தால் ''இதைவிட தத்ரூபமா இந்தக் காட்டு மிருகங்களைப் பத்தி ஒரு டாகுமெண்டரி வந்துதே டிவி.யில!'' என்பாள்.

தலைமுறை இடைவெளி என்பது இதுதானா? அல்லது நான்தான் இந்த ஜெட் யுகத்தில் வாழவே தகுதியற்றவனாகி விட்டனோ? நானும் தூசி படிந்து பழுப்பாகி.......''

புத்தகங்களைத் தொட்டுத் தடவிய விரல்கள் நடுங்கின. கண்களில் ஈரம் திசை கவித்தது.

என்ன செய்வான் என் புத்தகங்களை? ஏதாவது லைப்ரரிக்காவது நன்கொடையாய்த் தருவானா அல்லது கிலோவிற்கு இவ்வளவென்று பேரம் பேசி பேப்பர்காரனிடம்......

முருகா!

உள்ளுக்குள் மௌனமாய் ஓர் அலறல் வெடித்தது. கண்முன் இருள் சூழ ஆரம்பித்தது தெரியும், உடல் தரையைத் தொட்டது தெரியாது.

மங்கல் மாங்கலாய், கருவளையங்களாய், கண்ணினுள் ஏதோ சுழற்சிகள். உரக்கக் கத்துவதுபோல் இருந்தது. முடிவற்ற பள்ளத்தின் இருளில் மௌனமாய் மூழ்குவது போலவும் இருந்தது. இது மகனின் முகம்தானே? ஆனால் அடையாறு ஃப்ளாட் அல்லவா இந்த முகத்தோடு சிரிக்கிறது? இன்னொரு பக்கம் அழுகையொலி, பீரோக்களிலிருந்தா? கைகால்களை உதைத்துக் கொள்கிற அமைதியின்மை. மீண்டும் இருள். மீண்டும் மங்கலாய் ஒளி ஊடுருவல். வெள்ளத்தில் சிறிது சிறிதாய் நீச்சல் போட்டு மூச்சு வாங்க ஒருவாறு மெல்லத் தலையை நீர்மட்டத்திற்கு மேல் தூக்கி நிமிர்ந்தபோது எதிரே இருந்த முகம் ஒரு கணம் மங்கிக் குழம்பிப் பிறகு தெளிந்தது.

“அப்பா கண்ணை விழிச்சிட்டார்!

கண்களை மலர்த்தினார். இப்போதுதான் தூங்கப் போய்க் கண் விழித்ததுபோல் இருந்தது. ஆனால் சுவர்க் காலண்டரில் மூன்று தாள்கள் கிழிக்கப்பட்டிருந்தன.

“அப்பா”

கார்த்திதான் எதிரில், கண்களை அசைத்தபோது பக்கத்து மேஜைமேல் ஏதோதோ பாட்டில்கள். மருந்துகள்.

“இப்போ எப்படிப்பா இருக்கு?”

கார்த்திகேயன் கை அவர் நெற்றியில் படிந்தது. “அப்பாடா, ஜுரம் இறங்கியிருக்கு.”

மருமகளின் முகம் நாற்கா-யருகில் அவன் பின்னால் தோன்றியது. புன்னகையுடன்.



“கமலா, டாக்டருக்கு போன் பண்ணி அப்பாவுக்கு விழிப்பு வந்திடிச்சுன்னு சொல்லு.”

எனக்கு... இப்போது தந்தையும் மகனும் மட்டுமே.

“என்ன ஆச்சு கார்த்தி?” அவர் குரல் அவர் காதுக்கே வித்தியாசமாய் மெ-ந்து ஒலித்தது. யாரோ எங்கிருந்தோ பேசுவதுபோல்.

“கடுமையான காய்ச்சல்ப்பா. நூத்துநாலு டிகிரி. கண் திறக்காம மயக்கம். மூணு நாளாச்சு. பயந்தே போய்ட்டோம்... டாக்டர் நல்லா இருக்கணும்.”

மூன்று நாட்கள். மீண்டும் காலண்டர் மேல் கண்கள் நினைவுகள் மெல்லப் புரண்டு கொடுத்தன. வீட்டைக் கா-செய்ய இன்னும் ஒன்பதே நாட்கள்.... கண்களுக்குள் உப்பு உறுத்தியது.

“மயக்கத்தில் ஏதேதோ பேசினீங்கப்பா,” அவன் குர-லும் முகத்திலும் இரக்கம் குரல் தாழ்ந்தது. “என்கிட்ட முதல்லயே வெளிப்படையாகச் சொல்லி இருக்கக் கூடாதா?”

கார்த்தி அவர் புறங்கை நரம்புகளை மெல்ல நீவிக் கொடுத்தான்.

“கவலைப்படாதீங்க. உங்கள் அத்தனை புஸ்தகங்களும் நம்மோட வரும். எப்படியோ நான் வச்சுக் கொடுக்கறேன்.”

வெளியறையில் மருமகள் டாக்டருக்கு டெ-போன் செய்யும் குரல் கேட்டது.

**பயிற்சி**

கீழ்க்காணும் தலைப்புகளில் நாற்பத்தைந்து வரிகளுக்கு மிகாமல் கட்டுரை எழுதுக.

1. நாகராஜனும் புத்தகங்கள் மீது அவருக்குள்ள ஆர்வமும்.
2. கார்த்திகேயனின் பன்பு நலன்கள்.

# 7. விடிவதற்குள்....

**-அசோகமித்திரன்**

பங்கஜத்துக்கு முத்துவை எழுப்புவதற்கு வேதனையாகத் தான் இருந்தது. ஒன்றுக்குள் ஒன்றாக நான்கு பிளாஸ்டிக் வாளிகளை எடுத்து வந்து வாசல்படியில் வைத்தாள். இனியும் தாமதிக்க முடியாது என்று தீர்மானித்து "முத்து, முத்து" என்று அழைத்தாள்.

முத்து படுக்கையில் அசைந்து கொடுத்தான், ''முத்து, எழுந்திரு. என் கண்ணோல்-யோ,'' என்றாள். அவ்வளவு இருட்டிலும் அவன் ஒருமுறை கண் விழித்துப் பார்த்தது அவளுக்குத் தெரிந்தது.

"இதுக்குள்ளே தண்ணி வந்திருக்காதும்மா'', என்று முத்து சொன்னான்.

"வந்துடும்டா, கண்ணு. தெருக்காரா எல்லாம் போயிட்டா. இப்போவே போனாத்தான் இரண்டு மணிக்காவது தண்ணி பிடிச்சுண்டு வந்து கொஞ்சம் கண்ணசரலாம்.''

"நீ போய் பக்கெட்டை வைச்சுட்டு வாம்மா. நான் இதோ வந்துடறேன்.''

பங்கஜம் வாசல் கதவைத் தாளிடாமல் வெறுமனே சாத்திவிட்டுத் தெருவுக்கு வந்தாள். ஒரு தெரு விளக்கும் எரியாது. போனாலும், வீட்டை விட வெட்ட வெளியில் கண் நன்றாகத் தெரிந்தது. விறு விறுப்பாகப் பல உருவங்கள் வந்து போய்க் கொண்டிருந்தன.

பங்கஜம் சாலையைக் கடந்து, எதிர்சாரியில் மூடிக்கிடந்த பல கடைகள் நடுவே மறைந்து கிடந்த ஒரு குறுகலான சந்துக்குச்



சென்றாள். சந்து இடைவெளியில் கா- வாளியே இருமுறை பக்கத்துச் சுவரில் இடித்தது. சந்து ஒரு வீட்டின் முற்றத்தில் முடிந்தது. அந்த இருட்டிலும் அங்கு டஜன் கணக்கில் தவலைகளும், வாளிகளும் பரத்தி வைத்தது தெரிந்தது. சுவரோரமாகப் பதித்து வைத்திருந்த தண்ணீர் பம்பு அருகே நான்கைந்து ஆண்கள் இருந்தார்கள். அதில் ஒருவர் பங்கஜத்தைப் பார்த்து, "இனிமே இங்கே வராதீங்கன்னு போன தடவையோ சொன்னேனே?'' என்றார்.

"இன்னிக்கு மட்டும் தயவு பண்ணுங்க. நாளைக்கு வேறே இடத்துக்குப் போறேன்.'' என்று பங்கஜம் சொன்னாள்.

"இங்கே வீட்டிலே இருக்கிறவங்களுக்கே தண்ணி பத்தலே. சும்மா சும்மா வந்து கூட்டம் கூடினா?''

''பக்கெட்டை வைச்சிட்டு வெளியே நில்லுங்க. தண்ணி வந்தா உள்ளே வந்துக்கலாம்.''

பங்கஜம் வாளிகளை ஒரு மூலையில் வைத்துவிட்டு மீண்டும் சாலைக்கு வந்தாள். நட்ட நடுநிசியில் அப்படிச் சாலையோரமாக நிற்பது அவளுக்கு அசாதாரணமாகத் தோன்றாமல் போய் மாதக்கணக்கில் ஆயிற்று. கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் கிடப்பது சாதாரணமாக இருந்தது. குழாய்த் தண்ணீர் ஒரு நாள் விட்டு ஒரு நாள் வருவதாகப் பேச்சு. ஆனால் வீட்டுக் குழாயில் வராது. எங்கே வருகிறதென்று தேடிப்பிடித்து அது வரும் இருமணி நேரத்தில் பரபரக்க ஏராளமானவரோடு தேவையற்ற துவேஷம் வளர்த்து, இரு பாத்திரங்களில் வண்டலும் வடிசலுமாகத் தண்ணீர் பிடித்து எடுத்து வந்தால், இரு நாட்களுக்கு அதைச் சமையலுக்கும் வைத்துக் கொண்டு குடி தண்ணீராகவும் கொட்டிக்கொள்ள வேண்டும். இன்றிரவு இங்கு ஒருவழியாகச் சமாளித்தால் நாளை மறுநாள் இப்படி நடுத்தெருவில் அலைய மனதைத் திடப்படுத்திக் கொண்டால் போதும்.

நடைபாதை ஓரக்கல்–லும் இன்னும் பலர் காத்துக் கிடந்தார்கள். அங்கு சாதாரணமாகக் கிடக்கும் அசுத்தத்தில் பகல் வெளிச்சத்தில் நிற்கக்கூட அருவருப்பாயிருக்கும்

தொளதொவென்று ஒரு சட்டையில் ஒழுங்காகப் பொத்தான்கூடப் போடாமல் முத்து வந்து சேர்ந்தான். பங்கஜம் முத்துவைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டாள். “குழந்தை தூங்கிண்டு இருக்காளா? என்று கேட்டாள்.

“நான் பார்க்கலேம்மா. ஆனா அவ அழலே,” என்று முத்து சொன்னான்.

“கதவைச் சாத்திண்டுதானே வந்திருக்கே?”

“ஆமாம்.”

“நீ இங்கேயே நில்லு. நான் தவலையை எடுத்துண்டு ஐஸ்டெப்போலே ஒரு தடவை தண்ணி பிடிச்சிண்டு வந்திடறேன்”.

“இங்கே தண்ணி வந்துடுத்தா?”

“இன்னம் வரலே. வீட்டுக்காரர் இப்போதான் பம்பை மாட்டிண்டு இருக்கா.”

பங்கஜம் சாலையைக் கடக்கவிருந்தவள் சட்டென்று நின்றாள். அசாத்திய வேகத்தில் ஒரு லாரி அவளைக் கடந்து சென்று மறைந்தது. அதை அடுத்து இன்னும் ஒரு காரும் மோட்டார் சைக்கிளும் பறந்து சென்றன.

பங்கஜம் முத்துவைக் கவலையோடு திரும்பிப் பார்த்தாள். பிறகு அவள் வீட்டுக்கு ஓட்டமும் நடையுமாகப் போனாள். தெருவில் அப்போதுதான் யாரோ கைவண்டியில் எங்கிருந்தோ தண்ணீர் பிடித்துக்கொண்டு போயிருக்கிறார்கள். சிந்திய தண்ணீர் தெரு நடுவில் பட்டையாகக்கோடிட்டிருந்தது.

போட்ட படுக்கைக்குச் சம்பந்தமே இல்லாமல் சம்பா தரையில் தூங்கிக் கொண்டிருந்தாள். பங்கஜம் அவளைத் தூக்கவில்லை. படுக்கையில் கிடத்தும்போது குழந்தை விழித்துக் கொண்டால் என்ன செய்வது? பெரியவர்களைப் போலக்



குழந்தையும் ஒரு நாள் விட்டு ஒரு நாள் தூங்கக் கற்றுக் கொள்ளவில்லை.

பங்கஜம் தண்ணீர்த் தவலையுடன் ஒரு வெண்கலப் பானையையும் தூக்கிக் கொண்டு மீண்டும் தெருவுக்கு வந்தாள். எதை நம்பி இருட்டில் குழந்தையைத் தனியே விட்டுவிட்டு வீட்டையும் தாளிடாமல் போகிறோம்? கணவன் ஊரிலிருந்தாலும் இல்லாது போனாலும் இதுவரை தண்ணீருக்காக அவன் இன்னொருவர் வீட்டுக் கொல்லையில் நிற்கப் போகவில்லை. ஆனால் வீட்டுக்கும் குழந்தைக்குமாவது காவலாக இருக்கலாம்.

ஐஸ் டெப்போ காவல்காரன், “ஏய் எங்கே போறே?” என்றான். பங்கஜம் இடுப்பி–ருந்து கால் ரூபாய் சில்லரை எடுத்தாள். அவன்அதைக் கவனியாது போல “போம்மா. போ. போ. போ. இன்னிக்கு ஒத்தரை உள்ளே விடமுடியாது. போ போ போ!” என்றான். அங்கு கூடியிருந்த கூட்டம் அவனிடம் அந்தக் கடுமையை உண்டு பண்ணியிருக்க வேண்டும். அதைப் பொருட்படுத்தாமல் எல்லா வயதுக்காரர்களும் அவனிடம் கெஞ்சிக் கொண்டிருந்தார்கள். பங்கஜமும் அவள் பங்குக்குள், “இன்னிக்கு ஒருநாள் மட்டுங்க,” என்றாள். ஒருநாள் மட்டும் ஒருநாள் மட்டும் என்றே எவ்வளவு நாட்களாகி விட்டன? இன்னும் எவ்வளவு நாட்கள் இப்படி?

முத்து அவளைத் தேடி வந்துவிட்டான். “இன்னும் மூணு பேர் பிடிச்சப்புறம் நம்பதாம்மா,” என்றான்.

நாலு பக்கெட்டும் சரியா இருக்கா.”

“இருக்கே”

“நீ இங்கே நில்லு. நான் போய் தண்ணி அடிச்சு வைச்சுட்டு உன்னைக் கூப்பிடறேன்.”

“இந்த வெங்கலப் பானையை ஏம்மா எடுத்துண்டு வந்தே? இதிலே தண்ணியும் ரொம்பக் கொள்ளலே, தூக்கறதும் கஷ்டமாயிருக்கே?”

‘‘என்ன பண்ணறதுடா? பெரிய அடுக்குலே நேத்திக்குத் துணி அலசின தண்ணியைச் சேத்து வைச்சிருக்கேன்.’’

முத்துவிடம் தவலையையும் வெண்கலப் பானையையும் ஒப்படைத்துவிட்டுப் பங்கஜம் வாளிகளை வைத்திருந்த வீட்டுக்கு விரைந்தாள். அங்கு இப்போது அசாத்தியக் கும்பல் சேர்ந்திருந்தது. ‘‘இப்போ வந்துட்டு எங்கே உள்ள போறே, நாங்கள்ளாம் உனக்கு மனுஜாள்களாகத் தெரியலியா?’’ என்று ஒரு கிழவி பங்கஜத்தைத் தடுத்தாள். ‘‘பன்னெண்டு மணிக்கே நான் வந்து பாத்திரம் வைச்சிருக்கேன்.’’

கிழவி சந்தேகத்துடன் பங்கஜத்தைப் பார்த்தாள். பங்கஜம் அந்தக் கும்பலில் அந்தக் குறுகலான சந்துக்குள் முன்னேறிச் சென்றாள்.

அந்தச் சாலையில் தண்ணீர் வந்த ஐந்தாறு வீடுகளில், அந்த ஒரு வீட்டு பம்பில்தான் சிறிது அதிகமாக வரும். ஆதலால் தண்ணீர் பிடிக்க வருபவர்களும் அங்குதான் அதிகம். பம்பு அருகே நின்றவர்களுடன் பங்கஜமும் முண்டியடித்துக் கொண்டு தன் முறைக்குக் காத்திருந்தாள். தண்ணீர் இன்னும் சிறிது நேரமே வரும் என்ற உணர்வில் ஒருவர் தவறாமல் பம்புப் பிடியை அரக்கத்தனமாக இயக்கிக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு அடியும் சம்மட்டியடி போல ஒலியொழுப்பிக் கொண்டிருந்தது. பங்கஜத்துக்கு முந்தைய இடத்தில் பாத்திரம் வைத்திருந்த அம்மாள், தலைப்பை இழுத்துச் சொருகிக் கொண்டு தயாராக இருந்தாள். அவள்முறை வந்ததும் பங்கஜமே அந்த அம்மாளுடைய தவலையைப் பம்படியில் நகர்த்தி வைத்தாள். அந்தத் தவலை என்பதைவிட வேறு பெயர் ஏதாவது தான் சொல்லவேண்டும். அது நிரம்பினால் எப்படி நகர்த்துவது என்று ஒரு கணம் பங்கஜத்துக்குப் பயம் எழுந்தது. பாவம், அந்த அம்மாள் வீட்டில் எவ்வளவு நபர்களோ? ஆனால் ஒருவர்கூட அவளுக்குத் துணை வரவில்லை.

தவலை பாதி நிரம்பியபோதே அந்த அம்மாள் திரும்பித் திரும்பிப் பார்த்த வண்ணம் இருந்தாள். தவலைக்குப் பிறகு இன்னும் நான்கு பெரிய அடுக்குகள். அதன் பிறகு பங்கஜத்தின் முறை.



இரண்டாம் அடுக்கு நிரம்புவதற்குள் அந்த அம்மாளுக்குப் பெரிதாக மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கத் தொடங்கியது. பம்பு அடிப்பதிலும் கை தடுமாறியது. ‘‘நான் அடிக்கிறேன். நீங்க பாத்திரத்தை நகர்த்துங்க’’ என்று சொல்-ப் பங்கஜம் பம்ப் பிடியை வாங்கிக் கொண்டாள். பம்பைச் சுவரில் பதித்து வைத்திருந்தால் ஒரே பக்கமாக ஒரே கையில்தான் அடிக்க முடியும். நிதானமாக அடித்தாலே ஒரு பாத்திரத்திற்குள் கை சளைத்து விடும்.

பங்கஜம் அந்த அம்மாளின் பாத்திரங்கள் அனைத்திற்கும் தண்ணீர் அடித்துத் தந்துவிட்டுத் தன் வாளியை நகர்த்தி வைத்தாள். அங்கு நின்றிருந்த ஒருவர், ‘‘ஒருத்தரே அண்டா அண்டாவத் தண்ணி எடுத்துப்போனா, மத்தவங்க என்ன பண்ணுவாங்க?’’ என்று சொன்னார். மூச்சிறைத்த பங்கஜம், ‘‘இதுதான் என்னுது முதல்பாத்திரம்’’ என்றாள்.

அந்த நபர் ‘‘யோவ் சந்தானம்! இங்கே என்ன கேள்வி கேப்பாரு யாருமில்லே? இந்தப் பொம்பளைங்க இப்படி ஒரேயடியா பம்பைப் பிடிச்சு வளைச்சிட்டிருக்காங்களே! விடுங்கம்மா. நாங்களும் தண்ணி பிடிக்கத்தான் மணிக்கணிக்கா நின்னுட்டிருக்கோம்,’’ என்றார்.

தண்ணீர் நிரம்பிய அடுக்குகளை எடுத்துப் போய்க் கொண்டிருந்த அம்மாளிடம் பங்கஜம், ‘‘நீங்கதான்அவர்கிட்டே சொல்லுங்கம்மா,’’ என்றாள்.

அந்த அம்மாள் அந்த நபரிடம், ‘‘அவுங்க இன்னும் பிடிக்கவேயில்லப்பா,’’ என்றாள்.

‘‘ஆமாம், இதுல கூட்டு.’’

பங்கஜத்தின் தோளே கழண்டுவிடும் போல இருந்தது. இன்னும் மூன்று வாளிகள் அடித்தாக வேண்டும். கொண்டு வந்தவற்றில் முழுக்கத் தண்ணீர் எடுத்துக் கொண்டு போனால்கூட, இரண்டாம் நாள் மாலையில் எல்லாம் சரியாகக் களைய முடியாது. சட்டென்று யாராவது ஊரி-ருந்து வந்துவிட்டால், முகம் கழுவிக்கொள்ள ஒரு செம்புத் தண்ணீர்

தரமுடியாது. மறுநாள் சுத்தமான வேஷ்டி புடவை வேண்டும் என்றால் துணி நனைத்து உலர்த்த முடியாது.

பங்கஜம் அவளுக்கு ஞாபகமிருந்த தோத்திரங்களை மனதுக்குள் சொல்-க்கொண்டு, பம்பை அடித்தவண்ணம் இருந்தாள். ஒருமுறை கூட ஒரு தோத்திரத்தைக்கூட முழுக்கச் சொல்ல முடியவில்லை. அங்கு விரலிடுக்குக்கு இடமில்லாமல் நிறைந்திருந்த மக்களும் பாத்திரங்களும், அவருடைய கண்ணில் மிக இலேசான நிழலாகத் தென்பட்டது போலத் தோத்திரங்களும், ஒரே குழப்பமான குவியலாக வந்து போய்க்கொண்டிருந்தன. லலிதா சகஸ்ர நாமத்தில் சௌந்தர்ய லகரி. நடுவே கிருஷ்ணாஷ்டகம். பித்துக்குளி முருகதாஸ் பஜன் பாட்டு. அம்மா! அம்மா! அம்மா!

பங்கஜத்துக்கு அம்மாவென்று கத்தியழைக்கக்கூட முடியாதுபோலத் தோன்றிற்று. அவளுடைய கை ஏதோ தனிப்பட்டுப் போனது போல ஏறி இறங்கிக் கொண்டிருந்தது. மார்பு எவ்வளவு கனத்ததோ அந்த அளவு மனது கா-யாக இருந்தது. அவள் அவளே இல்லை. அவள் வேறு யாரோ. வேறு யாரோ என்று சொல்வதுகூடத் தவறு. வேறு ஏதோ.

மூன்றாவது வாளி அடிக்கும்போது முத்து வந்து விட்டான். ஐஸ் டெப்போவில் என்ன ஆயிற்று என்று கேட்கக்கூட முடியாமல் பம்புப்பிடியைப் பங்கஜம் முத்துவிடம் கொடுத்தாள். அவன் ஒரு கையால் அடிக்க முடியாமல் இரு கைகளாலும் பிடியைப் பிடித்துக் கொண்டு ஒவ்வொரு முறையும் தன் முழு உடலையும் உயர்த்தி அடித்தான்.

பங்கஜம் ஒவ்வொரு வாளியாகத் தூக்கிச் சாலை நடைபாதையில் கொண்டு போய் வைத்தாள். அங்கே இன்னம் எவ்வளவோ பேர் தண்ணீர் பிடித்ததும் பிடிக்காததுமாகப் பாத்திரங்களையும் வாளிகளையும் வைத்திருந்தார்கள். ஆண்கள் சைக்கிள்களில் எப்படி யெல்லாமோ குடங்களையும் தவலைகளையும் கட்டித் தொங்க விட்டுக்கொண்டு அலைந்து கொண்டிருந்தார்கள். ஊரே வெறி பிடித்தது போல் குழாய்த் தண்ணீருக்கு அலை பாய்ந்து கொண்டிருந்தது.



பங்கஜத்துக்கு அடிவயிற்றில் சுளீரென்று ஒருமுறை வலித்தது. போன தடவையும் இப்படித்தான் வலி வந்து, தெருவிலேயே சுருண்டு விழுந்திருந்தாள். சம்பா பிறந்தவுடனே அவளது கணவன் ஆஸ்பத்திரியில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தான். ஆபரேஷன் ஆனபோது பெரிய தொந்தரவு இருக்கவில்லை. ஆனால் இப்போது இரண்டு வருடங்கள் கழித்து வலிவரத் தொடங்கியிருக்கிறது. பெரிதாகிப்போய்ப்படுத்த படுக்கையாகத் தள்ளிவிடக் கூடாது.

கடைசி வாளி அடித்துவிட்டுத் தூக்கமாட்டாமல் அதைச் சிறிது சிறிதாக நகர்த்திக் கொண்டு முத்துவும் நடைபாதைக்கு வந்து சேர்ந்தான். அவனுக்கும் வயிற்றை வலிக்கும். ஹெர்னியா என்று சொல்-ப்போன வருஷமே ஆபரேஷன் செய்ய வேண்டுமென்று டாக்டர் சொன்னார். சொன்னவர் பயமுறுத்திச் சொல்லியிருந்தால் ஒரு வேளை உடனே ஏதாவது செய்து இருக்கலாம். பங்கஜம் முத்துவை அணைத்துக் கொண்டாள். ''நீ போடா வீட்டுக்கு. நான் ஒவ்வொண்ணா கொண்டு வந்துடறேன்,'' என்றாள்.

''ஐஸ் டெப்போலே சாவித்திரிகிட்டே சொல்லிட்டு வந்திருக்கேன். அதையும் அடிச்சுட்டுப் போறேம்மா.'' என்று முத்து சொன்னான்.

''வேண்டாம்டா, கண்ணா, இது போறும். எப்படியாவது பார்த்துக்கலாம்.''

''அப்போ அங்கே போய்க் காலி பாத்திரத்தை எடுத்துண்டு போகட்டுமா.''

''இல்லை, நீ வீட்டுக்குப் போ, நான் எடுத்துண்டு வறேன்.''

பங்கஜம் ஒவ்வொரு வாளியாகச் சாலையைக் கடந்து மறுபுறமிருந்த நடைபாதையில் கொண்டுபோய் வைத்தாள். அங்கே ஒரு கன்றுக்குட்டி அவளருகே வந்து ''போ போ,'' என்று விரட்டினாள். அது நகராமல் அங்கேயே நின்றது. அடுத்த வாளி எடுத்துவர அவள் நகர்ந்தவுடன், அது நிச்சயம் தண்ணீரில் வாயை வைத்துவிடும்.

பங்கஜம் மறுபடியும் அந்தக் கன்றுக்குட்டியை விரட்ட முயன்றாள். எந்தத் துவேஷம் பாராட்டாமல், அது சொறிந்து கொடுக்க வாகாகத் தலையை உயர்த்தியது.

''சரி குடி,'' என்று பங்கஜம் சொன்னாள். சாலை மறு புறத்தில் வைத்திருந்த இதர பக்கெட்டுகளை எடுத்து வர விரைந்தாள். நாளை மறுநாள் இந்தஅளவு தண்ணீராவது கிடைக்குமா என்று தெரியாது. ஆனால் இன்றையப்போது இதோடு முடிந்து விட்டது. விடிய இன்னும் வெகுநேரம் இருந்துங்கூட.

## பயிற்சி

கீழ்க்காணும் தலைப்புகளில் நாற்பத்தைந்து வரிகளுக்கு மிகாமல் கட்டுரை எழுதுக.

1. தண்ணீருக்குத் தவிக்கின்ற பங்கஜத்தின் நிலை.
2. பங்கஜத்தின் குணநலன்கள்.

# 8- அப்பாவு கணக்கில் 35 ரூபாய்

-பிரபஞ்சன்

அப்பப்பா...... நல்லவேளை பேருந்தில் கடைசி இடமானாலும் ஜன்னல் ஓரமாக எனக்கு இருக்கை கிடைத்துவிட்டது. இந்த ஆறு மணி வண்டியைத் தவற விட்டு விடக்கூடாது என்று ஓடி வந்திருந்தேன். சரியாகப் பத்து மணிக்கு ஊரில்கொண்டு போய்ச் சேர்த்து விடுவார் ஓட்டுநர். அடுத்த நாலைந்து நிமிடத்தில் வீடு. அம்மா தூங்கியிருக்க மாட்டாள். அகாலத்தில் போய் அம்மாவை, இந்த வயசான காலத்தில் எழுப்பித்தொல்லைப்படுத்த வேண்டாமே!

பேருந்தில் இடம் தேடி மனிதர்களும், மனிதர்களைத் தேடி ஆரோக்கியம் தரும் பழங்கள், மறுநாள் காலையிலேயே லட்சாதிபதியாக்குகிற லாட்டரி சீட்டுகள், ஒரு ரூபாய் விலையில் வீட்டுக்கு வந்து ஆங்கில ஞானத்தை வழங்குகிற புத்தகங்கள் எல்லாரும் வந்து கத்திவிட்டுப் போய்க் கொண்டிருந்தார்கள்.

வண்டி புறப்படுகிற நேரத்தில் என் எதிரில் நடுவயதினராக ஒருவர் வந்து நின்று என் பக்கத்தில் கா-யாக இருந்த இடத்தில் உட்காரலாமா கூடாதா என்பது போல் என்னைப் பார்த்தார்.

“உக்காருங்களேன்,” என்றவாறு என் உடம்பைச் சுருக்கிக் கொண்டு, அவர் உட்கார இடம் தந்தேன்.

அமர்ந்தார். ஐம்பதை ஒட்டிய வயது. மீன் முள்களைப் போல ஒரு வாரத்தாடி,. தலையும் வெளுத்திருந்தது. பழுத்துப் போன ஒரு நிறத்தில் சட்டையும்வேட்டியும். பல்லாண்டுகளுக்கு முன்யாரோஒரு செல்வனுக்கும் செல்விக்கும் நடைபெற்ற திருமணத்தின்போது வழங்கப் பெற்ற, சாயம்போன பையில் தன் உடைமைகளை வைத்திருந்தார்.

பார்த்த மாத்திரத்தில் 'நான்ரொம்ப சௌக்கியம்' என்னும் சில முகங்கள். அப்படி ஒன்றும் மோசமில்லை திருப்திதான் என்னும் சில முகங்கள். "ரொம்பச் சங்கடம்' என்னும் சில முகங்கள். என் பக்கத்தில் இருந்தவர் முகம் மூன்றாம் ரகத்தைச் சேர்ந்ததாக எனக்குப்பட்டது. அவருடன் பேசவேண்டும் போல் இருந்தது.

வண்டி ஓடிக் கொண்டிருந்தது.

"எது வரைக்கும் போறீங்க?'' என்றேன்.

''புதுச்சேரிக்கு சார்'' என்றார் அவர் சொல்-விட்டு, நமக்கு புதுச்சேரிதாங்க சொந்த ஊரு,'' என்றார்.

"எனக்குத்தான்''

"புதுச்சேரியில் எங்கேங்க?''

பஸ்ஸ்டாண்டுக்குப் பக்கத்திலேயே.''

"எனக்கு முத்தியால் பேட்டைங்க; பஸ் ஸ்டாண்டு லேந்து ரெண்டு மைல் நடந்து போவணும். ரிக்ஷாவிலே போனா ரெண்டு ரூபா கேட்பான்.''

வண்டி பல்லாவரத்தை நெருங்கிக் கொண்டிருந்தபோது நடந்துநர் என்னிடம் வந்தர். நான் காசைக் கொடுத்துச் சீட்டு வாங்கிக் கொண்டேன். பெரியவர், துணிப்பைக்குள் இருந்து ஒரு சின்னப் பர்சை எடுத்து, அதி-ருந்து ஒற்றை நூறு ரூபாய்த்தாளை எடுத்து நடத்துநரிடம் கொடுத்தார்.

"ஏய்யா, அத்தனை பேரும் நூறும் ஐம்பதுமா கொடுத்தா நான் சில்லரைக்கு எங்கே பேவேன்? நீங்களே பாருங்க சார்,'' என்று பையை என்னிடம் காட்டினார். ஆவென்று திறந்த அதன் வாய்க்குள் நூறும் ஐம்பதுமாகவே இருந்தது.

"யோவ்... பெரியவரே, சில்லரையா பன்னெண்டு ரூபா எம்பது பைசா இருந்தா குடு. இல்லேன்னா தாம்பரத்துல இறங்கிடு.'' என்று சொல்-விட்டுத் தன் இடத்தில் போய் அமர்ந்துகொண்டார்.



"சார்..... சார் என்கிட்ட இந்த நூறு ரூபாய் நோட்டைத் தவிர வேற சில்லரையே இல்லையே சார்......'' என்றார் பெரியவர் பரிதாபமாக.

"அதுக்கு நான் எண்ணய்ய பண்றது? பஸ்சுக்கு வர்ற ஆளு, நோட்டை மாத்திக்கிட்டு வர வாணாமா? தாம்பரத்துல இறங்கிடு. சும்மா பேஜார் பண்ணாத.''

பெரியவர் என்னைப் பரிதாபமாகப் பார்த்தார்.

நான் அவருக்குச் சீட்டு எடுத்துக் கொடுத்தேன்.

''மாமண்டூர்ல வண்டி நிற்கும்; மாத்திக் குடுத்துடறேன் சார்....''

"சரி.''

நிம்மதியாகச் சாய்ந்து உட்கார்ந்து கொண்டார். "ரொம்ப நன்றிங்க' என்றார்.

"ஊருல என்ன பண்றீங்க?''

''சும்மாத்தாங்க இருக்கேன். உங்களுக்குத் தெரிஞ்சிருக்குமே. ஒன்றரை வருஷமா மூடிக் கிடக்கிற ஆலைத் தொழிலாளிங்க. நானும் ஆரம்பத்துல அண்டை அசலலே கடன் வாங்கிக் காலத்தைத் தள்ளினேன். அப்புறம் அண்டா குண்டானை வித்து அடகு வச்சுத் தின்னோம். அப்புறம் என்ன, யாசகம் வாங்காத குறைதான். நான் நல்லா இருக்கறப்போ என் மச்சினன் ஆறுமுகத்தை நான் தான் படிக்க வச்சேன். கல்யாணம் பண்ணி வச்சேன். இப்போ பட்டணத்திலே, சௌரியமா இருக்கான். ஏதாவது குடுத்து உதவுப்பான்னு கடிதாசி எழுதினேன். பதிலு இல்லீங்க பிள்ளை குட்டிங்க முகத்தைப் பார்க்க முடியல்லீங்க வண்டி ஏறிட்டேன். ஒரு வாரமா பட்டணத்துல ஆறுமுகம் வீட்டிலேதான் இருந்தேன். என்னால முடிஞ்சுது இதுதான்னு நூறு ரூபாய் குடுத்தான். அவன் பெண்ஜாதி டவுன் பஸ்சுக்குன்னு ஒரு ரூபா கொடுத்துச்சு வாங்கிக்கிட்டுப் போறேன். ஒரு வாரம் பத்து நாளு கஞ்சி குடிக்கலாமே.'' என்றார்.

“மாமண்டூரில் இறங்கி இரவு உணவு முடித்தோம். பெரியவர் பில்லுக்கு நூறு ரூபாயை நீட்டினார்”.

“சில்லரை இல்லே சார்.” என்றார் கறாராக, கல்லாவில் இருந்தவர்.

“பரவாயில்லை” என்று நானே அவருக்கும் சேர்த்துப் பணம் கொடுத்தேன். வெளியே ஒரு சிகரெட்டை வாங்கி பற்ற வைத்துக் கொண்டேன். “நீங்க......” என்றேன்.

“பிடிக்கிறதுதாங்க.”

அவருக்கும் ஒன்றை வாங்கிக் கொடுத்தேன். கூச்சப்பட்டார் பிறகு புகைத்தார்.

வண்டி ஊர் போய்ச் சோந்து நாங்கள் இறங்கியவுடன் “சார்..... வாங்க, பழம் வாங்கலாம். அங்கேயே நோட்டை மாத்தி உங்களுக்கும் கொடுத்துடறேன்.” என்றார்.

பஸ் ஸ்டாண்டின் வெளியிலிருக்கும் பழக்கடைக்குப் போனோம். அவர் இரண்டு ஆப்பிள்களும் கொஞ்சம் கறுப்புத் திராட்சையும் வாங்கினார். நோட்டை நீட்டினார்.

“இன்னா பெரியவரே, இப்பத்தான் நாளைக்குச் சரக்குப் போட கல்லாவிலே இருந்து பணத்தைப் பூரா துடைச்சுக் கொடுத்துட்டு வர்றேன்; இப்பப் போயி நூறு ரூபாயைக் குடுக்கறே,” என்றார் கடைக்காரர்.

பெரியவர் பழத்தைத் திரும்பக் கொடுக்க முயலவே நான் “பரவாயில்லை.... வீட்லே குழந்தைகளுக்குக் கொண்டுபோய்க் குடுங்க.” என்று கூறிவிட்டுப் பழத்துக்கும் காசு கொடுத்தேன். தனியாக அவரிடம் ஒரு ஐந்து ரூபாய்த் தாளைக் கொடுத்து, வண்டி வச்சிக்கிட்டு போங்க,” என்றேன்.

அவர் என் கையைப் பிடித்துக் கொண்டார்.

சார்........ ரொம்ப உபகாரம் பண்ணியிருக்கீங்க. அவசியம் நாளைக்கு நீங்க நம்ம வீட்டுக்கு வரணும். முத்தியால் பேட்டை மணிக்கூண்டு இருக்கில்லே அதுக்குப் பக்கத்திலே துளசியம்மன் கோவில் தெரு, அப்பாவுன்னு சொன்னால் வீட்டைக் காட்டுவாங்க. அவசியம் வரணும்,” என்றார்.



நான் வருவதாகச் சொல்– விடை பெற்றேன். வீட்டை நோக்கி நடக்கையில் இது அதிகப்படியோ என்று எனக்குத் தோன்றியது. என் தகப்பனாருக்கு அறுபதாம் கல்யாணம் நடக்க இருந்தது. அவருக்கு வேட்டி துண்டும், அம்மாவுக்குப் புடவையும் வாங்க வேண்டும். நிச்சயம் இருபத்தைந்து ரூபாய் துண்டுவிழும்.

மறுநாளே என்னால் முத்தியால் பேட்டைக்கு போக முடியவில்லை. இரண்டாம் நாள் எனக்கு அந்தப் பக்கத்தில் வேலை இருந்தது. வேலையை முடித்துக் கொண்டேன். அப்பாவுவைப் பார்க்கப் போகலாம் என்று தோன்றியது. பக்கத்தில்தான் மணிக்கூண்டு இருந்தும் எனக்குள் ஒரு தயக்கம். பாவம் கஷ்டப்படுகிறவர் அப்பாவு. இந்தப் பணத்துக்காகத்தான் வருகிறான் என்று நினைத்துக் கொண்டால் நன்றாக இருக்காதே. என்னால் இருபத்தைந்து ரூபாய் புரட்டிக் கொள்ள முடியும் அவருக்கு அது பெரும் தொகையாயிற்றே.

எனக்கு அவரையும் அவர் குழந்தைகளையும் பார்க்க வேண்டும் போல் இருந்தது. போனேன். மணிக்கூண்டு துளசியம்மன் கோவில் அப்பாவு வீட்டைச் சுலபமாகவே கண்டுபிடிக்க முடிந்தது.

தெருவில் எல்லாம் கூரைவீடுகள் அப்பாவுவுடையதும் ஒரு சின்னங்கூரை வீடு உடைந்த கதவு, மண் திண்ணை.

“அப்பாவு சார்......”

“யாரு?”

சுமார் நாற்பது வயது மதிக்கத்தக்க அம்மாள் தலையை வெளியே நீட்டினார்.

“அப்பாவு இருக்காங்களா?’

“நீங்க யாரு?”

“நான் இந்த ஊருதான். மெட்ராஸ் போய்ட்டு வர்றப்போ அப்பாவுவைப் பழக்கம். வீட்டுக்கு வரச் சொன்னார். அதான்.”

“உக்காருங்க வர்ற நேரம்தான்.’’

நான் அந்த மண் திண்ணையில் அமர்ந்தேன். அந்த அம்மாள் உள்ளே திருப்பி, “செல்வராசு’’ என்று யாரையோ கூப்பிட்டாள். ஒரு பையன் கால் சட்டை மட்டும் அணிந்தவன் வந்தான்.

‘‘அப்பா சாராயக் கடையில் இருப்பாரு. யாரு வந்திருக்காங்கன்னு சொல்-க் கூட்டிக்கிட்டு வா.’’

“ஆமாங்க கையில என் தம்பி கொடுத்தனுப்பின பணம் கொஞ்சம் இருக்கு. அது தீர்ற மட்டும் அந்த ஆளு அங்கத்தான் கிடக்கும்.’’ என்றாள், மிகச் சாதாரணமாக.

பையன் என்னைத் திரும்பித் திரும்பிப் பார்த்தவாறு நடந்தான்.

‘‘ஆறுமுகம் கொடுத்தனுப்பின பணத்தை உங்ககிட்டே அவர் தரல்லையா?’’

‘‘தம்பி அம்பது ரூவா கொடுத்தானாம். இருவத்தைஞ்ச என்கிட்ட கொடுத்துச்சு. மீதியை அது வச்சுகிடுச்சு பாவம்..... நல்லா சம்பாதிச்சு நல்லா செலவு பண்ண மனுஷன் சும்மாகிடன்னா என்ன எண்ணும்?’’ என்றாள் அவள். “தம்பியை உங்களுக்குத் தெரியுங்களா?

“ஊம்.’’

உள்ளிருந்து இரண்டு பெண்கள் என்னை எட்டிப் பார்த்தார்கள். சுமார் இருபதும் பதினைந்துமான பெண்கள். பழங்காலத்துப் போட்டோக்கள் மாதிரி நிறம் இழந்து இருந்தார்கள். பெண்களுக்கு அப்பா ஜாடை.

‘‘அப்பா அங்கே இல்லேம்மா,’’ என்றவாறு பையன் வந்தான்.

‘‘உங்களுக்கு அவரு ஏதாவது பணம் தரணுங்களா?’’ என்றாள் அந்த அம்மாள்.



“இல்லீங்க’’, என்றேன்.

“இருங்க, வந்துடும்.... வர்ற நேரம்தான், என்றான்.

நான் அந்தப் பெண்களையும் பையனையும் பார்த்தேன். பசி, முகத்தில் வெளிப்படையாகத் தெரிந்தது. வெறுத்துப் போய் குச்சியாகக் கைகள். கைப்பட்டால் கிழியும் ஆடைகள் ஒன்றரை வருடப் பசி தாங்கிக் கொண்டு வளர்கிற குழந்தைகள்.

எங்களிடம் பத்து ரூபாய் இருந்தது.

‘‘ஆறுமுகம் எனக்குத் தெரிஞ்சவர்தாங்க, அந்தப்பக்கம் போனீங்கன்னா அக்காவைப் போயிருப்பாருன்னாரு. அதான் வந்தேன்.’’ என்று விட்டு, அந்தப் பத்து ரூபாயை எடுத்துப் பையனிடம் கொடுத்தேன்.

பையன் அம்மாவைப் பார்த்தான்.

“எதுக்குங்க?’’ என்றான் அவன்.

ஆறுமுகம்தாங்க கொடுக்கச் சொன்னாரு... வாங்கிக்கச் சொல்லுங்க,’’ என்றேன்.

அவள் தலை அசைத்ததும் பையன் வாங்கிக் கொண்டான்.

நான் எழுந்தேன்.

‘‘நாளைக்கு வாங்களேன். அதை வீட்டிலேயே இருக்கச் சொல்றேன்.

“சரி’’ என்று கூறி நடந்தேன்.

நாளைக்கு நான் வரப்போவதில்லை என்று எனக்குள் நான் சொல்லிக் கொண்டேன்.

## பயிற்சி

கீழ்காணும் தலைப்புகளில் நாற்பத்தைந்து வரிகளுக்கு மிகாமல் கட்டுரை எழுதுக.

1. பேருந்து பயணத்தின் நிகழ்வுகளாக ஆசிரியர் பிரபஞ்சன் தெரிவித்துள்ளவை.

2. “அப்பாவு கணக்கில் 35 ரூபாய்.’’

# 9. வேலை(ளை) வந்துவிட்டது.

**-ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன்**

'ஏதாவது ஒரு பெரிய கம்பெனியில் கெமிஸ்டாகச் சேரலாம். இல்லையென்றால் கெமிகல் அன-ஸ்டாகப் போகலாம். அதுவும் கிடைக்காவிட்டால் மெடிகல் ரெப்ரஸெசன்டேடிவ் அல்லது லாப் அஸிஸ்டெஸ்ட். உருப்படியாக எந்த வேலையும் அமையாவிட்டால் இருக்கவே இருக்கிறது. ஏதாவது ஒரு கல்லூரியில் கெமிஸ்டரி டெமான்ஸ்ட்ரேட்டர் உத்தியோகம்.''

இப்படித்தான் நினைத்துக் கொண்டு சென்னை வந்து சேர்ந்தேன். நெல்லை எக்ஸ்பிரஸை விட்டு இறங்கிய என்னை வரவேற்க எழும்பூர் ரயிலடிக்கு யாருமே வரவில்லை. இத்தனைக்கும் பொன்னையா மாமாவுக்குக் கடிதம் எழுதியிருந்தேன். கண்டிப்பாக ஸ்டேஷனுக்கு வரவேண்டுமென்று.

பொன்னையா மாமா வேறு யாருமல்லர்; என் அம்மாவின் உடன்பிறப்பு. இன்னும் நெருக்கமாகச் சொல்வதானால் என்னுடைய சொந்த அக்காவின் கணவர் அவர்கள் வீட்டில் தங்கியிருந்து தான் வேலை தேட வேண்டும்.

''என்னங்க ஊர்லேந்து இன்னிக்கு ரகு வர்றான். ஸ்டேஷனுக்குப் போய் கூட்டிட்டு வாங்க.....'' என்றிருப்பாள் அக்கா.

"ஆமா இவன் பெரிய இவன். சீமையிலேர்ந்து வர்றான். இவனைப் போய் ஸ்டேஷன்லே காத்து நின்று மாலை போட்டு வரவேற்கணுமாக்கும். அட்ரஸ்தான் கையிலே இருக்கே. மூதேவி தேடிப்பிடிச்சு வந்து சேரும்.'' இப்படித் தட்டிக் கழித்திருப்பார் மாமா. அவரைத் தெரியாதா எனக்கு?



இப்ப இவரு மதிக்கமாட்டார். ஏன்னா எனக்கு உத்தியோகம் இல்லை. நாளைக்கே ஒரு பெரிய கம்பெனியிலே கெமிஸ்ட்டா, மெடிகல் ரெப்ரசென் டேடிவா..... லாப் அஸிஸ்டெண்டா.... காலேஜ் டெமான்ஸ்ட் ரேட்டரா.......

கனவுகள் விரிந்தன. ஆசையில் ஊறிய எச்சிலே எனக்கு குளுக்கோஸ்-டி அளித்தது. உற்சாகமாக ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தேன்.

அடேயப்பா.... எவ்வளவு பெரிய நகரம்! வள்ளியூர் தெப்பத் திருவிழாவன்று வருகிற கூட்டம் இங்கே சாதாரண நாள்களில் கூட இருக்கிறதே. குரங்குகள் போல இந்த மனிதக் கூட்டம் தான் என்னமாய் பஸ்களிலும், ரயில்களிலும் தொற்றிக் கொண்டு போகிறது? எத்தனை கடைகள்...... எத்தனை வாகனங்கள்.... எத்தனை ரகங்கள்!

ஆண்கள்..... பெண்கள்! இந்தப் பெண்களில்தான் எத்தனை நிறங்கள்?

"அமிஞ்சிக்கரைக்கு எந்த பஸ் போகுது சார்?''

''27, 27ஏ''

அமிஞ்சிகரைக்கு வந்தாகிவிட்டது. இனி அடுத்த வேலை கண்ணையாச் செட்டி தெருவைக் கண்டுபிடிக்க வேண்டும்.

நேராகப் போய், பீச்சாங்கை பக்கம் கட் பண்ணி சோத்துக்கை பக்கம் திரும்பி, அப்பால நேராப் போய் வெற்றிலைப் பாக்கு கடைகளில் கேட்டு அலைந்து அலுத்து, களைந்து இறுதியாக பஸ்ஸை விட்டு இறங்கிய இடத்திற்குப் பக்கத்திலேயே கண்ணையாச் செட்டித் தெரு, கண்ணையாத் தெருவாகக் கண்ணில் பட்டது.

இந்தத் தெருவில் இனி அந்த ஒன்பதாம் நம்பர்.

கதவிலக்கங்கள் கட்டுப்பாடில்லாமல் எங்கெங்கோ இருக்க, மிகுந்த குழப்பத்தோடு திரிந்து கொண்டிருந்த கொஞ்ச நேரத்தில் அக்காவே எதிரில் வந்தாள்.

''ரகு..... இப்பத்தான் வர்றியா?...... ஊர்ல அம்மா அப்பவெல்லாம் சொகமா இருக்காகளா?''

‘‘ம்’’....... எனக்கு கோபம் அதிகம் பேசவில்லை. முகம் உம்மென்று இருக்கிறது.

“உன்னைப் பார்க்கறதுக்குத்தான் மாமா ஸ்டேஷனுக்குப் புறப்பட்டாக. ஆனா புறப்பட்ட நேரத்திலே அரும்பாக்கத்திலேர்ந்து ஒருத்தர் வந்து வாசக்கால் போடணும்னு அவசரமாக கூட்டிட்டுப் போய்ட்டார்.

‘‘அதனாலென்ன பரவாயில்லே, நான்தான் பத்திரமாக வந்துட்டேனே.....’’

பேசிக்கொண்டே வந்தவன் ஒரு குடிசைக்கு முன்னால் நின்றான்.

“குனிஞ்சுப்போ ரகு.....’’

இதுவா இவர்கள் இருக்கிற வீடு! நம்பர் ஒன்பது. ஒரு பங்களாவாக இல்லாமற்போனால் பரவாயில்லை குறைந்தபட்சம் ஒரிரு அறைகள் கொண்ட ஒரு ஓட்டு வீடாகவாவது இருக்குமென்று நினைத்துக் கொண்டிருந்தேன். குடிசையாக இருக்கிறதே......

தலையில் சுமந்து வந்து கூடையை இறக்கி வைத்தால் அக்கா. மாமாவின் பட்டறையி-ருந்து மரஇழைப்புத் தூளை அள்ளிக் கொண்டு வந்திருந்தாள். தூசியும் தூளுமான அந்த மரத்தூள் நெடி பக்கத்தில் இருந்த கூவத்தின் மணத்தோடு கூட்டணி அமைத்துக் கொண்டது.

‘‘அக்கா இதிலேயா இருக்கே! இதுக்கு வாடகை வீடே கிடைக்கும். அது சரி அப்பாவுக்கு வேலை நடக்கா?’’

“300 ரூபா, நம்ப ஊர்ல 300 ரூபாய்க்கு ஒரு பெரிய மச்சு வீடே கிடைக்கும். அது சரி, அப்பாவுக்கு வேலை நடக்கா?’’

ஆமாக்கா.... நம்மவூர் முருகன் கோவில் தேர் ரிப்பேர் வேலை நடந்திட்டிருக்கு. அப்பாதான் அதை ஏத்துச் செய்திட்டிருக்காக. வெட்டூர்ணிமாடத்திலேர்ந்து ரத வேலைக்காக



நிறைய வந்திருக்காக, ஆனாலும் அப்பா ரொம்ப கஷ்டப்படறாக.... வயசாயிடுச்சில்லையா....’’

ஆம்.... நான் உத்தியோகத்துக்குப் போய்விட்டால்......

கெமிஸ்ட்.... கெமிகல் அன-ஸ்ட்.. மெடிகல் ரெப்ரசென்டேடிவ் லாப் அஸிஸ்டென்ட்....... காலேஜ் டெமான்ஸ்ட்ரேட்டர் என்று மீண்டும் கனவுகள் விரிந்தன.

அடுத்த நாள் காாலை ராகு காலம், எமகண்டம் நீங்கலாக ஒரு நல்ல நேரம் எதிரே யார் வருகிறார் என்று பார்த்து அக்கா என்னை வெளியே அனுப்பி வைத்தாள். இனி வேலை தேட வேண்டும் ஊரிலிருந்து வரும்போதே சென்னையில் உத்தியோகம் பார்க்கும் சில வள்ளியூர்க்காரர்களின் முகவரிகளைக் குறித்து வைத்திருந்தேன்.

‘‘முருகன் அண்ணாச்சி ஸ்டேட் பாங்க் ஹெட் ஆபீஸிலே இருக்காக. முதல்லே அவுகளைப் போய் பாரு. பல பெரிய இடங்கள்லே அவுகளுக்குப் பழக்கம் இருக்கும். அவுக மனசு வச்சா உனக்கு ஒரு நல்லவேலை வாங்கிக் கொடுக்க முடியும்.’’

இம்பொஸிஷன் போட்ட மாதிரி அப்பாதான் இதை எத்தனைமுறை சொல்-யிருப்பார். முருகன் சார்வாளிடம் தான் முத-ல் சென்றேன்.

‘‘எல்லாம் சரிதான் நம்பி...... இங்கே எண்பத்திரண்டாம் வருஷம் பதிஞ்வங்களுக்கே இப்பத்தான் எம்ப்ளாய் மெண்ட் எக்ஸ்சேஞ்சிலேர்ந்து இண்டர்வியூ கார்டு வரத்தொடங்கியிருக்கு. நீ என்னடான்னா போன மாசம் பாஸ் பண்ணிட்டு வந்து உடனேயே வேலை வேணுங்கிறியே...!

“அண்ணாச்சி... பாங்கிலே முடியலேன்னா பரவாயில்லே... ஏதாவது ஒரு பிரைவேட் கம்பெனியிலேயாவது...’’

“பார்க்கறேன்... ஆனால் என்னை மட்டும் நம்பிட்டிருக்காம நீயும் ட்ரை பண்ணிட்டிரு....’’

பஸ்ஸில் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது சினிமாவில்

வருகிற பிளாஷ் பேக் மாதிரி மறுபடியும் அப்பா வந்தார். சென்னையில் நான் அவசியம் பார்க்க வேண்டிய நபர்கள் பட்டிய-ல் அடுத்த பெயரை நினைவுக்குக்கொண்டு வந்தார். பிளாஷ்பேக் அப்பா.

''நம்ப பெரிய வீட்டு ராஜாசிங் அம்பத்தூர்ல ஒரு கம்பெனியிலே யூனியன் தலைவர். வேலை கிடைக்காம ஊர் சுத்திட்டிருந்த அந்தத் தம்பி எப்படியோ இப்படியொரு பெரிய நிலைக்கு வந்திருக்காக. அவுக நினைச்சா உனக்காக அங்கே ஒரு வேகன்ஸியையே உண்டாக்க முடியும்.....''

முருகன் அண்ணாச்சி சொன்னது போல, அவரை மட்டுமே ஏன் நம்பிக்கொண்டிருக்க வேண்டும். நானும் முயற்சி செய்ய வேண்டுமல்லவா! அம்பத்தூர் பஸ்ஸைப் பிடித்தேன். ராஜாசிங்கைப் பார்க்க......

''தம்பி நீ.... நம்ப ராமசாமி ஆச்சாரியோட மூத்த மகன்தானே....''

என்னைச் சட்டென்று அடையாளம் கண்டு கொண்டு அன்போடு வரவேற்றதால் அவரைப் பற்றிய மரியாதை என்னுள் விலைவாசியானது. மகிழச்சிப் பிரவாகத்தில் நம்பிக்கை துளிர்விட்டது. வந்த விஷயத்தைச் சொல்- முடித்தேன்.

"தொழிற்சங்கத் தலைவன்னா வேலைக்கு வந்தவங்களோட நலனைக் கவனிக்கிறவன் தானேயொழிய வேலைக்குப் போக ஏற்பாடு பண்ற எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் இல்லே. என்னைக் கேட்டா ஒவ்வொரு இளைஞனுக்கும் தன்னோட சொந்தக் கா-லே நிக்கிற துணிச்சலும் திறமையும் வரணும்தான் சொல்வேன். இந்த சிபாரிசுகள்லே எனக்கு நம்பிக்கையும் கிடையாது. விருப்பமும் கிடையாது.''

பெரிய வீட்டு ராஜாசிங் ஒரு பேருரையையே நிகழ்த்தி அனுப்பி வைத்து விட்டார். அவரைப் பார்க்கப் போன வகையில் பன், டிபன் செலவுக்காகத் தண்டச் செலவு முப்பத்தேழு ரூபாய் ஐம்பது காசு.

''உன்னைப் போல ஒரு கூமுட்டை எவனும் இருக்க



மாட்டான். அவுகளை வீட்டிலே போய்ப் பாருலேன்னு சொன்னா யூனியன் ஆபீஸிலே அதுவும் தொழிலாளர்கள் மத்தியிலே போய்ப் பார்த்திருக்கே. அவுங்க முன்னால அவுக அப்படித்தான் பேசுவாக தனியாப் போயிருந்தா காரியம் பழமாகியிருக்கும். காரியத்தைக் கெடுத்திட்டியேலே. உனக்கெல்லாம் எங்கே வேலை கிடைக்கப் போகுது?''

மாமா எரிந்து விழுந்தார். இது நேருக்கு நேர் இன்னும் அக்காவிடம் என்னென்னவெல்லாம் திட்டினாரோ? அக்காவும் இப்போதெல்லாம் அடிக்கடி புத்திமதிகள் சொல்லத் தொடங்கி விட்டாள்.

நாள்கள் சில நகர்ந்திருக்கும் அக்கா இப்போது புதிதாய் ஒரு சங்கடத்தை உருவாக்கி விட்டாள், ''ரகு, அதோ பாரு! உங்க மாமா தனியா பலகையை இழைச்சிட்டிருக்காக. கூடமாட கொஞ்சம் ஒத்தாசை பண்ணக்கூடாதா?'' என்று சொல்லும் போதெல்லாம் ஒப்புக்குக் கொஞ்சம் இழைத்து விட்டு நழுவிக் கொள்வேன். பி.எஸ்.ஸி., கெமிஸ்டரி, ஹைசெகன்ட் கிளாஸ் தச்சு வேலை செய்வதா......!

"படிச்சவன் பாட்டைக் கெடுத்தான் எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான். இவன் வந்து ரெண்டு மாசமாச்சு, இன்னும் ஒரு உத்தியோகத்தைத் தேடிக்க வக்கில்லே. நானென்ன இவனை மாதிரியா படிச்சிருக்கேன். கையெழுத்து கூடப் போடத் தெரியாது. மெட்ராஸுக்கு வந்து இறங்கின மறுநாளே வேலை கிடைச்சிட்டுது.அப்பவே தினமும் 20 ரூபா சம்பாதிப்பேன்.

மாமா வருத்தப்படுவதாக அக்கா கூறினாள்.

"மெட்ராஸுக்கு வந்த மறுநாளே வேலை கிடைக்கிறதுக்கு நானென்ன தச்சு வேலைக்கா வந்திருக்கேன்? ஆபீஸ் உத்தியோகம் அது மெதுவாகக் கிடைச்சாலும் எடுத்த எடுப்பிலே நாலாயிரம் ரூபாய்க்குக் குறையாத சம்பளம் கிடைக்கும்''.

''ஆமா, ஆயிரத்தை நம்பிகிட்டு அரை ரூபாய்க்குக் கூட பிரயோஜனமில்லாம சுத்தறதுதான் மிச்சம்.அறுபது காசு

கொடுத்துக் கவர் வாங்கணும்னா கூட இன்னொருத்தர் கையைத் தானே நம்பிக்கிட்டிருக்கே....''

அக்கா இப்படிச் சொன்னது கொள்ளிக் கட்டையால என் கண்களைத் தொட்டதுபோலச் சுட்டது. எனக்கும் என்னுடைய பி.எஸ்.ஸி ஹைசெகன்ட் கிளாஸுக்கும் இதைக் காட்டிலும் பெரிய அவமரியாதை வேறெதுவும் இருக்க முடியாது.

இவரென்ன கைநாட்டு, இவர்கிட்ட இனிமே சல்-க்காசு கூடக் கேட்கக் கூடாது. முடிந்தால்..... கண்டிப்பாக முடியும். இவர் வீட்டில் சாப்பிடுகிற சாப்பாட்டுக்கும் ஏதாவது பணத்தை கொடுத்து விடவேண்டும்.

''ரகு எனக்கு நேரமாச்சு நான் வேலைக்குப் புறப்படுறேன். உங்கக்கா வீட்டிலே இல்லே எக்மோர் ஆஸ்பத்திரிக்குப் போயிருக்கா. இன்னிக்கு நீ எங்கேயும் போக வேண்டாம். போனாலும் என்ன வேலையா கிடைச்சிடப் போவுது. அண்ணாநகர்லேர்ந்து நம்ம குப்புசாமி ஆச்சாரி ஒரு பையனை அனுப்பறதாச் சொல்-யிருந்தார். அந்தப் பையன் வந்தான்னா திண்ணையிலே கிடக்கற பலகைகளையெல்லாம் இழைச்சுப் போடச்சொல்லு சாயங்காலம் நான் வர்றதுக்கு லேட்டாய்ட்டா இந்தா.... இந்த அம்பது ரூபா சம்பளத்தை அவனுக்கு கொடுத்து அனுப்பிடு. உங்கப்பாவுக்குக் கடுதாசி போட்டியானா செலவுக்கு கொஞ்சம் பணம்கேட்டு வாங்கி வச்சிக்கோ. விலை பிடிக்க முடியலே நீயும் கொஞ்சம் பணம் கொடுத்தியானாதான் சாப்பாட்டுச் செலவைச் தாக்குப்பிடிக்கலாம்...... இப்படிச் சொன்னேன்னு உங்க அக்காகிட்டே சொல்-த் தொலைச்சிடாதேலே......''

அக்கா விட்டிலே இல்லாததைப் பயன்படுத்தி கொண்டு அவர்களோடு நானிருப்பதைப் பாரமென்று சுட்டிக்காட்டிய மாமாச் சனியன் அம்பது ரூபாயைக் கையில் திணித்து விட்டு வெளியேறியது. எனக்கு அவமானமாகப் போயிற்று. இரண்டு மூன்று மாதங்களாக இவர்கள் வீட்டில் சாப்பிட்ட உணவு தண்டச் சோறுதான். அதை அவர்களே சுட்டிக் காட்டிய பிறகு... இனிமேல் சாப்பிட்டால் குமட்டிக் கொண்டல்லவா வரும்?



மாலையில் வீடு திரும்பிய மாமா விசாரித்தார். இந்தத் தண்டச்சோற்றை எங்க புள்ளே காணோம்? குப்புசாமி ஆச்சாரி அனுப்பின பயலுக்கு வேலை வச்சிட்டு போயிருந்தேன். வேலை முடிஞ்சிதோ சம்பளம் கொடுத் தானோ தெரியலே. கொஞ்சம் அசந்திருந்தா அதையும் செலவழிச்சிட்டு வந்து அப்ளிகேஷன் அனுப்பச் செலவாயிடுச்சின்னு சொல்லுவான்.''

வசவுகளை முற்றிலுமாக வழங்கி முடிக்கவில்லை. மாமாவுக்கு முன்னால் பிரசன்னமானேன்.

''என்ன மாமா சொன்னீங்க.... தண்டச்சோறா.... இதுவரை அப்படியே இருந்துட்டேன். இனிமே அப்படி யில்லே. இந்தாங்க இதிலே அம்பது ரூபா இருக்கு. இரண்டு நாள் சாப்பாடு போடுங்க.....

''எலே ரகு, குப்புசாமி ஆச்சாரி அனுப்பிய பயலுக்குக் கொடுத்த கூ-யை நீயே வச்சிக்கிட்டடியா.....?

''ஆமா, நான்தான் வச்சிக்கிட்டேன். வேலையை அவன் செய்து கூ- வாங்கினா என்ன? நான் செய்து வாங்கினா என்ன? உங்களுக்கு வேலைதானே முடியணும்? பேனாவும், தாளும் எனக்குத் தராத வேலையை இந்த இழப்புளியும் மட்டப்பலகையும் தரலாமில்லையா....? இந்தாங்க என் சம்பளம்.....''

இருபது ரூபாயை மாமாவிடம் நீட்டியபோது பழக்க மில்லாத வேலையைச் செய்திருந்த என் பூவிரல்கள் சிவந்து இருப்பதைப் பார்த்து அக்காவின் கண்களில் நீர் அரும்பியது. அதில் வருத்தமிகுந்த அளவுக்குப் பெருமிதமும் இருந்தது.

இப்போது வேலையில்லாப் பட்டதாரிகளின் எண்ணிக்கையில் ஒன்று குறைந்து விட்டது.

**பயிற்சி**

கீழ்க்காணும் தலைப்புகளில் நாற்பத்தைந்து வரிகளுக்கு மிகாமல் கட்டுரை எழுதுக.

1. ரகுவேலை தேடிய விதம்

2. வேலை (ளை) வந்து விட்டது – இக்கதைத் தலைப்பின் பொருத்ததைத் விளக்குக.

# 10. மண்ணாசை

**- சோலை சுந்தரபெருமாள்**

இந்தாப் போச்சு அந்தாப் போச்சுன்னு மூணுமாசமா இழுதுதுப் புடுச்சிக்கிட்டுக் கெடக்கும் பட்டாளத்தாருக்கு இன்னும் தெக்க போய்ச் சேர நேரம் காலம் வர்லங்கிற பேச்சு தான் ஊர் சனத்துக்கு

பட்டாளத்தாரு யாருன்னு கேட்டா நேத்திக்கு கண்ணு முழிச்சுப் புள்ளங்கூட அடையாளம் காட்டிப்புடும். அவரோட பேரச்சொன்ன மொதத் தலைமுறை ஆசாமிங்களுக்குக் குட சட்டுன்னு நெனைப்பு வராது. கூடவே தோப்பூட்டுக்கார கோவிந்தம் புள்ளன்னு அடையாளத்தக் குறிப்புட்டாத்தான் மட்டுப்படும்.

அவரு பட்டாளத்தவுட்டு வந்து ரெண்டு மாமாங்கமா ஆயிட்டு அவரோடபட்டாளத்துச் சேவையைப் பாராட்டி, கலெக்டரு கொடுத்தது மூணுமா புஞ்சை பொறம்போக்கு அதை ஒட்டனாப் போல் இருந்தா ரெண்டுமா நெலத்தையும் சேத்து அடைச்சாப் போல வாங்கிக்கோ- வே- வச்சதப் பாத்த சனங்க தெகச்சித்தான் நின்னுச்சி.

இந்த ஊருக்குள்ளேயே இம்மா பெரிய நெலத்துக்கு வே-க்கட்டுனதே இவருதான் வடவண்டப் பக்கத்தில் இருவது அடி விட்டதில் தொறவு. லெங்குசா தண்ணீ எறைக்கிறாப் போல கரண்டுல மோட்டாரு.

பட்டம்பட்டமா பிரிச்சி மா, பலா, சப்போட்டான்னும் கூடவே நாரத்தையும் எலுமிச்சையுமா பட்டத்தச் சுத்தி ஏகமா தென்னம்புள்ள. ஏ....ப்பா கோவிந்தம்புள்ள எப்புடி யெல்லாம் மனசுக்குள்ள வரிச்சுக்கிட்டு பட்டாளத் தி-ருந்து வந்தாரோ அச்சா அப்படியே தோட்டம் அமைஞ்சிப் போயிட்டு.



ஈசானி மூலையில தென்வடலா பொட்டி போல வூடு. சேவைய விட்டு வந்து கையில இருந்த காச, காசுன்னு பாக்காம அள்ளி எறச்சி விட்டுட்டாரு. போட்ட மரக் கன்னுங்க பலன் கொடுக்கங்காட்டியும் ரொம்பத்தான் முழி பிதிங்கிப் போயிட்டாரு. இடைஇடையே கீரைன்னும் மொளவான்னும் மருளிகட்டைன்னும் போட்டு சமாளிச்சாரு. ஒரு பத்து வருஷம் அவரு பட்டப் பாட்டச் சொல்லிமாளாது.

‘ஏன் பட்டாளத்து மாமா கொண்டாந்த காசயெல்லாம் கண்ண மூடிக்கிட்டு மண்ணுல கொட்டி வைக்கிறீங்களே பெண்டாட்டிப் புள்ளைங்க சோறு திங்க வேணாமா’ன்னு கேட்ட அக்கா மவன் கிட்டக்க “அட, போடா, நாலஞ்சா பெத்து வச்சிருக்கேன். சிங்கக் குட்டிப் போல ஒரு ஆம்பளப் பய.”

தோப்ப சுத்தி வந்தாக் கூட அவன் சோத்த நாலு பேரு திங்கலாம்ங்கிற நெனப்புதான் கோவிந்தம்புள்ளைக்கு.

‘என்னா மனுசன்... மழையிலயும் பனியிலயும் நின்னு சம்பாத்தியம் பன்னி கொண்டாந்த காச கையில வச்சிகிட்டு, அடக்கமா வீட்டக்கட்டி ரெண்டாம் பேருக்குத் தெரியாம நறுவுசா வாழத் தெரியாத மனுசன். யானைக்கு கோமன் கட்டினப்போல ஊரை வளைச்சி கோட்டம் போடுறாராம் தோட்டம். ஒடம்பப் போட்டுத் தெண்டிச்சிக்கிறது வேற.’

பட்டாளத்தில் தின்னு உண்டு வளந்த உடம்பு. இங்கு வந்து கரையனும்னு இருக்கும்போது... தலையெழுத்த யாரு மாத்தி அமைக்க முடியும்?

பெத்தப் புள்ள கஞ்சி ஊத்தாட்டாலும் வச்சி வளத்தப்புள்ள சோறு போட்டுப் புடுங்கிற வாய்செலவு கோவிந்தம் புள்ளையும் அடக்கிப்புடுங்கிறது நெசமாகவே அமைஞ்சிப்போயிட்டு.

தூங்கி முழிச்சாப் போதும் அவரோடு கண்ணுல தோப்பு தான் வந்து நிக்கும் பளிச்சுன்னு எழுந்திருச்சாருன்னா ஒவ்வொரு மரத்தையும் பாத்துட்டு வந்தாதான் அன்னைய பொழுது நல்லபொழுதா போயிருக்குங்கிற உணர்வு வரும்.

கையியில் இருந்த காசெல்லம் வல்லுசா கரைஞ்சிப் போனதும் கொஞ்சமா வர்ற பென்ஷன் பணத்த வச்சிக்கிட்டு தோப்புக்கு மேஞ்செலவுப் பாக்கிறதுக்கும் குடும்பத்த கவனிச்சிக்கிறதுக்கும் ரொம்பதான் அல்லாடிப் போயிட்டாரு. உழைப்புக்கு ஏத்தாப்போல சாப்பாடு சரியாயில்லாம போயிட்டு. அதனால உடம்புல நாளுக்கு நாளு தேஞ்சிக்கிட்டு வந்துட்டு. இருந்தாலும் மனசு மட்டும் எனப்பமா ஆயிடாம சுறுசுறுப்பாவே இருக்கு.

மரமெல்லாம் கிளைச்சி தண்டு உருண்டு மத்தளம் கூட்டி குந்தானி கணக்கா ஆனதும் தோப்புக்குள்ள வந்து பாக்கும் போதே தன்னோட மனகஷ்டமெல்லாம் மறந்து போயி தான் சுத்தி வருவாரு. எந்த நேரமும் காக்கா, கருவிகளும் பச்சைக் கிளின்னும் கூடவே அணில்களும் ஒண்ணடி மண்ணடி சேந்து கொட்டாம் அடிச்சிக்கிட்டு கெடக்குங்க. அதுல மனசு நெகிழ்ந்து போயி அதுகளாவே ஆயிடுவாரு. வாடையோ தென்றலோ சதா எந்நேரமும்... சிலுசிலுனு உச்சி உரும நேரத்தில் மட்டும் அப்படி இப்படின்னு கருப்பு தேகத்தில் சேப்பு தேம படத்தாப்போல வெயிலு விழுறதோட சரி.

தொறவ ஒட்டினாப்பேல நிக்கிற நாலஞ்சி மா மரங்களோட மனுசன் கட்டி அணைக்க முடியாத பலாமரமும் சிம்பு சிம்பா நிக்கிற தஞ்சாவூர் கொய்யாவும் பின்னி படந்து நிக்கிற அந்த நெழலோட்டத்தில் ஆற்று மணல் அடிச்சி கெடக்கும். விடிய கருக்கல்ல போனா அந்த மணல்ல படுத்து பொறள்ற சொகம் இருக்கே அது அலாதியானது.

எந்நேரமும் அப்படியே கண்குத்திப் பாம்பாட்டம் எல்லையில நின்னு பூத்துப்போன கண்ணு இத பாக்கிறச்சே மனது குளிந்துதான் போய் ''ஏ! ரெத்னம்.... இங்க வாடி.. ரொம்பதான் கோணிக்காதே. பாக்கிறவங்க சொல்லுறதுக்கு என்னாடி இருக்கு?'' பொண்டாட்டிக்கிட்ட எளஞ்சிடுவாரு.

அன்னிய மனுசவாடையே வராத அந்த எடத்தில்தான் அவரும் அவரு சம்சாரமும். இந்தா பார் ரெத்தனம்! இந்த இடத்திலத்தான் என்னோட உயிரு போணும். இங்க வச்சிதான்



என்ன குளிப்பாட்டி தெக்க அனுப்பி வைக்கணும் அப்ப, தப்புதாரையோ.... பட்டாளத்தான்னு யாராச்சும் ட்ரம் செட்டு கொண்டாந்து வைக்க வந்தா விட்டுப்புடாதே. பாவம் நம்ம தோட்டத்தில் குடியா கெடக்கிற ஜந்துக்களெல்லாம் சின்னபின்னமா போயிடும்'....

இப்படித்தான் பொண்டாட்டிக்கிட்டே ஒரு நூறு தடவயாச்சும் சொல்-ருப்பாரு.

'அதுக்கென்னாங்க... இந்த எடத்த யாரு பேத்து எடுத்துக்கிட்டுப் போவப் போறாங்க; ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணுன்னு இருக்கிற புள்ள இந்த ஆசையக்கூடவா நெறைவேத்தி வைக்காமப் போவான்? என்னோட கண்ணு முன்னால உங்களுக்குத் திருப்தியா செஞ்சி அனுப்பி வச்சிட்டுத்தான் நானும் உங்கப் பின்னாலேயே வந்து சேத்துக்குவேங்க....!

அவரோட பொண்டாட்டி ரெத்தனத்தையும் சும்மா சொல்லக்கூடாது.புருஷனோட மனச ஒத்திஎடுத்தாப் போல அதோட மனசும், அவரோட கண்ணுல ஒரு தூசு விழுந்தட்டால் கூட அது கண்ணு கலங்கிப் போயிடும். எந்நேரமும் புருசன் நெஞ்சுக்குள்ளேயே முடங்கிக் கெடக்குனுங்கிறதில அந்த மூதாட்டிக்கு குதிகொள்ளாத ஆசை.

பத்து வருஷ கால வாழ்வில எத்தனையோ ஏத்தம் எறக்கத்தப் பாத்துட்டாரு கோவிந்தம்புள்ள. இருந்தாலும் ரெத்தனம் ஆசைப்பட்டாலும் ஒண்ணும் வீணாப் போயிடாது தான். போட்டது எல்லாம் பலனைக் கொடுக்க ஆரம்பிச் சுட்டு மாவும் பலாவும் சப்போட்டாவும் ஒண்ணு மாத்தி ஒண்ணு காச்சி குலுங்காவும் அதுகள பறிச்சி காசு பண்ணுறதிலயும் ரெத்தனம் கெட்டிக்காரிதான். அதுக்காவ அகிடுபகிடு பண்ணி சம்பாத்தியம் செய்ய வேண்டாம்ங்கிறதிலயும் கருக்காத்தான் இருந்தார் கோவிந்தம்புள்ள.

இவ்வளவு இருந்தும் மவன் சரியா படிச்சிக்காமா போயிட்டானேங்கிற கவலையும் ஒரு பக்கம் இல்லாம இல்ல.

அதோடயில்லாம கோவிந்தம்புள்ள, தோட்டம் போட்டநேரத்தில் நெனச்ச நெனப்புக்கு ஏத்தாப்போல மவன் தோட்டத்த அந்திசந்தி சுத்தி வந்தாக்கூட தேவலாம். ஆயாக்காரதுக்கிட்ட தில்லுமுல்லுப் பேசி காசுபணத்த கறந்துகிட்டு மானாவாரியா செலவு பண்ணிக்கிட்டு நிக்கிறத நெனைக்கும்போது இப்புடி ஒரு புள்ள நமக்கு வேணாம்கிற நெனப்பே வந்துட்டு.

பொண்டாட்டி, மவன் மேல உகர வச்சிருக்கும்போது இவரு ஏதாச்சும் ஏறுக்கு மாறா நடந்து அவன் ஒண்ணுக் கடக்க ஒண்ணு செஞ்சிட்டா ஊரு வாயத்தான் மூட முடியுமா? போவட்டும் அது தலையெழுத்து எப்புடி இருக்கோ அதப்படி நடக்கட்டும்ங்கிற வெறுப்போடுதான் மவன கைகழுவிட்டார்.

லம்பாடிப் புள்ளையாத்தான் போய்விட்டான். அதுக்காவ அவனை சும்மா விட்டுட முடியுங்களா? ஒரு கால்கட்டு போட்டுல்லாங்க என்னோட தம்பி மவ வந்தான்னா அவன வசக்கட்டி ஒரு வழிக்கு கொண்டாந்துடுவா இப்புடி தத்தாரியா நிக்கிறவன் எங்காச்சும் போய் பொண்டுவோ சகவாசம் வச்சுக்கிட்டா அப்புறம் வெளியே தலை காட்ட முடியாதுன்னு பொண்டாட்டிச் சொன்னதும் சரின்னு தான் பட்டுச்சி. நாலா பக்கமும் யோசிச்சிப் பாத்துட்டு தன்னோட மச்சான் மவனேயே கட்டி வச்சார்.

ரெத்தினம் சொன்னபடியே மருமவப்புடிக்குள்ள சிக்கிட்டான் சுபாஷு.

என்கிட்ட ஏறுகுத்தி மாவிளக்கு மாவு போட்டாப் போல அவக்கிட்ட முடியுமா?ன்னு மவனையும் மருமவளையும் சேத்து வச்சே சொல்-ருக்கா. தலைச்சான பேரன் பொறந்த கையோட எடச்சனா பேத்தியும் பொறந்துட்டு.

பட்டாளத்தார் பொண்டாட்டி சொல்லுறது நூத்துக்கு நூறு நெசமானாலும் நெசம். மவன் இப்புடி ஒரேடியா திருந்திப்புடுவாஙகிறது அவரால நெனச்சிக்கூடப் பாக்க முடியில. காசு பணத்திலயும் ரொம்ப குறியா போயிட்டான்.



'அத்தாச்சி! ராசாத்தியும் ஒண்ண பத்தாக்கிறதில கைகாரி, ஒரு புள்ளி போட்டுக் கொடுத்துடடா எட்டுச் சித்திரம் போடுறவளாச்சே...ன்னு தம்பி பொண்டாட்டி சொன்னது இன்னிக்கு கண்ணாலேயே பாக்கிறா ரெத்தினம்.

'ஊரச்சுத்திக்கிட்டு நின்ன பட்டாளத்துக்காரர் மவனா இது....ன்னு பாக்கிற சனங்க வாய்பொளந்து நிக்கிறாப் போல மாறிப் போயிட்டான். எல்லாம் பொண்டாட்டி வந்த நேரம். அவ கமுக்காமா போட்ட தலவாணி மந்திரத்தில் அவன் நல்லாவே அவளோட ஒண்டிப் போயிட்டன்.

இப்பெல்லாம் அப்பாருக்குன்னு வேலை ஒண்ணும் வைக்கிறது இல்ல. எல்லாத்தியும் சுபாஷுவே பாத்துக்கிறான். அவரு விடிய கருக்கல்ல எழுந்திரிச்சா தோட்டத்த கோ-க்கிட்டு நிக்கிறது. காக்கா குருவிக அணிலுகளோட கொண்டாட்டத்த பாத்து ரசிச்சிக்கிட்டு நிக்கிறதுதான் பெரும்புடியான பொழுதுபோக்கா ஆயிட்டு.

கோவிந்தம்புள்ள மனுசனா பொறப்பெடுத்ததுக்கு பொறத்த நாட்டோட மண்ண காவந்து பண்ணன்னு பதினைஞ்சி வருஷம் உழைச்சாச்சி. மீதிக்காலத்த குடும்பத்துக்குன்னு உழைச்சி இம்மா பெரிய தோப்ப உண்டாக்கியாச்சி.... மீதம் வாழப்போர காலத்தில் பேரப் புள்ளைகளைத் தூக்கி வெளையாடிக்கிட்டு இருக்கிறதவிட வேற எண்ணாங்கிற பூரிப்புதான் அவருக்கு.

பேரப்புள்ளைங்களும் கண்ணுக்கு உசரமா ஆயிட்டாங்கன்னா அப்புறம் என்ன செய்யிறதுங்கிற ஒருவித கவலையும் தளர்ச்சியும் புடிச்சிக்கிட்டு.

பலாமரத்து ஓரமா கொட்டிக் கெடக்கும் மணல்ல அப்பாடின்னு சாஞ்சி படுத்தார். இன்னிக்குன்னு ஏகமா தவிட்டுக் குருவிக வந்து சேந்திருக்கு. இத்தனை நாளா பார்க்க முடியாத புது தினுசான பறவையோட காக்கா குருவிகளும் குறுக்கு நெடுக்குமா பறந்து ரொம்பத்தான் சத்தம் போட்டுக்கிட்டு இருக்குங்க. அந்த விடிய கருக்கல்ல சிலு சிலுன்னு அடிக்கிற காத்துக்கும் அதுக்கும் மனசுக்குள்ள இதமா

இருந்துச்சி. இப்புடி படுக்குறது.அவருக்கு அலதியான சுகம்தான். இருந்தாலும் அது ரெட்டிப்பா ஆயிட்டு.

பட்டானத்தி-ருந்து ஒரு லீவுக்கு வந்தப்ப இந்த ரெத்தினத்தக் கண்ணாலம் கட்டினது. ஒருத்த முகம் ஒருத்தருக்கு படிஞ்சிப் போவங்காட்டியும் அவசரகாலமுன்னு காரணம் காட்டி ஒரு மாச லீவு கொறைச்சி உடனே வந்து சேர்ந்துட தாபலு வந்ததும் பொறப்பட்டு ஓடுனது. மறுபடி எப்பப் போய் ரெத்தனத்து மூஞ்சியப் பாக்கிறதுன்னு சதா காலமும் கனவு கண்டுக்கிட்டு இருந்தது. அப்புறம் ரெண்டு வருஷம் கழிச்சி மூணு மாச லீவில வந்தது. பொண்டாட்டி முழுவாம இருக்கான்னதும் அவ வேறு கால மாசத்தில் கிட்டக்க இருக்க முடியிலங்கிற கவலையோட திரும்பப் போனது. எல்லாத்தியும் நெனைச்சிப் பாத்துகிட்டு சில்லுசில்லா தெரியுற மானத்தப் பார்த்துக்கிட்டு இருந்தார். சேவ தொறத்திக்கிட்டு வந்த ஒரு பொட்ட அதுக்கிட்ட மசங்காம பறந்து அவரை தாண்டி ஓடுச்சி ச்சே..... ன்னு விரெட்டித் திரும்புனா ரெத்தனம். சுக்குமல்-காப்பியோட நிக்கிறதா, சுள்ளாப்பா எழுந்திட்டாரு.

"பேரப்பயல தூக்கிட்டு வந்தான்னா?"

வர்ற ஆயுத பூஜை அன்னிக்கு கான்வெண்டு ஸ்கூல்ல சேக்க போவுதாம். அதுக்காக இப்பவே மருமவப்பெண்ணு எழுத்துச் சொல்-க் கொடுத்துக்கிட்டு இருக்கு."

"அதுக்கும் ஆவத்து வந்துட்டா? அஞ்சு வயசாவட்டுன்னு சொன்னா என்னா மூணு வயசுக்குள்ளேயே சேர்திருக்கணுமாம். மவந்தான் மருமவளத் திட்டி சொல்-க் கொடுக்கச் சொல்லியிருக்கு" ன்னு லோட்டாவில் கொண்டாந்த தண்ணியக் கொடுத்துட்டு அவர் காலடியில் அவளும் உக்காந்தாள்.

எதையோ சொல் வந்தவள் திணறுவது போல் தெரிஞ்சதும்,

"என்னா தடுமாறுற?"

சொல்லுவோமோ வேண்டாமங்கிற யோசனையோட ''நாலஞ்சி நாளா மவன் வீட்டுல உக்காரல பாத்திங்களா



யாருயாரோ வர்றதும் போறதும் இருக்குங்க. வீ.ஏ.ஓ. கூட நேத்திக்கு வந்து தனியா பேசிட்டுப் போறாரு. புருஷனும் பொண்டாட்டியுமா குசுகுசுன்னு பேசிக்கிறாங்க...'

ரெத்தனம் சொல்லும்போது கோவிந்தம்புள்ள வாய் தொறக்கல, அவரும் பாத்தும் பாக்காது போலதானே இருக்கார்.

"என்னாங்க நான் பாட்டுக்கு...."

''சரிதான் போறியா கெணத்துத் தண்ணிய வெள்ளம் கொண்டுப் போறப்ப பாத்துக்கலாம். இந்தா பாக்கிய நீ குடி"ன்னு ரெத்தனத்துக் கிட்ட லோட்டாவைக் கொடுத்தார்.

திடுதிப்புன்னு வீட்டு வாசல்ல ஒரு ஜீப் வந்து நின்னுச்சி வீ.ஏ.ஓ. சர்வேயரோட நாலுஞ்சி பேர அழைச்சிக்கிட்டு எறங்கினார். சுபாஸு வெளியே வந்து அழைச்சிக்கிட்டு போறான். கோவிந்தம்புள்ள மனசு என்ன ஏதோன்னு அடிச்சிக்கிட்டு கெடக்கு.

"ரெத்தனம்! சுபாஸு ஏதாச்சும் சொன்னான?"

"இல்ல..... ஆனா..." என்று இழுத்தவள், "அவனே நம்மக் கிட்ட வர்றா'னு சொல்-, புள்ளமூஞ்சைப் பாத்துக்கிட்டு எழுந்தாள்.

சர்வயரோட வந்த ஆளுங்க சங்கி-ய பிரிச்சு அளக்க ஆரம்பிச்சுதுங்க. அவரோட மனசில மேலமேல குழப்பம் ஏற்பட்டுச்சி.

மவன் ஏதிர்கொண்டு வர வர என்னாச் சொல்லப் போறானேங்கிற எதிர்பார்ப்பு நெஞ்சுக்குள் சூட்ட பரப்பிட்டு.

"என்னாடா தம்பி!...."

"நல்ல சேதியாதாம்மா.... அதான் அப்பாவையும் உன்மையும் சேத்தே........"

மவனோட பீடிகை அழுத்தமா போவவும் அவரால் அனுமானிக்க முடியவில்லை.

‘‘எதுக்குப்பா வந்திருக்கிறவங்க நம்ம தோட்டத்த அளந்துகிட்டு.......?’’

“அப்பா...... நம்ம வீட்டச் சுத்தி அம்பது குழிய ஒதுக்கிக் கிட்டு மீதத்த லம்பா பத்து லட்ச ரூவா வெலைக்கு வருதுப்பா. அவங்க வாங்கி பிளாட்டுப் போட போறங்களாம். தனியா ஒரு நகராவே உருவாக்கப் போறாங்களாம். அதுக்கு ‘பட்டாளத்தார்’ நகருன்னே பேரு வைக்கப் போறங்களாம். ரொக்கமாக பத்து லட்சத்தோட பத்து மணிக்கெல்லாம் வந்துடுறாங்க. நான் எல்லாம் பேசி முடிச்சிட்டேன். இன்னிக்கே பத்தரம் பண்ணிக் கொடுத்துடுனும்பா....’’

“என்னடா பாவி..... என் கண்ணு முன்னாலேயே பெத்த அப்பாவ வெலை பேசினாப் போல, தோட்டத்த வெலை பேசிக்கிட்டு வந்துக்கே. இது பொன்னு வெளையிற பூமிடா, என்ன ஒரு வார்த்த கேட்டியா?’’

ரெத்தினம் கொதித்துப் போனாள்.

‘‘அம்மா நான் ஒண்ணும் குடிச்சிட்டோ கூத்தியா வீட்டுக்கோ போயிட்டு வந்து வெலை பேசிடல. நாம் பொழுதுக்கும் லோலோன்னு நின்னு பலனை எடுத்து அஞ்சுக்குமா பத்துக்குமா வித்து மாதம் ரெண்டாயிரத்துப் பாாக்க உன்ன இழு என்ன இழுன்னு நிக்க வேண்டியிருக்கு... ரொக்கமா வர்ற பத்து லட்சத்த வாங்கி அப்புடியே அப்பா பேர்லேயே பேங்கிலே போடப் போறேன். அசல்ல குண்டு மணி கொறவு இல்லாம மாசாமாசம் ஒண்ணாம் தேதி பன்னெண்டாயிரம் ரூவா கணக்குக்கு வந்துடும். நான் நல்லா இருக்கனுன்னு நெனைச்சின்னா இத செஞ்சித்தான் ஆவணும்....’’

கோவிந்தம்புள்ளைக்கு ஆத்தரமா ஆத்தரம் இப்ப அதை மவன் கிட்டக்க காட்டத்தான் முடியுமா? அதுவும் சரியான கொக்கிப்டி போட்டு இழுத்துட்டான்.

கொஞ்சம் சமாளிச்சிக்கிட்டு ‘‘எல்லாம் சரிப்பா...’ இந்த மரங்கள் எல்லாம்...?’’



“இது என்னாப்பா கேள்வி?’’

அதனான் சர்வயர்ங்க வந்திருக்காங்க அளந்து பிளாட்டா பிரிச்சி ரோட்டுக்கு அளந்து ஒதுக்கிப்புடுவாங்க. அப்புறம் ரோட்டுல அடிபடுற மரங்கள இப்ப வெட்டி எடுத்துப் புடுவாங்க, அதுக்குப்பின்னால பிளாட்ட வாங்கினவங்க பாடு. இந்த பிளாட்ட வாங்கப் போற வங்க எல்லோரும் புதுசா கலெட்டரு ஆபிஸீல வேலைப் பாக்கிறவங்கதான் பெரும் பெரும் வீடா கட்டிப் புடுவாங்க. நமக்கு நல்ல தானேப்பா. அனாந்திரத்தில வீட்டக் கட்டிக்கிட்டு இருக்கிற நெனப்பே இல்லாம பயமில்லாம இருக்கலாம் பாருங்க. இப்ப நம்ம ஊரு புது மாவட்டமா ஆவாட்டா நம்ம ஆயுசுல இவ்வளவுப் பெரிய ரூவாய கண்ணாலக் கூடப் பாக்க முடியுமா?

தலைமேல காக்கா குருவிக ஆலப் பறந்துக்கிட்டு கத்துச்சுங்க. புதுசா வந்த ஒரு ஒரு பறவை விநோதமா சன்னமான குர-ல் கத்திச்சு மாமரத்தி-ருந்து ஒரு நொண்டியான காக்கா குஞ்சு பொத்துண்ணு விழுந்தது. அத தூக்க வந்த ஒரு காக்கா பயந்து கிட்ட வர்றதும் போறதுமா..

விடியகருக்கல்ல எழுந்திரிக்கும்போது இன்னிய பொழுதுல இத்தன வருஷமா புள்ளைகள வளர்க்கிறாப் போல ஊட்டி வளத்து ஆண்டு அனுபவிச்ச இந்தத் தோப்பி-ருந்து அன்னியப்பட்டுப் போப்போறோம்ன்னு நெனச்சுக்கூடப் பாக்கில, மனசுக்குள்ள் திக்குன்னு இருந்துச்சி, தைரியப்படுத்திகிட்டாரு. பொண்டாட்டி ரெத்தினத்துக்கும் ஆறுதல் சொல்– தேத்தி விட்டார்.

விடிஞ்ச ஏழெட்டு நாழிக்குள்ள பத்தரம் பண்ணிக் கொடுத்து வல்லுசா பத்து லட்சத்த பேங்கில போட்டுட்டு காருலே வீட்டுக்கு வரும்போது, ஏகமா இருந்த தோப்ப மூணு பட்டமா பிரிச்சிருந்தாங்க. ஒன்னாம் தெரு ரெண்டாம் தெருன்னு அட்டையில் எழுதி! வச்சிட்டாங்க. ரோட்டுக்கு ஒதுக்கின எடத்திலருந்த மரங்கள் பத்து ஆளுங்க வெட்டிக் கிட்டு இருந்தாங்க.

மரம்கொள்ளாத பீஞ்சா இருந்த பால மரத்த வெட்டி விட்டு வரிகயித்தப் போட்டு இழுத்துத் தள்ளும்போது காருலேருந்து எறங்கினாரு கோவிந்தம்புள்ள,,, அப்புடியே துடிச்சிப் போய் ஓடியாரவும்.

கையெழுத்துப் போட்ட மை காயங்காட்டியும் பலா மரத்து வெட்டிச் சாச்சிட்டிங்களாடா பாவியலா'ன்னு கத்திக் கிட்டு ஓடும்போது இத்தனை நாளா அவர்படுத்துப் பொறண்ட அந்த மணல் மேல தஞ்சாவூர் கொய்யா மரத்தப் போட்டு அமுக்கிக்கிட்டு பொதேர்ன்னு விழுந்தது.

கோவிந்தம்புள்ளைக்கு பிரமை தட்டி அப்பிடியே போய் ஒரு தென்ன மரத்தைக் கட்டிப்புடிச்சி சாஞ்சார்.

“ப்பா.... ப்பா'ன்னு அவரோட மவன் ஓடிப்போய் தாங்கிப் புடிச்சி உக்கார வைக்கும்போது வாயி-ருந்து ‘வாநீ' ஊத்த சரிஞ்சிட்டாரு. தான் ஆடாட்டாலும் சதை ஆடும்பாங்களே, அந்த நாழியில் சுபாஷ் அப்புடியே ஆடித்தான் போயிட்டான்.

சுபாஷ் ஆஸ்பத்திரிக்கு போகும்போது நாம தான் அப்பாவுக்கு எமனா வந்துட்டோம்னு ஊரு உலகம் சொல்லுமேங்கிற கவலைதான்.

“சாரி மிஸ்டர் சுபாஷ் உங்கள் அப்பாவுக்கு மூளையில உள்ள உரு நரம்பு தெறிச்சிருக்கு. இன்னுமே எதுவும் செய்ய முடியாது. வீட்டுல கொண்டுபோய் வச்சிக்கிங்க. உங்க மனசாந்திக்காவத்தான் நான் இப்ப செய்யற மருத்துவம், இப்புடியே இருந்து மூச்சி அடங்கிப் போயிடும். அது எப்பன்னு சரியாச் சொல்ல முடியாது....” டாக்டர் கைவிரிச்சிட்டார்.

வீடு வந்த நாள்லருந்து ரெத்தினம் மட்டும் சோறு தண்ணியில்லாம கெடந்து அழுதுகொண்டிருந்தாள்.

‘நீ இப்புடியே அன்னம் தண்ணியில்லாம அழுதுக்கிட்டு கெடந்தா அவருக்கு நல்லாவா இருந்துட போவுது?ன்னு வர்ற சொல்லுக்காவே சோத்த கரைச்சிக் கொடுக்கச் சொல்–குடிச்சிட்டுதான் உயிர புடுச்சிக்கிட்டு புருஷன் கிட்டக்கவே கெடக்கறா.



“இந்தா பாரு ரெத்தனம்! இந்த எடத்திலதான் என்னோட உயிரு போவணும் இங்க வச்சிதான் என்ன குளிப்பாட்டி தெக்க அனுப்பி வைக்கணும்....' அவர் சொல்–க் கொண்டிருந்ததெல்லாம் நினைவுக்கு வரும்போது மென்னை அடைத்தது.

அவரு ஆசைப்பட்டத செய்யமுடியாத பாவியா ஆயிட்டேனே. அவரு கண்ணுக்கு முன்னாலேயே அந்த மண்ணுல அடிஎடுத்து வைக்க முடியாம போயிட்டே....ன்னு சொல்– ஒத்தக் குர–ல் ஒப்பாரி வைத்து அழுது கொண்டிருந்தார்.

இப்புடியே ஒரு நாள் ரெண்டு நாள் இல்ல மூணு மாசமா கோமாவுல கெடக்கும் பட்டாளத்தாருக்குகக சாவு எப்ப எப்பன்னுதான்.....

உறவுசனங்க வந்து பாத்துட்டு அதஅது பங்குக்கு ரத்தனத்தையும் சுபாஷையும் கண்டுக்கிட்டுங்க

பட்டாளத்தாரோட கூடப் பொறக்கலண்ணாலும் ‘தம்பி ... தம்பி' ன்னு சுத்திக்கிட்டு இருந்த ஆலங்குடி அக்காகாரது தான் ரெத்தனத்துக்கு பக்கத் தொணையா இருக்கு.

அப்ப அப்ப வந்து தலைய காட்டிக்கிட்டு இருக்கும் ரெத்தனத்தோட தம்பிக்காரன் எல்லாரோட மொகத்தையும் பாத்துக்கிட்டு, “அத்தானுக்கு மண்ணாசதான் கெடந்து உசுர இழுத்துப்புடுச்சிக்கிட்டு கெடக்கு... என்ன அத்தாச்சி னெனக்கிறீங்க?”ன்னு மனசில ‘மண்'ண வச்சிக்கிட்டு தான் கேட்டார்.

“...இப்புடி கெடக்கிறவங்களுக்கு அவங்க மனசில இருக்கிறத கரைச்சி ஊத்தறதுதான் அண்ணனுக்கு”ன்னு சொல்லும் போது மென்னிய அடைத்தது.

“அத நானே...” ன்னுக்கிட்டு எழுந்திருச்ச பட்டாளத்தாரோ மச்சினாரு தோட்டத்தோட கோடிக்குப்போய் புடிபுடி மண்ணா எடுத்தாந்து கலந்து ஒரு புடிய கரைச்சி...

தம்பிக்காரனே முன்னுக்கு நின்னு அதைச் செய்யும்போது.. ‘தம்பி’ ன்னு புருஷன் மேல விழுந்து விழுந்து அழுதாள் ரத்தனம்.

பட்டாளக்காரர் வாயில மண்ணுகரைசல் எறங்கின ஒரு நாழிக்கெல்லாம் ஒரு விக்கலோடு மூச்சி நின்றிருந்தது.

**பயிற்சி**

கீழ்க்காணும் தலைப்புகளில் நாற்பத்தைந்து வரிகளுக்கு மிகாமல் கட்டுரை எழுதுக.

1. பட்டாளத்தார் தோட்டம் வளர்த்த விதம்.
2. மண்ணாசை – பெயர்ப் பொருத்தத்தை ஆய்க.
3. பட்டாளத்தார் மகனின் பண்புகள்.